


















# வேதாகம கையேடு

**(திருமறையில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள், முக்கிய நிகழ்வுகள், அநேக அரிய தகவல்கள் மற்றும் நிலப்படங்களை உள்ளடக்கிய நூல்)**

*A Handbook to Understand the Bible, Its People, Land, Maps & Important Events*

**Divine Words**

# வேதாகம கையேடு

**(திருமறையில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள்,
முக்கிய நிகழ்வுகள், அநேக அரிய தகவல்கள் மற்றும்
நிலப்படங்களை உள்ளடக்கிய நூல்)**

*A Handbook to Understand the Bible,
Its People, Land, Maps & Important Events*

*Divine Words*

வேதாகம கையேடு

Study Material Copyright © 2015 Divine Words

**First Edition 2015**

Printed in India

Copyright Notice
Written permission must be obtained from Divine Words prior to the reproduction of any part of the studymaterial in any form or by any means, electronic or mechanical including photocopying, recording, or any information storage and retrieval systems.

Written and Compiled by: Mrs. Sucharita George, B.Sc., B.Ed.
Edited by : Er. P. George Jepamony, B.E., F.I.V.

Copies Available at: Galilee Academy
No.13, Thandavarayan Street,
Behind Canara Bank
Santhome, Chennai - 600 004.
Mobile: 9840053062

Published by:

*Divine Words*
P.O. Box 620
Mylapore, Chennai - 600 004, India
E-mail: divinewords2012@gmail.com

இந்த கையேடு புத்தகத்தை எழுத வழிகாட்டிய

**தேவ ஆவியானவர்க்கு உளம் நிறைந்த நன்றி!**

## Author's Other Books

1. வேதாகமம் என் இனிய நண்பன்
2. Important References on the **Biblical Happenings** (Including Important Maps)
3. Bible My Best Friend
4. வேதாகமம் என் இனிய நண்பன் Part II (புதிய ஏற்பாடு)

# ‘வேதாகம கையேடு’ — ஓர் அறிமுகம்

அன்புருவான தேவன் பூமியில் மனுடவதாரம் எடுத்து, நம்முடன் உலவ தம்மைத் தாழ்த்தி ஒப்புக்கொடுக்க காரணம் தான் என்ன? அது ஒரு புரியாத புதிர் தானோ?

தம்மை நேசித்து, தம்முடன் இணைந்து வாழ்ந்து, பூலோகத்தை பரலோகமாக மாற்ற வேண்டிய மனிதன் செய்த தவறால், பூமி உருக்குலைந்து அதன் மகிழ்ச்சியெல்லாம் சிதைந்து போனபோது தேவன் அதை துக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார். வேதத்தின் ஆதியாகம நூலில் நாம் வாசிக்கும் நிகழ்ச்சிகளை ஒரு தடவை நினைவில் கொண்டு வருவோம். சீரழிந்துபோன பூமியின் குடிகள் பெருவெள்ளத்தால் அழிக்கப்பட்ட பின்பும் கூட, புதிய தலைமுறையாகிய மனிதர்களில் மீண்டும் பாவம் தலை தூக்கியது. அதைக்கண்ட தேவன் ஒரு பரிசுத்த ஜாதியை உருவாக்கி, அவர்களுக்கு ஒரு தனி நாட்டையும் அளிக்க சித்தம் கொண்டார். ஆபிராமை அவர் தேர்ந்தெடுத்து, அவன் மூலமாக அத்திட்டத்தை அவர் நிறைவேற்றினார். ஆனால் மீண்டும் மீண்டும் அவர்கள் பாவம் செய்து தங்களைத் தாங்களே சீரழித்தபோது, பிற இனத்தவர்களால் தோற்கடிக்கப்பட்டு, இங்குமங்குமாக இழுத்துச்செல்லப்பட்டு அல்லலுற்றார்கள். முடிவில் அவர்கள் கைவிடப்பட்டனரா, இல்லை, கருணைக் கடலாகிய தேவனுடைய அன்பின் அரவணைப்பிற்குள் மீண்டும் வந்துசேர்ந்தார்களா? அதற்கு விடை பகரும் நிகழ்வுகளின் இனிய தொகுப்பு தான் இந்த கையேடு. (திருமறையில் கூறப்பட்டுள்ள சில முக்கிய நிகழ்வுகள் இதில் சுருக்கமாக விளக்கப்பட்டு தொகுத்தளிக்கப்பட்டுள்ளன).

**பரிசுத்த வேதாகமம்** ஒரு சிறந்த ஆன்மீக வழிகாட்டியும் தேவனுடைய வார்த்தைகளால் நிறைந்ததுமான புத்தகம் என்பதுடன், உலகில் நடந்த பல்வேறு முக்கிய நிகழ்வுகளை தன்னுள்ளே அடக்கிய ஓர் சிறந்த வரலாற்று நூலும் ஆகும். பரிசுத்த வேதாகமத்தின் காலகணிப்புகள், பொதுவாக அந்த ஆண்டுகளில் உலக அரங்கில் வாழ்ந்த அரசர்களின் ஆட்சிகாலத்தை கணக்கில் கொண்டு கணிக்கப்பட்டுள்ளவையே.

ஆதாம் முதல் ஆபிரகாம் வரையுள்ள காலம் 1948 வருடங்கள் என்று எபிரேய மயோரெடிக் (MT) புத்தகம் கூறுகிறது. சமாரியா பஞ்சாங்கமும் (SAM), பெந்துக் (PENT) புத்தகமும் 2249 வருடங்கள் என்று கணிக்கின்றன. செப்துவகிந்தா (LXX) கிரேக்க மொழி பெயர்ப்பு 3314 வருடங்கள் என்று மதிப்பிடுகிறது.

பழைய ஏற்பாட்டின் கால அளவுகளை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களுடன் ஒப்பிட்டு கூறுகிறவர்கள், ஆபிரகாமின் காலம் சுமார் கி.மு. 1960 - 1715; யோசேப்பின் காலம் சுமார் கி.மு. 1745 - 1635; எபிரேயர் எகிப்திலிருந்து வெளியேறிய வருடம் கி.மு. 1290 என்று கூறுகின்றனர்.

பரிசுத்த வேதாகமத்தின் முதல் புத்தகமான ஆதியாகம புத்தகத்தை மோசே எழுதியதாக நம்பப்படுகிறது. இதில், தேவன் உலகத்தையும் மனிதனையும் உருவாக்கினதையும், அதன்பின்பு நிகழ்ந்த நிகழ்வுகளையும் குறித்து எழுதப்பட்டுள்ளது. தேவன், தாம் படைத்த பூமியில், தமது சாயலாகவே, (தம்மைப் போல பரிசுத்தமான ஒரு சிருஷ்டியாக) மனிதனைப் படைத்தார். அவனிடம் அவர் மிகுந்த அன்பும் பாசமும் கொண்டிருந்தார். பூமியிலுள்ள அனைத்தையும் அவனது நன்மைக்காகவே படைத்தார். ஆனால், ஒரு நாள் அவன் அவரது எதிர்பார்ப்பில் மண்ணைத் தூவி விட்டு, பாவம் செய்து, பிசாசிற்கு தன்னை விற்றுப் போட்டான். அவ்வாறு வேதனையுடன் அவன் பரிதாபமாக நின்று கொண்டிருந்தபோதும் கூட, அவருக்கு அவனிடம் இருந்த அன்பு மாறவே இல்லை. அவனைத் திரும்பவும் மீட்டு, தன்னிடம் சேர்த்துக்கொள்ள அவர் மேற்கொண்ட முயற்சிகளையும், புரிந்த தியாகத்தையும், அவற்றின் விளைவுகளையும் வேதத்தின் பக்கங்களில் நாம் காண்கிறோம்.

ஒரே குலமாக வாழ்ந்த நமது முன்னோர்கள் தனித்தனி வம்சங்களாகவும், தேசங்களாகவும் பிரிக்கப்பட்டதையும், நகரங்கள் கட்டப்பட்டதையும், விதவிதமான நாகரீகங்கள் தோன்றி மறைந்ததையும், இவற்றையெல்லாம் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த தேவன் மனிதனை நடத்திவந்த ஆச்சரியமான வரலாற்றையும், நாம் வேதத்தின் மூலம் வாசித்து அறிந்து கொள்கிறோம்.

மனிதன் தேவனை விட்டு விலகிச் சென்றபோதும் கூட, அவர் அவன் மீது கரிசனையும், பாசமும் கொண்டவராகவே இருந்தார். மனிதனின் அன்புக்காக ஏங்குகின்ற அவருக்கு தம்மை நேசிக்க, தம்மைப்போல பரிசுத்தமான ஒரு கூட்டம் மக்கள் தேவைப்பட்டது. ஆகவே ஆபிரகாம் என்கிற நீதிமானை அவர் தேர்ந்தெடுத்து, அவரது பேரனான யாக்கோபின் சந்ததியை ஆசீர்வதித்தார். இவர்கள் தான் இஸ்ரவேலர். தமது மைந்தனாகிய இயேசுகிறிஸ்துவை பூமியில் அனுப்பி, தாம் தெரிந்து கொண்ட மக்களில் ஒருவராக வாழச் செய்தார். அவரது ஊழியத்தால் மீட்கப்பட்ட நம்மையும் அவர் தமது 'பரிசுத்த ஜாதியின்' மக்களாக அங்கீகரித்துள்ளர். ஆகவே, **தேவஜனமாகிய இஸ்ரவேலரின் வாழ்க்கை வரலாற்று பின்னணியில், வேதத்தை ஆராய இந்த 'வேதாகமக் கையேடு' அனைவருக்கும் உதவும்.** இயேசு கிறிஸ்து இப்பூமியில் வாழ்ந்தபோது, அவர் நடந்து ஊழியம் புரிந்த ஊர்கள், மற்றும் அநேக வேதாகம நிகழ்வுகள் நடைபெற்ற இடங்கள் ஆகியவற்றைக் குறித்த விரிவான தகவல்கள் இந்நூல் மூலம் அனைவருக்கும் கிடைக்க பரிசுத்த ஆவியானவர் அருள் புரியட்டும்!

**சுசரிதா ஜார்ஜ்**

*Divine Words*

# INDEX
# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | பெருவெள்ளமும் அதன் விளைவுகளும் | ... | 11 |
| 2. | கானானை நோக்கி ஆபிரகாமின் பயணம் | ... | 11 |
| 3. | தேவன் தமது ஜனங்களுக்கு வாக்களித்த பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசமும் அதன் அண்டை நாடுகளும் | ... | 12 |
| 4. | யாக்கோபும், இஸ்ரவேல் ஜாதியும் | ... | 16 |
| 5. | எகிப்திலிருந்து கானானை நோக்கி இஸ்ரவேலரின் பயணம் | ... | 17 |
| 6. | இஸ்ரவேலை ஆண்ட நியாயாதிபதிகள் | ... | 28 |
| 7. | சாமுவேல் - இஸ்ரவேலின் கடைசி நியாயாதிபதி | ... | 29 |
| 8. | இஸ்ரவேலை ஆண்ட அரசர்கள் | ... | 29 |
| 9. | தாவீதின் நகரமாகிய எருசலேம் | ... | 42 |
| 10. | இரண்டாக உடைக்கப்பட்ட இஸ்ரவேல் நாடு | ... | 43 |
| 11. | இஸ்ரவேலின் வீழ்ச்சி | ... | 52 |
| 12. | யூதாவின் மீது செனகெரிபின் படையெடுப்பு | ... | 53 |
| 13. | பாபிலோனியப் பேரரசு | ... | 53 |
| 14. | இஸ்ரவேல் நாடும், கி.மு. ஆறாவது நூற்றாண்டின் வல்லரசுகளும் | ... | 54 |
| 15. | புதிய, பழைய ஏற்பாடுகளின் இடைப்பட்ட காலம் | ... | 56 |
| 16. | யூதர்களின் கலாச்சாரத்தில் கிரேக்க, மற்றும் பிற நாகரீகங்களின் தாக்கம் | ... | 61 |
| 17. | எபிரெயர்களின் கலாச்சாரத்திலும், வரலாற்றிலும் பிற நாகரீகங்களின் தாக்கங்களின் மூலம் ஏற்பட்ட மாற்றங்கள் | ... | 65 |
| 18. | யூதர்களுக்கு பலஸ்தீனா தேசம் எப்படி கிடைத்தது? (இன்றைய இஸ்ரவேல் நாட்டின் வரலாறு) | ... | 69 |
| 19. | பழைய ஏற்பாட்டுக் காலத்தின் இராஜாக்கள், தலைவர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் - கால அட்டவணைப்படி | ... | 79 |

| | | | |
|---|---|---|---|
| 20. | பழைய ஏற்பாட்டின் புத்தகங்கள் - கால அட்டவணைப்படி | ... | 81 |
| 21. | புதிய ஏற்பாட்டின் புத்தகங்கள் - கால அட்டவணைப்படி | ... | 85 |
| 22. | இயேசுவின் வாழ்க்கை, முதல் கிறிஸ்தவசபையின் தோற்றம், அப்போஸ்தலர்களின் ஊழியங்கள், உலகெங்கும் கிறிஸ்தவம் பரவிய விதம்... (ஒரு தொகுப்பு) | ... | 88 |
| 23. | வேதாகமம், மற்றும் உலக நிகழ்ச்சிகளின் தொகுப்பு | ... | 100 |
| 24. | வேதாகம காலத்தைய அளவுகள் | ... | 105 |
| 25. | திருமறை நாட்களில் பயன்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவுகள் | ... | 108 |
| 26. | எபிரெயர்களின் (யூதர்களின்) கலாச்சாரமும், பழக்கவழக்கங்களும் | ... | 109 |
| 27. | பழைய / புதிய ஏற்பாட்டு காலத்தில் வேதத்தில் காணப்படும் நாடுகளும், ஊர்களும் | ... | 135 |
| | பாபிலோனியா | ... | 135 |
| | எகிப்து | ... | 136 |
| | சீனாய் பாலைவனம் | ... | 137 |
| | சீனாய் மலை | ... | 137 |
| | கத்தரீனா மலை | ... | 137 |
| | ஒரேப் மலை | ... | 138 |
| | கிரேக்கம் | ... | 138 |
| | ரோமப் பேரரசு | ... | 138 |
| | கானான் | ... | 139 |
| | யூதேயா | ... | 139 |
| | எபிரோன் | ... | 140 |
| | பெயர்சேபா | ... | 140 |
| | யோப்பா | ... | 140 |
| | சாரோனின் சமபூமி | ... | 141 |
| | செசரியா | ... | 141 |
| | நாசரேத்து | ... | 141 |

| | | |
|---|---|---|
| அயின் கெரிம் | ... | 141 |
| பெத்லெகேம் | ... | 142 |
| எருசலேம் | ... | 142 |
| ஓமரின் ஆலயம் | ... | 143 |
| எல் அக்ஸாபள்ளிவாசல் | ... | 143 |
| தங்க வாசல் (பொன் வாயில்) | ... | 143 |
| புலம்பல் மதில் | ... | 143 |
| பெத்சாய்தா | ... | 144 |
| கீதரோன் பள்ளத்தாக்கு | ... | 144 |
| ஒலிவ மலை | ... | 144 |
| கெத்சமனே | ... | 144 |
| கல்வாரி | ... | 145 |
| கல்லறையின் தோட்டம் | ... | 145 |
| பரமேறிய குன்று | ... | 145 |
| மகதலா | ... | 145 |
| எம்மாவு | ... | 146 |
| பெத்தானியா | ... | 146 |
| கலிலேயாக் கடல் | ... | 146 |
| யோர்தான் நதி | ... | 146 |
| சவக்கடல் | ... | 147 |
| கப்பர்நகூம் | ... | 147 |
| கானா | ... | 148 |
| சீயோன் மலை | ... | 148 |
| கர்மேல் மலை | ... | 148 |
| தாபோர் மலை | ... | 149 |
| நெபோ மலை | ... | 149 |
| எர்மோன் மலை | ... | 149 |
| கெரிசிம் மலை | ... | 149 |
| எரிகோ | ... | 150 |
| சீகார் | ... | 150 |

| | | | |
|---|---|---|---|
| | மெகிதோ | ... | 150 |
| | தீரு | ... | 150 |
| | சீதோன் | ... | 151 |
| | தர்சு | ... | 151 |
| | அந்தியோக்கியா | ... | 151 |
| | கலாத்தியா | ... | 152 |
| | எபேசு | ... | 152 |
| | கொலோசை | ... | 152 |
| | கொரிந்து | ... | 152 |
| | பிலிப்பி | ... | 153 |
| 28. | தேவ மைந்தனாம் இயேசு கிறிஸ்து... அற்புத நாட்கள் | ... | 154 |
| 29. | கும்ரான் சுருள்கள் | ... | 172 |
| 30. | ஏழு ஆசியசபைகள் | ... | 172 |
| 31. | ஆதிசபையின் தொடக்க பயணங்கள் | ... | 173 |
| 32. | இஸ்ரவேல் அரசு.... மாற்றங்கள் | ... | 185 |
| 33. | அரேபிய, இஸ்ரவேலிய வம்ச வரலாறு | ... | 187 |

# ஆதி வம்சத்தினர் வாழ்ந்த பகுதிகள்




யாப்பேத்தின் வம்சத்தினர் (ஆதி.10:2–5) : யாவான், கோமர், தொகர்மா, அஸ்கினாஸ், மாதாய், கித்தீம்.
காமின் வம்சத்தினர் (ஆதி.10:6–20) : பூத், மிஸ்ராயீம், கூஷ், பெலிஸ்தியா, கானான், எமோரியர், ஏத்தியர்.
சேமின் வம்சத்தினர் (ஆதி.10:21–31) : லூத், ஆராம், அசூர், ஏலாம், அர்பக்சாத், யோக்தான்.

# தேசங்களின் அட்டவணை



# 1. பெருவெள்ளமும் அதன் விளைவுகளும்

ஆதியாகம நூலின் 6 முதல் 8 அதிகாரங்கள் வரையிலும் உள்ள பகுதியில், உலகம் முழுவதையும் பாதித்த **பெருவெள்ளத்**தைக் (Great Flood) குறித்தும், தேவன் அதினின்று மனிதகுலத்தையும், மிருகங்களையும் (பறவைகள் உட்பட) **நோவா** என்கிற ஒரே மனிதன் மூலமாகக் காப்பாற்றிய விதத்தையும் குறித்து விரிவாக விவரிக்கப் பட்டுள்ளது. மிகப் பிரம்மாண்டமான ஒரு பேழையை (Noah's Ark) கொப்பேர் மரத்தால் செய்யவும், அதனுள் வெள்ளம் புகாமல் இருக்கத் தேவையான முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளைச் செய்யவும் தேவன் அவருக்குக் கட்டளையிட்டார். அப்பேழையை அவர் செய்து முடித்தபோது அனைத்து ஜாதியான சுத்தமான மிருகங்களிலும் பறவைகளிலுமிருந்து ஏழு ஜோடிகளும், அசுத்தமான மிருகங்களிலும் பறவைகளிலுமிருந்து ஒவ்வொரு ஜோடியும் அதனுள் வந்து அடைக்கலமாயின. (ஆதி. 7:1-5) (பெருவெள்ளம் மூலம் பூமி அழிக்கப்பட்ட பின்பு பேழையிலிருந்து வெளியே வந்த நோவாவின் குடும்பத்தினருக்கு உணவுக்காகவும், கர்த்தருக்கு நன்றிப் பலி செலுத்துவதற்காகவும் சுத்தமான மிருகங்கள் அதிகமாகத் தேவைப்பட்டன). நாற்பது நாட்களின் இடைவிடாத மழைக்குப்பின், அப்பேழை ஆசியா மைனரிலுள்ள (துருக்கி) **அரராத்மலையில்** தங்கி நின்றது. 150 நாட்களுக்குப்பின் மனிதர்கள், மிருகங்கள், பறவைகள் உட்பட அனைவரும் அப்பேழையினின்று வெளியேறினார்கள். நோவா ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதில் சுத்தமான மிருகங்களைப் பலி செலுத்தினான். அப்போது, **தேவன் மனுக்குலத்திற்கு தமது வாக்குதத்தத்தை** அளித்தார் — **'வெள்ளத்தால் பூமி இனிமேல் அழிக்கப்படுவதில்லை'** (ஆதி. 8:15-16) என்பதே அது.

# 2. கானானை நோக்கி ஆபிராமின் பயணம்

பெருவெள்ளத்தின் இறுதியில் தேவன் மனுக்குலத்திற்கு ஒரு வாக்குத்தத்தம் அளித்தது போலவே, ஆபிராம் எனப் பெயருடைய ஒரு மாமனிதருக்கு தேவன் ஒரு வாக்குறுதியை அளித்தார். அவ்வாக்குறுதியின் நிறைவேறுதலில், உலகை மீட்க மனித உருவெடுத்து இப்பூமியில் பிறந்து மனித குலத்தை இரட்சிப்புக்குள் கொண்டுவந்த **மேசியா** என அழைக்கப்பட்ட **இயேசு**வின் வருகையும் அடங்கும். ஆபிராமைத் தேவன் அழைத்து, அவன் மூலமாக ஒரு ஜாதியை உருவாக்கப்போகிறதாக அவனுக்கு வாக்களித்தபோது, **தேவன், தமக்காகத் தெரிந்துகொண்ட ஒரு பரிசுத்த ஜனத்தின் வரலாறு ஆரம்பமாயிற்று.** ஆபிராம் என்கிற ஆபிரகாம் எபிரெயர்களின் (யூதர்கள்) முற்பிதா ஆவார். நோவாவின் மகனான **சேமின்** வம்சாவளியில் வந்த **தேராகு** என்பவரின் மகன் தான் **ஆபிராம்.** சுமேரியர்கள் வாழ்ந்திருந்த **கல்தேயா** (Chaldea) நாட்டிலுள்ள **'ஊர்'** என்னும் பட்டணத்தில் ஆபிராம் பிறந்தார். ஊர், சுமேரியா நாட்டின் மிகப்பிரபலமான

பட்டணமாகத் திகழ்ந்தது. கிட்டத்தட்ட கி.மு. 2092-ம் ஆண்டில், தேராகு அவ்விடத்திலிருந்து இடம்பெயர்ந்து, தனது குடும்பத்தினருடன் ஆரானுக்குப் புறப்பட்டுச் சென்றான். அவர்கள் அங்கு தங்கியிருந்தபோது, தேராகு மரித்துப் போனான். பின்பு கர்த்தர் ஆபிராமிடம், தாம் அவனை ஒரு பெரிய ஜாதிக்கு தகப்பனாக்கப் போகிறதைக் கூறி, அவனை அங்கிருந்து புறப்பட்டு கானான் தேசத்திற்குச் செல்லக் கட்டளையிட்டார். ஆபிராம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து கானானுக்குச் சென்றான்.

## 3. தேவன் தமது ஜனங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணிய பாலும் தேனும் ஒடுகிற தேசமும், அதன் அண்டை நாடுகளும்

பரிசுத்த வேதாகமகத்தின் நிகழ்வுகளின் மூலம் தேவனின் அன்பைப் புரிந்துகொள்ள வேண்டுமெனில் நாம் அந்நிகழ்ச்சிகள் நடந்த நாட்டின் நிலவியலைக்குறித்த அறிவுடையவர்களாகவும் இருக்க வேண்டும். தேவனுடன் தொடர்புகொண்டு, அவரது பண்புகளைப் புரிந்து அவர் விருப்பப்படி வாழ, தேவ ஜனங்களை அவர் பலவிதமான சூழ்நிலைகளினூடே எவ்வாறெல்லாம் நடத்திச் சென்றார் என்பதைத் துல்லியமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் அந்நாட்டின் நிலவியல் மற்றும் வரலாறு குறித்த சரியான தகவல்களை நாம் அறிந்து கொள்ளவேண்டும். வேதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ள அநேக முக்கிய நிகழ்ச்சிகள் இன்றைய இஸ்ரேல் நாட்டிலும், மேற்கு கரையிலும், தற்போதைய பலஸ்தீனா நாட்டின் எல்கைகளுக்குள்ளும் நடைபெற்றவைகளே. வேறு சில நிகழ்வுகள் இன்றைய இஸ்ரேல் நாட்டின் எல்லையைக் கடந்த நாடுகளான எகிப்து (Egypt), மெசப்பொத்தேமியா (Iraq - Mesopotamia), பெர்சியா (Iran), ஏதோம் (Edom), மோவாப் (Maob), அம்மோன் (Ammon) — இவை தற்போதுள்ள ஜோர்டன் (Jordon) நாட்டிலுள்ள இடங்கள் — பினீஷியா (Phoenicia — Lebanon), ஆராம் (Aram - Syria), கலாத்தியா (Galatia), பிரிஜியா (Phrygia), லிதியா (Lydia) மற்றும் மீசியா (Mysia - Parts of Turkey), மக்கதோனியா, அகேயா (Macedonia and Achaia - Greece), சீப்புரு (Cyprus), கிரேக்க நாடு (Greece) மற்றும் இத்தாலி (Italy) ஆகிய நாடுகளில் நடைபெற்றவைகளுமாகும். இவற்றைத் தவிர வட ஆப்பிரிக்கா, லிபியா (Libya) மற்றும் சிரேனே (Cyrene), அரேபிய தீபகற்பம் அல்லது வட ஆப்பரிக்கா (குஷ், ஷீபா - Cush and Sheba) ஆகிய நாடுகளும் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# ஆபிரகாமின் பயணங்கள்



# எகிப்தை நோக்கி ஆபிரகாமின் பயணம்



# திருமறை நாடுகள்


கருங்கடல்
மேட்டு நிலங்கள்
சிமிர்னா
எபேசு
சின்ன ஆசியா
ஏத்தியர்
காஸ்பியன் கடல்
தைகிரிஸ் நதி
காரான்
நினிவே
அசீரியா
மெசொப்பொத்தாமியா
சீப்புரு
மத்தியதரைக் கடல்
அராம
சீரியா
தமஸ்கு
கலிலேயாக் கடல்
அம்மோன்
சமாரியா
எருசலேம்
உப்புக்கடல்
மோவாப்
கோசேன்
மேதியா
பாபிலோன்
பாபிலோனியா
அரேபியப் பாலைவனம்
மெம்பிஸ்
ஏதோம்
கல்தேயா
ஊர்
சுமர்
பாரசீகம்
சீனாய்
எசியோன் - கேபர்
எகிப்து
மிதியான்
திருமறை நாடுகள்
= செழும் பிறை பகுதி
பாரசீக வளைகுடா
செங்கடல்
கிலோமீட்டர்
0
200
400
600
800
ஆப்பிரிக்கா

# 4. யாக்கோபும், இஸ்ரவேல் வம்சமும்.

**ஆபிரகாமின்** மனைவி சாராளுக்கு ஈசாக்கு பிறந்தபோது, ஆபிரகாமுக்கு நூறுவயதாகியிருந்தது. பின்பு ஈசாக்கின் மனைவி ரெபேக்காளுக்கு இரட்டைப் பிள்ளைகளான **ஏசாவும், யாக்கோபும்** பிறந்தார்கள். அவர்களில் இளையவனான யாக்கோபுக்கு பன்னிரண்டு மகன்கள் பிறந்தார்கள். **ரூபன், சிமியோன், லேவி, யூதா, தாண், நப்தலி, காத், ஆசேர், இசக்கார், செபுலோன், யோசேப்பு, பென்யமீன்** ஆகிய அவர்கள், பன்னிரண்டு இஸ்ரவேல் கோத்திரங்களின் தலைவர்களானார்கள்.

ஆதியாகம நூலின் 37 - 50 வரைக்குமுள்ள அதிகாரங்களில், **யோசேப்பின்** வாழ்க்கை வரலாற்றை நாம் படிக்கிறோம். அதன்மூலம் கி.மு. 19-ம் நூற்றாண்டின் **எகிப்திய வரலாற்றையும்** நாம் அறிந்துகொள்ள முடிகிறது. யாக்கோபின் அன்புக்குரிய மகனாகிய யோசேப்பை, அவனது மூத்த சகோதரர்கள் பொறாமையின் காரணமாக இஸ்மவேலருக்கு அடிமையாக விற்று விட்டார்கள். யோசேப்பு, அடிமையாக விற்கப்பட்டு எகிப்துக்கு கொண்டுபோகப்பட்டபோது, தேவன் அவனுடன் இருந்தபடியால், பிற்காலத்தில் எகிப்திய அரசனுக்கு நிகரான அதிகாரமுடைய ஒரு தலைவனாக அவன் உயர்த்தப்பட்டான். கி.மு. 1875-ல் அவன் தனது குடும்பத்தினரை எகிப்திற்கு கூட்டிக்கொண்டு வந்து, எகிப்தின் செழிப்பான பகுதியான **கோசேன் நாட்டில்** குடியமர்த்தி பாதுகாத்தான். இவ்வாறு எகிப்திற்குச் சென்ற யாக்கோபின் சந்ததியாகிய இஸ்ரவேலர், **430 வருடங்கள்** அங்கு வாழ்ந்தார்கள்.

**ஹிஸ்கோஸ் அரச பரம்பரை** (கி.மு. 1875 - 1850) எகிப்தை ஆண்ட காலத்தில் இஸ்ரவேலர் அங்கு குடியேறியிருக்கவேண்டும் என்று நம்பப்படுகிறது. இவர்கள் ஆசியாவிலுள்ள நாடோடி இனத்தைச் சேர்ந்த மக்களாகும். அவர்கள் எகிப்திய அரசர்களை தோற்கடித்து நாட்டைக் கைப்பற்றி அங்கு ஆட்சிபுரிந்து வந்தார்கள். ஆனால் கி.மு. 1570-ல் எகிப்திய அரசர்கள், அங்கு ஆட்சி புரிந்து வந்த ஹிஸ்கோஸ் வம்சத்தினரை துரத்தி விட்டு அவர்களிடமிருந்து மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினார்கள். அவர்கள், மிகத் திரளாக பலுகிப் பெருகிவிட்டிருந்த இஸ்ரவேல் மக்களான எபிரெயர்களை வெறுத்தார்கள். அவர்களை அந்த அரசர்கள் அடிமைகளாக நடத்தி மிகவும் துன்புறுத்திய போது, தேவன் மனம் இரங்கி **மோசே**யின் தலைமையில் அவர்களை அங்கிருந்து விடுதலை பெறச் செய்தார்.

எகிப்தின் அடிமை வாழ்க்கையிலிருந்து விடுதலையடைந்தபின், தேவன் தமது அடியவர்களுக்கு வாக்குப்பண்ணியிருந்த வாக்குத்தத்த நாட்டை மீண்டும் சென்றடைந்து அதை சுதந்தரிப்பதற்குள் அவர்கள் பட்ட இன்னல்கள் தான் எத்தனை! அந்த 'பாலும் தேனும் ஓடுகிற', வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டை அடைந்தபின்பு அங்கு சுகமாக வாழ்ந்து மகிழ்ந்திருக்க வேண்டிய இஸ்ரவேல் மக்களாகிய தேவஜனம்,

தங்களைக் காப்பாற்றி வழிநடத்திய தேவனை மறந்து, அவரை விட்டு அடிக்கடி விலகிப்போய், தேவன் வெறுத்த விக்கிரகாராதனைக்கு தங்களை ஒப்புக் கொடுத்தார். தேவ பாதுகாப்பை இழந்து போன அவர்கள் பிற இன மக்களால் அதிக அளவில் துன்புறுத்துதல்களுக்கு ஆளானார்கள். அவர்கள், தேவன் வெறுத்த பாவங்களில் மூழ்கி தங்களது பரிசுத்தத்தை இழந்து, தேவனை துக்கப்படுத்திக் கொண்டேயிருந்தார்கள். ஆனால், அன்புருவான தேவன் இந்நாள் வரைக்கும் தம்முடைய ஜனத்தை கை விடவில்லை. பிறரால் நெருக்கப்பட்டு, வேதனைப்படுத்தப்பட்டு ஒடுக்கப்பட்ட தேவ ஜனம், **தேவனுடைய அன்புக்கு சாட்சியாக இதுவரைக்கும் நிலைநிற்கிறதை** நாம் காண்கி றோம். தேவனுடைய ஜனமாகிய இஸ்ரவேலர் வாழும் இஸ்ரவேல் நாடு வழியாக, அதின் நிலவியல் மற்றும் சரித்திர சான்றுகளை (Geographical and Historical proofs) ரசித்து ருசித்தபடியே, நமது பயணத்தை மேற்கொள்வோமா? **கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய இஸ்ரவேலராக மாற்றப்பட்ட நாம்,** பரம கானானை நோக்கி பயணம் புரிய இது உதவட்டும். ஆண்டவருக்கு நன்றி கூறியபடியே தேவஜனங்கள் சுதந்தரித்த தேசத்தில் அவர்களுடன் இணைந்து நமது பயணத்தை ஆரம்பிப்போம்...

## 5. எகிப்திலிருந்து கானானை நோக்கி இஸ்ரவேலரின் பயணம்

கி.மு. 1526-ம் ஆண்டு எகிப்தில் மோசே பிறந்ததாகக் கருதப்படுகிறது. குழந்தைப் பருவத்திலிருந்தே எகிப்திய அரசமாளிகையில் வளர்க்கப்பட்டபடியால், அவன் ஒரு அரசகுமாரனைப் போல் அநேக கலைகளில் பயிற்றுவிக்கப்பட்டு ஒரு சகலகலா வல்லவனாகத் திகழ்ந்தான். பிற்காலத்தில் இஸ்ரவேலராகிய ஒரு மாபெரும் ஜனக்கூட்டத்தை தலைமையேற்று வழிநடத்திச் செல்ல அப்பயிற்சிகள் அவனுக்கு உதவியது. கானானை நோக்கிச் சென்ற அவர்களது பயணம், தேவனின் ஆச்சரிய மானதும், அற்புதங்கள் நிறைந்ததுமான வழிநடத்துதலுக்கு சான்றாகவும், வரலாற்று சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியாகவும் கருதப்படுகிறது. இஸ்ரவேலரின் மூதாதையர்களுடன் தேவன் பண்ணிய உடன்படிக்கையை தேவன் அவ்வாறு நிறைவேற்றினார், கி.மு. 1447-ல் அவர்கள் சீனாய் மலையின் அடிவாரத்தை அடைந்தபோது **யாவே (யெகோவா)** எனும் தங்களது தேவனிடமிருந்து பத்து கற்பனைகளைப் பெற்று, **தேவனுடன் தங்களது உடன் படிக்கையைப் புதுப்பித்துக் கொண்டார்கள்.**

நாற்பது வருடகால வனாந்தர அலைச்சல்களுக்குப் பின் இஸ்ரவேலர் கானானின் எல்லையை அடைந்தபோது **மோசே** மரித்தான். மோசே மரித்தபின்பு, இஸ்ரவேல் மக்களை **யோசுவா** கானானுக்குள் நடத்திச் சென்றான். கானான் தேசம் இஸ்ரவேலருக் குள் பங்குபோடப்பட்ட பின்பு, யோசுவாவின் வேண்டுகோளுக்கிணங்க, எப்பிராயீம்

# யாக்கோபின் பதான் ஆராம் பயணம்



# ஆதியாகம நூலில் காணப்படும் சில முக்கிய நகரங்கள், ஊர்கள், நதிகள் மற்றும் கடல்கள்



# செழும்பிறை பகுதியும் அதன் தற்போதைய அண்டை நாடுகளும்
## THE FERTILE CRESCENT AND MODERN BOUNDARIES



# எகிப்திய மற்றும் சுமேரிய எழுத்து வடிவங்கள்


மலை


சூரியன்


தேவன்


தண்ணீர்


மனிதன்



'ஹைரோகிளிபிக்ஸ்'
எனப்படும் எகிப்தியப் பட எழுத்துக்கள்





'ஹைரோகிளிபிக்ஸ்' எனப்படும் எகிப்தியப் பட எழுத்துக்கள்.

ஆப்பு வடிவ எழுத்துகள் (சுமேரிய, பாபிலோனிய எழுத்து வடிவம்)

# எகிப்தில் எபிரேயர்கள் வாழ்ந்த கோசேன் நாடு



# எபிரேயர் எகிப்திலிருந்து வெளியேறுதல்




இஸ்ரவேலர் எகிப்திலிருந்து கானானுக்குச் சென்றிருக்கக்கூடிய மூன்று பாதைகள் நிலப்படத்தில் காட்டப்பட்டிருக்கின்றன. வழி வழியாகச் சொல்லப்பட்டு வரும்ப ாதை — — — — → — — — — → என்று காட்டப்பட்டுள்ளது.

# புனித நாட்டின் இயற்கை அமைப்பு



# வாக்குத்தத்த தேசம்



1830 மீட்டருக்கு மேல்
915 மீட்டருக்கு மேல்
366 மீட்டருக்கு மேல்
183 மீட்டருக்கு மேல்
கடல் மட்டத்திற்குக் கீழ்
கோடையில் வறண்ட ஆறுகள்
கிலோ மீட்டர்
0 10 20 30 40 50 60
சீதோன்
தமஸ்கு
எர்மோன் மலை
தாண்
செசரியா பிலிப்பி
மேரோம் ஏரி
கப்பர்நகூம்
கானா
கலிலேயாக் கடல்
கர்மேல் மலை
நாசரேத்து
நாயீன்
எஸ்டிரேலோன் சமவெளி
இஸ்ரியேல்
செசரியா
பெத்தாபரா
கில்போவா மலை
சாரோன் சமவெளி
சமாரியா
ஏபால் மலை
சீகேம்
கெரிசீம் மலை
யோப்பா
கில்கால்
பேதேல்
எரிகோ
யோர்தான் நதி
எருசலேம்
பெத்தானியா
பெத்லெகேம்
பெலிஸ்திய சமவெளி
ஷெபேலா
காசா
எப்ரோன்
சவக் கடல்
மக்காயரஸ்
பெயேர்ஷெபா

# கானானில் எபிரேய இனப்பிரிவுகள் குடியேறிய விதம்



# இஸ்ரவேல் கோத்திரங்களின் இடங்கள்



மலைத் தேசத்திலுள்ள **'திம்னாத் சேரா'** என்கிற பட்டணம் அவருக்கு அளிக்கப்பட்டது. அவர் அதைத் திரும்பக்கட்டி அதில் வாசம் பண்ணினார். (யோசு. 19:49-50). கர்த்தர் மோசேக்கு கற்பித்திருந்தபடியே, **லேவியர்களுக்கு** வாசம்பண்ண பட்டணங்களையும், மேய்ச்சல் நிலங்களையும் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்து அளித்தார்கள். (யோசு. 21:8) முன்விரோதம் எதுவுமின்றி, திடீர் கோபத்தால் கைப்பிசகாக பிறனைக் கொலை செய்துவிட்டவர்களுக்கு பாதுகாப்பளிக்க **ஆறு அடைக்கலப்பட்டணங்களையும்** தேர்ந் தெடுத்தார்கள். (யோசு. 20:1-3).

# 6. இஸ்ரவேலை ஆண்ட நியாயாதிபதிகள் (கி. மு. 1360 - 1084)

இஸ்ரவேலர், யோசுவாவின் தலைமையில் கானான் நாட்டிற்குள் சென்று, யுத்தங்கள் பல வென்று அதைத் தங்களுக்கு சொந்தமாக்கிக் கொண்டார்கள். யோசுவாவிற்குப்பின் அநேக **நியாயாதிபதிகள்** எழும்பி, அவர்களை நியாயம் விசாரித்து, எதிரிகளிடமிருந்து அவர்களைக் காப்பாற்றி வழிநடத்தினார்கள். அந்த நியாயாதிபதிகள் தேவனால் ஆலோசனை அளிக்கப்பட்டு, இஸ்ரவேலரை ஆண்டார்கள். ஆனால் அம்மக்களோ, தேவன் தங்களை ஆச்சரியபிரகாரமாய் வழிநடத்தி பராமரித்து வருகிறதை அடிக்கடி மறந்து, அந்நிய தேவர்களைத் தொழுது தீயவழிகளில் நடந்து, தங்கள் வாழ்க்கையை அவலமிக்கதாக மாற்றிக்கொண்டார்கள். ஆகவே அவர்கள் எதிரிகளின் கைகளில் ஒப்புக்கொடுக்கப்பட்டு மிகுந்த வேதனையடைந்தார்கள். இவ்வாறு வேதனைப்பட்டு தவித்தபோதெல்லாம், தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நியாயாதிபதி எழும்பி அவர்களை எதிரிகளிடமிருந்து மீட்டு காப்பாற்றி வந்தான். ஆனாலும் அந்த நியாதிபதியின் காலத்திற்குப்பின் மீண்டும் அதே கதை தொடர்ந்தது. இவ்வாறு இன்பமும், துன்பமும் மாறி மாறி அவர்கள் வாழ்க்கையில் விளையாடியது. இஸ்ரவேல் மக்களை 15 நியாதிபதிகள் நியாயம் விசாரித்து வழிநடத்தினார்கள். (கி.மு. 1360 - 1084).

இஸ்ரவேலின் கடைசி நியாயாதிபதியாக விளங்கியவர் சாமுவேல். அவரது தாயார் அவனை தேவ ஊழியத்திற்கு பிரதிஷ்டை பண்ணியதால், சாமுவேலின் குழந்தைப் பருவம் முதல் அவன் **ஏலி** என்கிற பிரதான ஆசாரியனால் தேவாலயத்தில் வளர்க்கப்பட்டான். ஏலியின் வாழ்க்கையின் கடைசி நாட்களில் **கர்த்தருடைய பெட்டி** பெலிஸ்தருடன் போர்நடக்கும் போர்க்களத்தில் எடுத்துச் செல்லப்பட்டது. இஸ்ரவேலர் தோல்வியைத் தழுவியபோது, பெலிஸ்தரால் அது பிடிக்கப்பட்டுவிட்டது. பெலிஸ்தருடைய தெய்வமாகிய தாகோனின் ஆலயத்தில் அது வைக்கப்பட்டது ஆகவே, தேவன் அவர்களை வாதைகளால் மிகவும் வேதனைப்படுத்தினார். தேவகோபம்

தங்கள் மீது வந்திருப்பதை உணர்ந்துகொண்ட அவர்கள், தேவனுடைய பெட்டியை இஸ்ரவேல் தேசத்திற்கு திருப்பி அனுப்பி வைத்தார்கள். ஆனாலும், இஸ்ரவேலர் மீண்டும் மீண்டும் தேவனுக்கு எதிராகப் பாவம் செய்தபடியே வாழ்ந்து வந்ததால், எதிரிகள் அடிக்கடி அவர்களை மேற்கொண்டு அவர்களைத் துன்புறுத்தியவாறே இருந்தனர். (லேவி. 26; உபா. 28) இஸ்ரவேலர், தங்களை ஆண்டு வழிநடத்த **ஒரு அரசன் தேவை** என்று விரும்பியபோது, தேவன் அதை ஏற்றுக்கொண்டார்.

## 7. சாமுவேல் - இஸ்ரவேலின் கடைசி நியாயாதிபதி

நியாயாதிபதிகள் காலத்தில் இஸ்ரவேலரின் வாழ்க்கையை நாம் பார்க்கும்போது, அவர்கள் தேவனைவிட்டு விலகிப்போய் பாவத்திற்குட்பட்டு தண்டனையைப் பெற்ற போதெல்லாம் தேவன் அவர்களது முறையீட்டைக் கேட்டு அவர்களுக்கு இரங்கி, நியாதிபதிகள் மூலம் விடுதலை அளித்துக் கொண்டேதான் இருந்தார் என்று நாம் காண்கிறோம். ஆனால், இவ்வாறு **தவறுகளை தொடர்ந்து அவர்கள் செய்தது, அவர்களது ஆவிக்குரிய வீழ்ச்சிக்கு ஏதுவாயிற்று. சாமுவேல்** என்கிற தீர்க்கதரிசி, இஸ்ரவேலரை மிக ஞானமாக, தேவசித்தப்படி, வழி நடத்தினார். ஆனால் தங்களைச் சுற்றி வாழும் ராஜாக்கள் தங்களது மரபின்படி தலைமுறை தலைமுறையாக மக்களை அரசாட்சி புரிந்து வருவதை கவனித்து வந்த இஸ்ரவேலர், தங்களையும் வழிநடத்த ஒரு ராஜா இருந்தால் நலமாயிருக்கும் என்று எண்ணினார்கள். தேவனால் வழிநடத்தப்பட்டு வந்த பரிசுத்த ஜனமாகிய இஸ்ரவேலர், பிற ஜாதிகளைப் போல ஒரு ராஜாவினால் வழிநடத்தப்பட விரும்பியது, சாமுவேலுக்கு மிகுந்த வேதனையை அளித்தது. ஆனால் தேவனிடம் அவன் அதைத் தெரிவித்தபோது, அவர் இஸ்ரவேல் மக்களின் ஆசையை நிறைவேற்ற அனுமதியளித்தார்.

## 8. இஸ்ரவேலை ஆண்ட அரசர்கள்

பென்யமின் கோத்திரத்தின் ஒரு செல்வந்தரான கீஸின் மகனாகிய **சவுலை,** தேவ கட்டளைப்படி, சாமுவேல் இஸ்ரவேலருக்கு முதலாவது ராஜாவாகத் தேர்ந்தெடுத்து அபிஷேகம் பண்ணினான். அழகும் வலிமையும் வாய்ந்த அவ்விளைஞன் தாழ்மை குணமுடையவனாக இருந்ததால் பிறர்மீது அதிகாரம் செலுத்தும் அரசபதவியை அவன் நாடவில்லை. ஆனால், தேவகட்டளைப்படி அரசனாக அவன் தேர்ந்தெடுக்கப் பட்டதால், அவன் அரசனாக முடிசூட்டப்பட்டான். ஆரம்ப நாட்களில் அவன் ஒரு சிறந்த அரசனாகவும், போர் வீரனாகவும் திகழ்ந்து அநேக வெற்றிகளைப் பெற்றான். ஆனால் சில நாட்களுக்குப் பின் அவன் தேவகட்டளையை அசட்டை செய்து தன்னிச்சையாகச்

## சாமுவேல் பணிசெய்த இடங்கள்



# எஸ்டிரோன் சமவெளியின் போர்க்களங்களைக் காட்டும் நிலப் படம்



## சவுலின் அரசு


சவுலின் அரசு
ஐப்பிராத்து நதி
ஆமாத்
மத்தியதரைக்கடல்
தமஸ்கு
தீரு
எருசலேம்
எசியோன்-கேபர்
எகிப்து
கிலோமீட்டர்
0 150 300
நீல நதி
செங்கடல்

## பெலிஸ்தரின் சிறப்பு வாய்ந்த நகரங்கள்



# தாவீதின் அரசு


தாவீதின் அரசு
ஐப்பிராத்து நதி
ஆமாத்
மத்தியதரைக்கடல்
தமஸ்கு
தீரு
எருசலேம்
எசியோன்-கேபர்
எகிப்து
நைல் நதி
செங்கடல்
கிலோமீட்டர்
0
150
300

# தாவீது, சாலமோன் - இவர்கள் காலத்தில் எருசலேம்



# ஒன்றிணைந்த இஸ்ரவேல் அரசு



# சவுல், தாவீது, சாலொமோனின் அரசுகள், மற்றும் அண்டை நாடுகள்



# சாலொமோன் கட்டிய தேவாலயம்



# வணிகரான சாலொமோன்


வணிகச் சரக்குக் கப்பல்கள்
மயில்
குரங்குகள்
நினிவே
எசியோன்-கேபர்
ஒட்டகப் பரிவாரம் சென்ற பாதை
2000 கிலோமீட்டர்
வணிகச் சரக்குக் கப்பல்கள் சென்ற வழி
ஷேபா
மரீப்
ஓப்பீர்
நீல நதி
தங்கம்
யானைத்தந்தம்
ஒட்டகப் பரிவாரம்

# வணிகப்பாதைகள்



சர்தை
சிமிர்ன
எபேசு
அந்தியோகியா
கானிஷ்
இக்கோனியா
சிலிசியா
தர்சு
காரான்
நினிவே
காஸ்பியன்
கடல்
அந்தியோகியா
சீப்புரு
அசூர்
ஐப்பிராத்து
எக்பதான
தூரா
நதி
பிப்லாஸ்
மத்தியதரைக்கடல்
சீதோன்
தீரு
தமஸ்கு
பாக்தாத்
இஸ்பகான்
தோத்தான்
கெரசா
சூசா
பாபிலோன்
எருசலேம்
காத்சா
அம்மோன்
அலெக்சாந்திரியா
பெத்ரா
ஊர்
பொசப்போலி
மெம்பிஸ்
பஸ்ரா
எசியோன்-கேபர்
புஷியர்
அகாபா
வளைகுடா
பாரசீக வளைகுடா
நீல நதி
செங்கடல்
வணிகப் பாதைகள்
கிலோமீட்டர்
0
200
400
600
800

# சாலொமோனின் அரசு



சாலொமோனின் அரசு
மத்தியதரைக்கடல்
திப்சா
ஐப்பிராத்து நதி
ஆமாத்
தமஸ்கு
தீரு
தாண்
யோப்பா
காத்சா
எருசலேம்
பெயேர்ஷெபா
எசியோன்-கேபர்
எகிப்து
நீல நதி
செங்கடல்
கிலோமீட்டர்
0
150
300

செயல்பட ஆரம்பித்தான். தேவஜனங்களுக்கு அரசனாக தேவனால் முடிசூட்டப்பட்ட அவன் தேவசித்தத்தை மட்டுமே நிறைவேற்ற வேண்டும் என்றும், பிற ஜாதிகளின் அரசர்களைப் போல தன்னிச்சையாக செயல்படக் கூடாது என்பதையும் உணராமல் செயல்பட்டது தேவனை மிகவும் வேதனைப்படுத்தியது. ஆகவே அவர் அவனை அரசபதவியிலிருந்து வெளியேற்ற தீர்மானித்தார். அப்போது அவரது கண்கள் **தாவீது** என்கிற பக்தியுள்ள ஓர் இளைஞனின் மீது பதிந்தது. தேவ கட்டளைப்படி சாமுவேல் (அப்போது அரச பதவியிலிருந்த சவுலின் அனுமதியின்றியே) அவனை ராஜாவாக அபிஷேகம் செய்தான். தேவன் தாவீதைத் தனது வாரிசாகத் தேர்ந்தெடுத்ததை விரைவில் சவுல் புரிந்து கொண்டான். தன் மகனாகிய **யோனத்தானுக்கு** கிடைக்கவேண்டிய அரசபதவி, தனது குடும்பத்தை விட்டு கைநழுவிப்போய்விடுமோ என்று அவன் அஞ்சினான். தனது 40 வருட அரசாட்சி காலத்தின் பெரும் பகுதியை, தன்னிடமிருந்து தப்பிச் சென்று காடுகளிலும், மலைகளிலும் ஒளிந்து வாழ்ந்துகொண்டிருந்த தாவீதை பின்தொடர்ந்து சென்று, கொலை வெறியுடன் கொல்ல முயற்சி செய்வதிலேயே வீணடித்தான்.

பெத்லெகேம் ஊரானாகிய ஈசாவின் இளைய மகனாகிய **தாவீது,** ஓர் ஆட்டிடைய னாகத் தனது வாழ்க்கையை ஆரம்பித்தான். தேவன் மீது அதிகமான பற்றுதலுடன் வாழ்ந்துவந்த அவன், இஸ்ரவேலின் அரசனான சவுலின் மரணத்திற்குப்பின் யூதா தேசத்தின்மீது அரசனானான். சவுலின் மகன் **இஸ்போசேத்தின்** மரணத்திற்குப்பின் முழு இஸ்ரவேல் நாட்டிற்கும் அவன் அரசானான். **எருசலேம்** (தாவீதின் நகரம்) அவனது தலைநகரமாயிற்று. ‘தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவனாக’ காணப்பட்ட அவன், தான் செய்த ஒரு பாவத்தை மறைக்க, அப்பாவி ஒருவனை வஞ்சித்து கொலை செய்தான். அதன்பின்பு அவனது வாழ்க்கையிலும் இருள் சூழ ஆரம்பித்தது. தேவனுக்கு ஒரு ஆலயம் கட்ட அவன் விரும்பியபோதிலும், தேவன் அவனுக்கு அதற்கான அனுமதி கொடுக்க மறுத்துவிட்டார். ஆனால் அவர் அதற்கான அனுமதியை அவனது மகன் **சாலொமோனுக்கு** அளிக்கப்போவதாக உறுதியளித்தார்.

## 9. தாவீதின் நகரமாகிய எருசலேம்

தாவீதின் மகனாகிய சாலொமோன் பட்டத்திற்கு வந்த பின்பு, அவன் தேவனுக்கு ஒரு மிகப்பிரம்மாண்டமான ஆலயத்தைக் கட்டி பிரதிஷ்டை செய்தான். அவனது விருப்பப்படியே, தேவன் அவனை ஒரு சிறந்த ஞானியாக மாற்றியதுமன்றி, மிகவும் செல்வச் சிறப்புடனும் அவனை வாழ வைத்தார். அவனது நாட்களில் தேசம் யுத்தம் எதுவுமின்றி அமைதியுடன் இருந்தது. அவன் தனது மதிநுட்பத்தால் அநேக நாடுகளை இஸ்ரவேல் நாட்டுடன் இணத்தான். **தெற்கே சினாய்** முதல் **வடக்கே யூப்பரிட்டஸ்**

**நதிவரைக்கும்** அவனது நாட்டின் எல்லை பரந்து விரிந்திருந்தது. வணிகத்திலும் அவன் சிறந்து விளங்கினான். ஆனால், அவன் வேற்று இனத்தாராகிய அனேக பெண்களை மணந்து கொண்டிருந்தபடியால், அவனது இருதயம் தேவனிடமிருந்து விலகிப்போய், பிற தெய்வங்களை நாடியது. புகழின் உச்சியிலிருந்த அவனது வாழ்க்கை அதல பாதாளத்தை நோக்கி விழுந்தபோது, அவனது வாழ்க்கையும் முடிந்துபோய்விட்டது. புரட்சியாளர்கள் அவனுக்கு விரோதமாகத் திட்டம் தீட்டினார்கள். அதன் பயனாக, அவனது காலத்திற்குப்பின் இஸ்ரவேல் நாடு இரண்டாகப் பிளந்தது.

யூதாதேசத்தின் மலைகளிலுள்ள உயரமான ஒரு பீடபூமியின் மேல் வீற்றிருக்கும் **எருசலேம் பட்டணம்** யூதர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் இஸ்லாமியர் என மூன்று மதங்களைச் சேர்ந்தவர்களுக்கும் புண்ணிய பூமியாக விளங்குகிறது. இஸ்ரவேலரின் தெய்வமாகிய **யெகோவா தெய்வம்** வீற்றிருக்கும் பரிசுத்த பூமியாகக் கருதப்படும் எருசலேம் நகரம், **தாவீதின் நகரம், சீயோன்** எனும் பெயர்களாலும் அறியப்படுகிறது.

பழைய ஏற்பாட்டு நூல்களில் **சாலேம், மோரியா** என்றெல்லாம் இந்நகரம் அழைக்கப்பட்டது. இதன் ஆதிபெயர் **எபூசு** என்பதாகும். தாவீது அந்நகரத்தைக் கைப்பற்றி அதைத் தனது நாட்டின் தலைநகராக மாற்றியதுமன்றி, தேவனின் உடன்படிக்கைப் பெட்டியை அந்தப் பட்டணத்தில் ஸ்தாபித்து அதை **தேவனுடைய பரிசுத்த நகரமாகவும்** மாற்றினான். **சாலொமோன்** அங்கு தேவாலயத்தைக் கட்டி முடித்தபின்பு, அவனது, ஆட்சி காலத்தில் இஸ்ரவேல் நாடு அரசியலிலும், பொருளாதாரத்திலும் சிறந்து விளங்கியது. சாலொமோனின் இறுதி நாட்களில் அவன் தேவனை விட்டு விலகிப்போனான். அவனைப் பின்பற்றி அவனைப் போலவே தேவனை விட்டு விலகிய இஸ்ரவேல் மக்களும் தொடர்ந்து பாவம் செய்து, தேவனை மறந்து வாழ்ந்தது காரணமாக கி.மு. 586-ல் **பாபிலோனியர்களால்** அந்நகரம் பாழாக்கப்பட்டு, அங்குள்ள மக்கள் சிறைபிடிக்கப்பட்டு **பாபிலோனுக்கு** நாடுகடத்தப்பட்டனர். ஆனால் **பெர்சியர்** பாபிலோனியரை தோற்கடித்தபின்பு, பெர்சியப்பேரரசன் **கோரேசு** கி.மு. 538-ல் இஸ்ரவேலரை தாய் நாடு திரும்ப அனுமதி அளித்தான். அவர்கள் **செருபாபேல், நெகேமியா, எஸ்றா** ஆகியோரின் தலைமையில் எருசலேம் தேவாலயத்தையும், அதன் அலங்கத்தையும் கட்டி முடித்தார்கள்.

# 10. இரண்டாக உடைக்கப்பட்ட இஸ்ரவேல் நாடு

பன்னிரண்டு கோத்திரங்களைத் தன்னுள் அடக்கிய நாடான இஸ்ரவேல் நாடு, கி.மு. 931-930-ல் இரண்டாக உடைந்தது. 10 கோத்திரங்கள் தனியாகப் பிரிந்து வடக்கே **இஸ்ரேல் (எப்பிராயீம்)** என்கிற நாடாக உருவாகியது. **யூதா தேசம்** என அழைக்கப்பட்ட தென் நாட்டில் யூதா கோத்திரமும், பென்யமீன் கோத்திரமும்

# இரண்டாகப் பிரிந்த பேரரசும், அண்டை நாடுகளும்



# இரண்டு துண்டாகிப் போய்விட்ட இஸ்ரவேலரின் நாடு



# அசீரியப் பேரரசின் காலத்தில் மத்திய கிழக்கு நாடுகள்



# பாபிலோனியப் பேரரசு


0 100 200
0 100 200 300
காஸ்பியன் கடல்
அரராத்
தூபால்
கர்கேமிஷ்
கோசான்
ஆரான்
நினிவே
அர்பேலா
அசீரியா
அலெப்போ
ரெசேப்
அசூர்
அராப்கா
மேதியா
ஆமாத்
அர்வாத்
ரிப்லா
தத்மோர்
எக்பட்டனா
பெகிஸ்துன்
பெரியகடல் (மத்தியதரைக்கடல்)
பிப்லோஸ்
சீரியா
ஐபிராத்து ஆறு
டைகிரிஸ் (இதெக்கேல்) ஆறு
தீரு
தமஸ்கு
யோர்தான் ஆறு
பெர்சியா
அம்மோன்
பாபிலோன்
சூசான்
மிஸ்பா
எருசலேம்
மோவாப்
ஊர்
ஏதோம்
மெம்பிஸ்
எகிப்து
சீனாய்
பாரசீக வளைகுடா
நைல் ஆறு
எத்தி யோப்பியா
செங்கடல்
அரேபியா
சூசானிலிருந்து எருசலேம் வரை செல்லும் முக்கிய பாதைகள்

# வடக்கு தேசத்தினர் அசீரியரால் சிறைபிடிக்கப்படுதல்



# தெற்கு தேசத்தினர் பாபிலோனியரால் சிறைபிடிக்கப்படுதல்



# சிறையிருப்பிலிருந்து யூதேயா நாட்டினர் திரும்பி வருதல்



# இஸ்ரவேல், யூதாவின் தீர்க்கதரிசிகள்



இணைந்து, தாவீதின் வாரிசாகிய **ரெகொபெயாம்** எனும் ராஜாவிடம் விசுவாசமாக இருந்தது. சாலொமோனைப் போலவே, அவனது மகன் ரெகொபெயாமும் மக்களிடம் மிக அதிகமாக வரிவசூலிக்க தீர்மானித்தது, இஸ்ரவேல் நாடு இரண்டாகப் பிளவுபட முக்கிய காரணமாயிற்று. ஆதலால் சாலொமோனின் பகைவனான **யெரொபெயாம்** என்பவன் 10 கோத்திரங்களை தன்னுடன் சேர்த்துக்கொண்டு வடநாட்டில் ஆட்சி புரிந்தான். அவன், மக்களை சிலை வணக்கத்திற்கு நேராகத் திசை திருப்பி வட்டான்! இவ்விரு நாடுகளிலும் 19 அரசர்கள் வீதம் ஆட்சி புரிந்தார்கள். 9 விதமான வம்சத்தினர் வடநாட்டை ஆட்சி புரிந்தனர். ஆனால் யூதா தேசத்தை தாவீதின் வம்சத்தினரே ஆண்டனர். வடநாட்டை ஆண்ட 19 அரசர்கள் கி.மு. 930-722 வரைக்கும் ஆளுகை புரிந்தனர். தென் நாட்டை ஆண்ட அரசர்களோ கி.மு. 930-586 வரைக்கும் அந்நாட்டை ஆண்டார்கள்.

# 11. வட பகுதியான இஸ்ரவேலின் வீழ்ச்சி

சாலொமோன் அரசனின் அரசாட்சிக்குப்பின், நூறு வருடங்கள் முடிவதற்குள், மெசப்பெத்தேமியாவின் வடபகுதியிலுள்ள **அசீரியா நாடு** வலுவடைந்து பேரரசாக மாறியது. கி.மு. 855-625 வரைக்கும் உள்ள காலகட்டத்தில் அந்நாடு பலஸ்தீனாவி லுள்ள பிற நாடுகளைக் கைப்பற்றி முன்னேறியது, இரு எபிரேய நாடுகளான இஸ்ரேல் மற்றும் யூதாவிற்கு மிகுந்த அச்சத்தை அளித்தது. பாபிலோனியாவின் வடதிசையில், **டைக்ரிஸ்** நதியின் ஒரங்களை ஒட்டிய இடங்களில் இந்நாடு பரவியிருந்தது. இப்பேரரசின் முதலாவது தலைநகரமான **அசூர்** (Assur) கி.மு. 2000-வது ஆண்டு நிறுவப்பட்டது. **காலா, நினிவே** ஆகிய நகரங்களும் அந்நாட்களில் புகழ்பெற்றவை களாக திகழ்ந்தன. கி.மு. 1300-ல் அசீரியா ஒரு மிகப்பெரிய வல்லரசாக மாறியிருந்தது. அசீரிய அரசன் புல் என்பவன் போர் தொடுத்து வந்தபோது இஸ்ரவேல் அரசன் அவனுக்கு 75,000 பவுண்டு (34090 கிலோ) நிறையான வெள்ளியைக் கொடுத்தான். அதனால் அசீரிய அரசன் அங்கிருந்து விலகிச் சென்று விட்டான். (II இரா. 15:19-20) யூதாவை ஆண்ட **உசியா**வின் மகன் **யோத்தா**முக்குப் பிறந்த **ஆகாஸ்** அரசனின் காலத்தில், சீரிய - எப்பிராயீமிய நாடுகளிடையே போர் மூண்டது. அராமிய அரசன் **ரெசின்,** இஸ்ரவேலின் அரசனான ரெமிலியானின் மகன் **பேக்கா**வுடன் இணைந்து எருசலேமுக்கு எதிராகப் போர் புரிந்து தோல்வியை தழுவினான். (ஏசா. 7:1) அசீரிய அரசனான **திக்லாத்** பைல்சர், இஸ்ரேலுக்கு எதிராக போர் புரியும்படியாக வந்து, **சமாரியா**வை மூன்று வருடகாலம் முற்றுகையிட்டான். **ஓசியா** அரசனின் காலத்தில் **சமாரியா பிடிபட்டது.** அவ்வசீரிய அரசன் சமாரியாவின் குடிகளை அங்கிருந்து நாடு கடத்தி விட்டு, அங்கு வேற்று இனக்குடிகளைக் குடியேற்றினான் (II இரா. 17:24). அம்மக்கள் **'சமாரியர்'** என அழைக்கப்பட்டனர்.

# 12. யூதாவின் வீழ்ச்சி

## யூதாவின் மீது செனாகெரிபின் படையெடுப்பு

**உசியாராஜா,** பெலிஸ்தர்களைத் தோற்கடித்தபின்பு **காத், யாப்னே, அஸ்தோத்** ஆகிய அவர்களுடைய பட்டணங்களை இடித்து தரைமட்டமாக்கி நிர்மூலமாக்கினான். பின்பு அவன் அஸ்தோத்திலும், பெலிஸ்தரின் நாடுகளிலும் நகரங்களைக் கட்டினான். **அம்மோனியர்கள்** அவனுக்குக் கப்பம் கட்டினார்கள்; அவனது புகழ் எங்கும் பரவியது. (2 நாளா. 26:6-8).

ஏலாவின் மகனும் இஸ்ரயேலின் ராஜாவுமாகிய **ஓசியா**வின் மூன்றாவது வருடத்தில், ஆகாசின் மகன் **எசேக்கியா** யூதாவின் மேல் அரசனானான். அவனது தாயார், சகரியாவின் மகளாகிய **அபி.** தேவனுடைய பார்வையில் அவன் செம்மையாக நடந்தான் (II இரா. 18:1-4). அவனது ஆட்சியின் 14-ம் வருடத்தில் அசீரிய அரசன் **செனாகெரிப்,** யூதாவின் அரணிப்பான நகரங்கள் மீது படையெடுத்து வந்து (ஏசா. 36:1) அவற்றைக் கைப்பற்றினான். ஆனால் எசேக்கியாவின் மரணத்திற்குப் பின் அவனது மகனான **மனாசே** தீயவழிகளில் நடந்தான். தேவ எச்சரிப்பை அவன் உதாசீனப்படுத்தியதால், அசீரியர்களால் அவன் கைது செய்யப்பட்டான். அவர்கள் இரண்டு வெண்கலச் சங்கிலிகளால் கட்டி, அவனை இழுத்துச்சென்றார்கள் (II நாளா. 33:10-11), அவன் மனம் நொந்து தேவனுக்கு முன்பாகத் தன்னை தாழ்த்தியபோது, சிறையிருப்பிலிருந்து விடுவிக்கப்பட்டான்.

கி.மு. 609-ல் **யோசியா** அரசன், நாட்டிலுள்ள சிலைவணக்கத்தை முற்றிலுமாக அழித்தான். ஆனால் எகிப்தின் **அரசன் நெகோ** என்பவன் அசீரிய அரசனுக்கு உதவப்போகும் வழியில், யோசியா அவனிடம் வீண் வம்புக்குச் சென்று போரிட்டதால் கொலையுண்டான். அவனது சரீரத்தை எருசலேமுக்கு எடுத்து வந்து அங்கு அவன் அடக்கம் பண்ணப்பட்டான். (II நாளா. 35:20-24).

# 13. பாபிலோனியப் பேரரசின் கீழ் யூதர்கள்

இன்றைய **பாக்தாத்** (Bagdad) நகரத்திற்கு 50 மைல்கள் தெற்கே, ஐப்பிராத்து நதிக்கரையில் கி.மு. 2000-ல், **பாபிலோன் நாடு** நிறுவப்பட்டது. **அமோரியர்களால்** (Amorites) நிறுவப்பட்ட இந்நாட்டின் ஆறாவது பேரரசன் **ஹம்முரபி** (கி.மு. 1792-1750)யின் காலத்தில் இந்நாடு சிறந்து விளங்கியது. கி.மு. 1350-ல் அசீரிய படைபலத்தின் முன் பாபிலோனியர்கள் தங்களை வலிமையற்றவர்களாக நினைத்த தால், அவர்கள் அசீரியரது பாதுகாப்பைச் சார்ந்து வாழ வேண்டியதாக இருந்தது. கி.மு. 703-ல், அசீரிய அரசன் **செனகெரிப்** பாபிலோன் மீது போர் தொடுத்தான். கி.மு. 689-ல்

அவன் பாபிலோன் நகரத்தை முற்றிலும் அழித்துவிட்டான். ஆனால், பின்பு அவனது மகன்களே அவனைக் கொலைசெய்தார்கள் (II இரா. 19:37).

கி.மு. 626-ல் கல்தேயனாகிய **நெபோ போலஸ்ஸார்,** பாபிலோனைக் கைப்பற்றி னான். கி.மு. 605-ல் நெபுக்கத்நேச்சார் எகிப்தை வென்றான். கி.மு. 598-ல் நெபுக்காத் நேச்சார் எருசலேமுக்கு எதிராகப் படையெடுத்தான். யூதாவின் அரசனான **யெகோயாக் கீன்** அவனுக்கு அடிபணிந்தான். ஆனால், யெகோயாக்கீன் நெபுக்காத்நேச்சரை எதிர்க்கவே, அவனது பெரியப்பா **சிதேக்கியாவை** அரசனாக்கினான். அவனது காலத்தில் நெபுக்கத்நேச்சார் படையெடுத்து வந்து எருசலேமை முற்றுகையிட்டான் (எரே. 52:4-5) அப்போது அவன், அரசகுடும்பத்தினருட்பட அநேகரைச் சிறைபிடித்து, பாபி லோனுக்குக் கொண்டு சென்றான். (II இரா. 24:14-16) யூதாவில் மீந்திருந்த சொற்ப ஜனத்தை **கதலியாவிடம்** ஒப்படைத்தான். நெபுக்காத்நேச்சர், தனது அரசாட்சியின் 7-வது வருடத்தில் எருசலேமிலிருந்து 3023 யூதர்களையும், 18-வது வருடத்தில் 832 பேரையும், 23-வது வருடத்தில் 30 பேரையும் பாபிலோனுக்கு கொண்டு சென்றான். அவனது படைத்தலைவனான **நெபுசரதான்** என்பவன் 745 யூதர்களை அங்கிருந்து கொண்டு சென்றான். (ஆகமொத்தம் 4600 பேர்கள் - எரே. 52:28-30). அதன் பின்பு, **இஸ்மவேல்** என்பவன், தன்னுடன் பத்துப்பேர்களை அழைத்துக் கொண்டு எருசலே முக்கு வந்தான். அவன், கெதலியாவைக் கொன்றுவிட்டு, மிஸ்பாவில் அவனுடன் வாழ்ந்து கொண்டிருந்த யூதர்களையும், கல்தேயர்களையும் கொன்றான். அங்கு தப்பிப்பிழைத்தவர்கள் எகிப்துக்கு தப்பிச் சென்றனர் (II இரா. 25:25, 26). **எரேமியா** அவர்களை தடுத்தான் (எரே. 42:19). எரேமியாவை கி.மு. 587-ல் யோகனான் என்பவனும், சில யூதத்தலைவர்களும் வலுக்கட்டாயமாக எகிப்துக்கு அழைத்துச் சென்று அங்கு அவர்கள் **தாப்பேனில்** குடியேறினார்கள். போர் வீரர்கள் குடியேறிய **எப்** எனும் நகரம் தேவாலய நகரமாயிற்று. (இஸ்ரவேலரோ கி.மு. 605-582 வரைக்கும் பாபிலோனில் கைதிகளாக இருந்தார்கள்.)

## 14. இஸ்ரவேல் நாடும், ஆறாவது நூற்றாண்டின் வல்லரசுகளும்

**பெர்சிய நாடு,** தற்போதைய **ஈரான்** நாட்டைக் குறிக்கும். அன்றைய பெர்சிய வல்லரசு அநேக நாடுகள் இணைந்து உருவான நாடாகும். மேற்கே **ஆசியா மைனர்** துவக்கி கிழக்கே **இந்து சமவெளி** வரைக்கும் அது பரவியிருந்தது. அதன் வட எல்லை **ருஷ்யா** வரைக்கும், தென் எல்லை எகிப்து, **பெர்சிய உட்கடல்** மற்றும் ஓமான் கடல் வரைக்கும் இருந்தது.

# நெகேமியாவின் காலத்தில் எருசலேம்



**கோரேசு** என்கிற பெர்சிய ராஜா கி.மு. 550-ல் மேதியர்களை (The Medes) வென்றான். கி.மு. 546-ல் சர்தையைத் (Sardis) தோற்கடித்தான். கி.மு. 539-ல் அவன் பாபிலோனை வென்றான். பாபிலோனை வென்ற பின்பு அவன் அங்கு வாழ்ந்த யூதர்களுக்கு தங்கள் தாய் நாட்டிற்கு திரும்பிச்சென்று, எருசலேம் தேவாலயத்தைக் கட்ட அனுமதி அளித்தான். அத்துடன் தேவாலயத்தினின்று எடுத்து வந்த பொன் மற்றும் வெள்ளியையும், தேவாலயப் பணிகளுக்குத் தேவையான பொருட்களையும் கூட தங்களுடன் அவர்கள் எடுத்துச் செல்லும்படி அவர்களுக்கு கட்டளையிட்டான். (எஸ்றா. 1:2-4). முதலில் **சேஷ்பசாரும்** பிறகு **செருபாபேலும்,** கி.மு. 537, கி.மு. 522 ஆகிய வருடங்களில் இஸ்ரவேல் மக்களை எருசலேமுக்கு அழைத்துச் சென்றார்கள். கி.மு. 520-ல் தேவாலயம் கட்டப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டது. 458-ல் **அர்தசஷ்டா** என்கிற அரசன் (King Artaxerxes) தேவாலய ஊழியங்களை பொறுப்பேற்க, **எஸ்றாவை** எருசலேமுக்கு அனுப்பிவைத்தார். எருசலேமைச் சுற்றியுள்ள மதில்கள் யாவும் சிதிலமடைந்து, குப்பைமேடுகளாகக் காணப்படுவதை கேள்வியுற்ற பெர்சிய அரசனின் பானபாத்திரக்காரனான **நெகேமியா,** ராஜாவாகிய அர்தசஷ்டாவின் அனுமதியுடன் கி.மு. 444-ல் எருசலேமுக்குச் சென்றான். ஆனால் அலங்கத்தை (கோட்டை மதில்) கட்ட ஆரம்பித்தவுடனேயே, சமாரியாவின் ஆளுநரான **சன்பல்லாத்** தன்னுடன் மேலும் சிலரைச் சேர்த்துக்கொண்டு, வேலைகளை தடுத்து நிறுத்த முயன்றான். (நெகே. 4:6-8). தேவ விசுவாசத்தில் உறுதியாயிருந்த ஜெபவீரனான நெகேமியா, வெகுவிரைவில் மிகப் பிரம்மாண்டமான மதிற்சுவரை கட்டி முடித்து பிரதிஷ்டை பண்ணினான். பாபிலோன் வல்லரசை வென்று வெற்றிக் கொடி நாட்டியிருந்த பெர்சிய அரசு, பின்பு **மகா அலெக்சாண்டர்** முன்பு தோல்வியைத் தழுவியது.

## 15. புதிய, பழைய ஏற்பாடுகளின் இடைப்பட்ட காலம்

கி.மு. 750-ல் பலஸ்தீனாவைக் கைப்பற்றிய **அசீரியப் பேரரசு** முதல், கி.மு. 331-146 வரைக்கும் ஆட்சி புரிந்த **கிரேக்கப் பேரரசு** வரைக்குமுள்ள நான்கு வல்லரசுகளுக்கு மிடையே பலஸ்தீனா பந்தாடப்பட்டது என்று நாம் வரலாற்றில் காண்கிறோம். கி.மு. 323-ல் அலெக்சாந்தரின் மரணத்திற்குப் பின் அவரது நான்கு படைத்தளபதிகள், அவரது நாட்டை நான்கு பிரிவுகளாகத் துண்டாடி, ஒவ்வொருவரும் தங்களது அரச பரம்பரையை (dynasty) ஏற்படுத்தி ஆண்டனர். இவைகளில் இரண்டு பாலஸ்தினாவை மாறிமாறி ஆண்டது. (டாலமிகள், செலயூசிடுகள்) கி.மு. 323 முதல் கி.மு. 198 வரைக்கும் டாலமிகளுக்கும், அதன் பின்பு, செல்யூக்கஸ் அரசு டாலமிகளைத் தோற்கடித்தபோது செல்யூக்கஸ் அரசுக்கும் பலஸ்தீனா கைமாறப்பட்டது. ஆனால் **மக்கபேயர்கள்** என்கிற **யூத ஆஸ்மோனிய குடும்பம்** (The Hasmonean Rulers) கி.மு. 143-ல் பலஸ்தீனாவைக்

# நான்கு பேரசுகள்


GREEK EMPIRE
331-146 B.C.—
Alexander conquered
Persian Empire
ASSYRIAN
EMPIRE
750-612 B.C.—
Conquered Israel
Nineveh
ASSYRIAN AND BABYLONIAN
EMPIRES
Babylon
Shushan
PERSIAN EMPIRE
539-331 B.C.—
Jews allowed to
return from Exile.
Jerusalem
EGYPT
BABYLONIAN
EMPIRE
612-539 B.C.—
Conquered Judah;
beginning of Exile.
INDIA

# ஆஸ்மோனியப் பேரரசு



MEDITERRANEAN SEA
PHOENICIA
Tyre
Ptolemais
Antiochia
Gischala
Seleucia
Sea of Galilee
Gabara
Sepphoris
Geba
Mount Tabor
Philoteria
Hippos
Abila
Dium
Gadara
GALILEE
Dora
Strato's Tower
Scythopolis
GILEAD
Pella
SAMARIA
Jordan
Samaria
Shechem
Gerasa
Apollonia
Mount Gerizim
Joppa
Arimathea
PEREA
Lydda
Philadelphia
JUDEA
Jamnia
Emmaus
Jericho
Samaga
Jerusalem
Azotus
Medeba
Ascalon
PARALIA
Beth-zur
Marisa
Anthedon
Hebron
Dead Sea
Gaza
En-gedi
Orda
Gerar
IDUMEA
MOAB
Raphia
Beersheba
Malatha
Rhinocorura
NABATAEA
Zoar
Independent Judea after Jonathan's campaigns, 142 B.C.
Land conquered by Simon, 142-135 B.C.
John Hyrcanus I, 128-104 B.C.
Aristobulus I, 104-103 B.C.
Alexander Jannaeus, 103-76 B.C.
Boundary of Hasmonean kingdom, 76 B.C.
Hellenistic city
0 25 50 km
0 10 20 30 miles

# செலூக்கியர்களின் கீழ் பலஸ்தீனா



# தாலமியர்கீழ் பலஸ்தீனா



கைப்பற்றியது (Macabean Revolt). கி.மு. 63-ல், **பாம்பே**யின் கீழ் பலஸ்தீனா வந்த பின்பு, புதிய ஏற்பாட்டுக்காலம் முழுவதும் ரோமர்களே அங்கு ஆட்சி புரிந்தார்கள்.

# 16. யூதர்களின் கலாச்சாரத்தில் கிரேக்க, மற்றும் பிற நாகரீகங்களின் தாக்கம்

## மகா அலெக்சாந்தரின் படையெடுப்பு

கி.மு. 336-ல், மக்கெதோனியாவின் அரசனாகிய **பிலிப்பு** கொலை செய்யப் பட்டபோது, பத்தொன்பது வயதே நிரம்பியிருந்த அவனது மகன் **அலெக்சாண்டர்** (Alexander The Great) பட்டத்திற்கு வந்தான். மதிநுட்பமும், வீரமும் நிறைந்த அவன், இரண்டே வருடங்களில் பெர்சியாவை வென்றான். பின்பு அவன் வெகு விரைவில் ஆசியா மைனர் துவக்கி எகிப்து நாடு வரைக்கும் உள்ள நாடுகளைத் தனது ஆட்சிக்குக் கீழ்ப்படுத்தினான். பாலஸ்தீனா தேசமும், யூதர்களும் அவனது ஆட்க்குட்பட்டபோது, யூத மதத்தலைவர்களைச் சந்தித்து, அவர்களுக்குரிய மரியாதை அளித்த அவன் யூத சமய வழிபாட்டு முறைமைகளில் தலையிடவில்லை.

கி.மு. 331-ல், அவன் பெர்சிய அரசின் கீழிருந்த அனைத்து நாடுகளையும் தனது ஆதிக்கத்திற்கு கீழ்ப்படுத்தினான். அவ்வாறு விரிவாக்கப்பட்ட தனது பேரரசை அவன் **'கிரேக்க மயமாக்க'** (Hellenism) திட்டமிட்டு அதைச் செயல்படுத்தினான். அதன் விளைவாக அனைவரும் **கிரேக்க மொழியைக்** கற்றனர். ஆனால், அவன் கி.மு. 323-ல் தனது இளவயதிலே மரணமடைந்தான். அவனது நாடு, அவனது நான்கு போர் தளபதிகளிடையே பங்கிடப்பட்டபோது அவனது போர் தளபதிகளில் ஒருவனான **டாலமி** (Ptoleny), பலஸ்தீனாவைத் தனது ஆதிக்கத்திலுள்ள நாட்டுடன் இணைத்துக் கொண்டான்.

## டாலமிகளும், செல்யூசிடுகளும், மக்கபேயர்களின் புரட்சியும்

டாலமியின் அரசாட்சிக் காலத்தில் யூதர்கள் மிக சுதந்திரமாகவே வாழ்ந்தார்கள். ஆனால், அந்நாட்களில் யூதர்களின் வாழ்க்கை முறைகளில் **கிரேக்க கலாச்சாரத்தின் தாக்கம்** காணப்பட்டது. இக்காலத்தில் தான் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பு **செப்துவஜன்து** (Septuagint) என்கிற பெயரில் செய்யப்பட்டது. ஆனால் **அன்டோனிக்கஸ் IV** என்கிற **எப்பிபேன்ஸ்** அரசனானபோது, யூதர்கள் மிக அதிக இன்னல்களுக்குட் படுத்தப்பட்டனர். யூதர்கள் மத்தியிலும், ஆசாரியர்களிடையேயும் பிளவுகள் உண்டாயின. யூதர்கள் அவ்வரசனை எதிர்க்கத் துணிந்தபோது, அவன் அவர்களை

இரும்புக்கரத்தால் ஒடுக்கினான். ஆனால், அவனால் ஏற்பட்ட சித்திரவதைகளும், வேதனைகளும் அவர்களுக்கு விடுதலைகிடைக்கும் வாய்ப்பையும் அளித்தது!

**செல்யூசிடுகள்,** தங்களது வழிபாட்டு முறைகளைப் பின்பற்றும்படி யூதர்களை நெருக்கினார்கள். அவ்வாறு செய்ய மறுத்த **மத்தியாஸ்** (Mattathias) எனும் வயதான ஆசாரியன், தங்களை நெருக்கிய அதிகாரியையும், அவனுக்கு உதவியாக இருந்த ஓர் யூதனையும் கொலை செய்துவிட்டு, தனது ஐந்து மகன்களுடன் மலைநாட்டுக்கு ஓடிப்போனான். அவர்களுக்கு அநேகர் ஆதரவு அளித்தனர். **ஹேஸிடிஸ்** கூட்டத்தினர் (Hasidim) அவர்களுடன் இணையவே, புரட்சி வெடித்தது. அவனது மூன்றாவது மகன் **யூதாஸ் மக்கபேயஸ்** (The Hammerer) எருசலேமை மூன்று வருடத்திற்குள் கைப்பற்றி னான். தேவாலயம் சுத்திகரிக்கப்பட்டு, மீண்டும் அர்ப்பணம் செய்யப்பட்டது. இதுவே **ஹனுக்கா** (The Jewish Feast of Hanukkah) என்கிற **சுத்திகரிப்பின் விழாவாகக்** கொண்டாடப்பட்டு வருகிறது. மதசுந்திரம் பெறுவது மட்டுமே நோக்கமாகப் போராடிய ஹேஸிடிஸ் கூட்டத்தினர், எருசலேமைக் கைப்பற்றிய பின்பு மக்கபேயர்களிடம் விடைபெற்று பிரிந்து சென்றார்கள். ஆனால், அரசியல் சுதந்தரம் பெறுவதை வற்புறுத் திய **யூதாஸ்** (Judas), தொடர்ந்து போராடினான். போரில் அவன் கொல்லப்பட்டான். அப்போது அவனது சகோதரன் **ஜோனத்தான்** (Jonathan) தலைமையேற்றான். அவனும் போரில் மடியவே, அவனது சகோதரன் **சீமோன்** (Simon) தலைமையேற்றான். அவனும் போரில் கொல்லப்பட்டான். அவனது மகனான **ஜான்ஹிர்கேனஸ்** (John Hyreanus) **படைத்தலைவனாகவும், பிரதான ஆசாரியனாகவும்** பொறுப்பேற்றான். அவன், யூத நாட்டின் எல்லைகளை விரிவாக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்தினான். கி.மு. 104-103-ல், **அரிஸ்டோபுலஸ் I**, **சலோமி அலெக்ஸான்ட்ராவை** (Salome Alexandra) மணந்து, **யூத அரசனாக** பட்டம் சூட்டிக் கொண்டான். அவனது மரணத்திற்குப் பின் சலோமி, அவனது சகோதரன் **அலெக்சாண்டர் ஜானேயஸ்-ஐ** (Alexander Jannaeus) மணந்தாள். அவன் ராஜாவாகவும் பிரதான ஆசாரியனாகவும் இருந்து, நாட்டின் எல்லைகளை மிகவும் விரிவாக்கினான். அப்போது அந்நாடு, தாவீதின் அரசின் அளவுக்கு பெரியதாகியது. ஆனால், பிரதான ஆசாரியன் கடைபிடிக்க வேண்டிய ஆசாரங்களை அவனால் செய்ய முடியாமற் போனதால், அவனால் பிரதான ஆசாரியனாக செயல்பட முடியவில்லை. அவனது மரணத்திற்குப் பின், (கி.மு. 76-67), சலோமி அலெக்ஸான்ட்ரா அரசியாக முடிசூட்டப்பட்டாள். ஆனால் அவள் பிரதான ஆசாரியனாக செயல்பட முடியாததால், **அவளது மகன் ஹிர்கேனஸ் II (Hyrcanus II) பிரதான ஆசாரியனாகச்** செயல்பட்டான். **இவ்விதமாக, இவ்விரண்டு பொறுப்புகளும், வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டன.** சலோமியின் மரணத்திற்குப்பின் ரோமப் பேரரசு பலஸ்தீனாவின் மேல் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தபோது, பலஸ்தீனாவின் அரசியல் முறைகளில் அநேக மாற்றங்கள் நிகழ ஆரம்பித்தன.

# புதிய ஏற்பாட்டுக் காலத்தில் ரோமப் பேரரசு



# இஸ்ரவேல் வரைபடம்



தீரு பட்டணம்
மாக்கா
தாண்
ஆசோர்
கலிலேயா
கலிலேயா கடல்
பாசான்
அஸ்தரோத்
கீசோன் ஆறு
கோலன்
கர்மேல் மலை
ஏபோர் மலை
யோர்தான் ஆறு
ஏத்ரே
ராமோத்
தார்
மெகிதோ
கீலேயாத்
கில்போவா மலை
பெத்சான்
சாரோன்
தோத்தான்
யாபேஸ்
சமாரியா
சாரோன் சமவெளி
ஏபேல் மலை
பெனியேல்
கெர்சீம் மலை
யோப்பா
ஆப்பெக்
சீலோ
திம்னாத்
யாசேர்
பெத்தேல்
ஆயி
மிக்மாஸ்
மிஸ்பா
கேசேர்
கில்கால்
கிபியா
எக்ரோன்
எரிகோ
கீரியாத் அரீம்
எருசலேம்
நேபோ மலை
அஸ்தோத்
பெத்லகேம்
அஸ்கலோன்
ஆத்ரோத்
மரேசா
சவக்கடல்
காசா
கேரார்
சிக்லாக்
மோவாப்
ஆராத்
பெயர்செபா
நேகேவ் பாலைவனம்
0 10 20 30 40 Km
0 5 10 15 20 25 M

## ரோமர்களின் ஆட்சி

ரோமர்கள் கி.மு. 63 முதல் 20 கி.பி. வரைக்கும் பலஸ்தீனாவை ஆண்டார்கள் - **அந்திப்பத்தர்** (Antipater) பலஸ்தீன ஆளுநராகவும், **பாசேல்** (Phasael) யூதேயாவின் ஆளுநராகவும், **ஏரோது** (Herod) கலிலேயாவின் ஆளுநராகவும் நியமிக்கப்பட்டனர். கி.மு. 43-ல், அந்திப்பத்தர், பார்த்தியர்களால் கொல்லப்பட்டான். **ஆன்டாகோனஸ்** (Antagonus) பலஸ்தீனாவின் அரசனானான். கி.மு. 40-ல் ரோம ஆட்சிப் பேரவை (senate) **ஏரோதை** பலஸ்தீனாவின் அரசனாக அறிவித்தது. அவன் பார்த்தியர்களை நாட்டைவிட்டு துரத்தினான். எருசலேம் தேவாலயத்தை மிக பிரம்மாண்டமாகக் கட்டி முடித்தான். **இயேசு பிறந்த காலம் அதுவே.** (மத். 2:1-18; லூ. 1:5) 'யூதருக்கு ராஜாவாக ஒரு குழந்தை பிறந்திருப்பதாக' தகவலறிந்தபோது, குழந்தை இயேசுவைக் கண்டு பிடித்து கொலை செய்ய முடியாமல் போனதால், தற்காப்புக்காக பெத்லெகேமிலுள்ள பிஞ்சு குழந்தைகளையெல்லாம் ஈவிரக்கமின்றி கொலை செய்ய உத்தரவு பிறப்பித்தவன் இவனே! (மத். 2:16-18). அவன் கி.மு. 4-ல் மரணமடைந்தான். அவனது மரணத்திற்கு பின் **அந்திபாஸ்** (Antipas) (கி.மு. 4 - A.D. 39), **கலிலேயா மற்றும் பெரேரா** நாடுகளின் அரசனானான். **பிலிப்பு** (Philip) (கி.மு. 4 - கி.மு. 39) **கலிலேயாவின் புறஜாதிகளுக்கு** (கலிலேயாக் கடலின் வடகிழக்கு பாகம்) அரசனாகவும், **ஆர்கேலாஸ்,** (Archelaus) **யூதா-சமாரியா** நாடுகளுக்கு அதிபதியாகவும் ஆட்சி புரிந்தனர்.

# 17. எபிரெய கலாச்சாரத்திலும், வரலாற்றிலும் பிற நாகரீகங்களின் தாக்கங்களின் மூலம் ஏற்பட்ட 'மாற்றங்கள்'

எபிரேய கலாச்சாரம் மற்றும் வரலாற்றில் ஆதிக்கம் செலுத்திய நாகரீகங்களைக் குறித்த அறிவு நமக்கு இருந்தால் மட்டுமே வேதத்தில் நாம் காணும் **ஆசாரங்கள், சட்டங்கள், வாழ்க்கை விதிமுறைகள்** ஆகியவற்றை புரிந்துகொள்ள முடியும். ஆப்பரிக்கா மற்றும் ஆசியாவிலுள்ள பெரும் நதிகளான **நைல்** (Nile), **யூப்பரட்டீஸ்** (Euphrates), **டைக்ரிஸ்** (Tigris) ஆகியவற்றின் தாழ்வான பகுதிகளில் மிகப்பழமையான நாகரீக வளர்ச்சி காணப்பட்டது. ஐரோப்பிய நாடுகள் தங்களது கலாச்சாரத்தில் பின்தங்கியிருந்த அக்காலகட்டத்தில், **எகிப்து** (Egypt) மற்றும் **மெசப்பொத்தேமியா** (Mesopotamia) நாடுகளில் நாகரீகம் மிக முன்னேற்றமடைந்திருந்தது. எகிப்திய நாகரீகம் மிகப்பழைமையானதாகும்.

எகிப்து, **'நைல் நதியின் மகள்'** என்று அழைக்கப்படுவது மிகப்பொருத்தமாகும். அந்நாட்டின் வளமையும், செழிப்பும் அநேக நாடோடி இன மக்களை அங்கு

குடிபெயர்ந்து சென்று, வேளாண்மை செய்து வாழ சுண்டி இழுத்தது. எகிப்தைச் சுற்றியுள்ள கடலும், தரிசு நிலங்களும், மணற்பாங்கான பாலைவனமும், வனாந்தர வெளியும் அத்தேசத்திற்கு ஒரு பாதுகாப்பான அரணாக அமைந்திருந்ததால், எதிரிகளின் திடீர் படையெடுப்புகளிலிருந்து அது பாதுகாக்கப்பட்டது. எகிப்தின் அரசன், **பார்வோன்** (The Pharaoh) என அழைக்கப்பட்டான். கி.மு. 1600 முதல் கி.மு. 1000 வரைக்கும் அந்நாடு சஹாரா பாலைவனம் (Sahara Desert) முதல் **யூப்பரட்டிஸ்** வரைக்கும் பரவிய ஒரு பேரரசாக திகழ்ந்தது. கி.மு. 11-ம் நூற்றாண்டில் எகிப்திய பேரரசு, **அசீரியப்** பேரரசாலும், (Assyrian Empire) **பெர்சியப்** பேரரசாலும் (Persian Empire) பின்பு **மக்கதோனியப் பேரரசாலும்** (Macedonian Empire) கைப்பற்றப்பட்டது. மாசிடோனியப் பேரரசர் **மகா அலெக்சாந்தரின் மறைவுக்குப்பின் தாலமிகள்** (Ptolemis) **எகிப்தின் மீது அதிகாரம் செலுத்தினார்கள்.** எகிப்தில் நாகரீகம் வளர்ந்த காலகட்டத்தில், மேற்கு ஆசியாவிலுள்ள யூப்பரட்டிஸ், டைக்ரிஸ் நதிகளினிடையே உள்ள நிலப்பகுதியான **மெசப்பொத்தேமியா**வில் ஒரு மிகச்சிறந்த நாகரீகம் காணப்பட்டது. மெசப்பொத் தேமியாவின் வடபாகம் **சிரியா** (Syria) எனவும், தென்பாகம் **பாபிலோனியா** (Babylonia) என்றும் அழைக்கப்பட்டது. மெசப்பொத்தேமியாவைச் சுற்றி இயற்கையான பாதுகாப்பு இல்லாமல் இருந்ததால், அந்நாடு அடிக்கடி எதிரிகளின் தாக்குதல்களுக்கு ஆளாகியது. ஆகவே, அங்கு பலவிதமான நாகரீகங்கள் தோன்றி மறைந்தவண்ணமாகவே இருந்தது. **சுமேரியர்கள்** அந்நாட்டை கைப்பற்றி, கி.மு. 2700 வரைக்கும் ஆட்சி புரிந்தனர். அதன்பின்பு **செமட்டிக் இனத்தைச்** சேர்ந்த நாடோடிகளான **'அக்காடியர்கள்'** அந்நாட்டைக் கைப்பற்றி 200 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தார்கள். அப்பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் **'ஏலாமியர்'** எனும் போராளிகளான ஒரு பிரிவினர் மெசப்பொத்தேமிய நாட்டின் தென் பகுதியில் ஆட்சி புரிந்தார்கள். தேசத்தின் வடபகுதியில், சீரிய தேசத்திலிருந்து வந்த **அமோரியர்கள்** (Amorites), **பாபிலோன்** (Babylon) என்னும் கிராமத்தில் குடியேறினார்கள், பின்பு **ஹம்முரபி** (Hammurabi) என்கிற பேரரசன் பாபிலோனைத் தலைமையகமாகக் கொண்டு **பாபிலோன் பேரரசை** (Babylon Empire) நிறுவினான். கி.மு. 2100-ற்குள் மெசப்பொத்தேமியா நாடு முழுவதும் அவனது ஆட்சிக்குட்பட்டது. அவனால் இயற்றப்பட்ட **ஹம்முரபியின் சட்டங்கள்** (Code of Hammurabi) அநேக நாடுகளில் பின்பற்றப்பட்டன. (மோசே அளித்த எபிரெய சட்டதிட்டங்களிலும் கூட இச்சட்டங் களின் தாக்கம் இருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்).

சீரியாவிலிருந்து வந்த செமட்டிக் இனத்தைச் சேர்ந்த **அசீரியர்கள்** (The Assyrians) கி.மு. பதினோராவது நூற்றாண்டில் **டைக்ரிஸ்** (River Tigris) வரையுள்ள நாடுகளில் குடியேறினார்கள். கி.மு. 1169-ல் அவர்கள் பாபிலோனியர்களுக்கு எதிராகப் போர் தொடுத்தார்கள். கி.மு. ஏழாவது நூற்றாண்டின் இறுதியில் **கல்தேயர்களால்** (The Chaldeans) அவர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். கி.மு. 612-ல் கல்தேயர்கள், **மேதியர்கள்** (The Medes) உதவியுடன், அசீரியப் பேரரசை நிர்மூலமாக்கினார்கள். ஆனால், கி.மு.

539-ல், **மேதியர்களும் பெர்சியரும் இணைந்து கல்தேயப் பேரரசுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்கள்.** மெசப்பொத்தேமியா நாட்டில் அநேக ஜாதிகளின் பேரரசுகள் தோன்றி மறைந்ததனால், அங்கு நாகரீகம் மிகவும் வளர்ச்சியடைந்தது.

**யூதர்கள்** (The Jews) எனப் பிற்காலத்தில் அழைக்கப்பட்ட **எபிரெயர்கள்** (The Hebrews), **செமட்டிக்** (Semetic) இனத்தைச் சேர்ந்தவர்களாவர். அவர்கள் ஆசியாமைனரிலிருந்து புறப்பட்டு கானானை வந்தடைந்ததாக வரலாற்று நூல்களில் காணப்படுகிறது. கானானில் குடியேறிய பின்பு அவர்கள் முதலாவது **நியாயாதிபதிகளாலும்** (The Judges), **ஆசாரியர்களாலும்** நியாயம் விசாரிக்கப்பட்டு வழிநடத்தப்பட்டனர். பின்பு கி.மு. 11-வது நூற்றாண்டிலிருந்து **அரசர்களால்** ஆளப்பட்டனர். **சாலொமோன்** என்கிற அரசனது மரணத்திற்குப்பின் அவர்களது நாடான **இஸ்ரவேல் நாடு (பலஸ்தீனா),** தெற்கு பாகம் **யூதா** (Judah) என்றும், வடபாகம் **இஸ்ரலே்** (Israel) என்று பிரிக்கப்பட்டு இரு அரசர்களால் ஆட்சி செய்யப்பட்டது. அசீரியர்கள் இஸ்ரேல் நாட்டின் மீதும், கல்தேயர்கள் யூதா நாட்டின்மீது படையெடுத்தார்கள். இஸ்ரேல் நாட்டுமக்களை தோற்கடித்த அசீரியர்கள், அவர்களை சிறைபிடித்து வெகு தொலைவிலுள்ள நாடுகளுக்கு நாடுகடத்திவிட்டு, அன்னிய நாட்டு மக்களைக் கொண்டுவந்து அங்கு குடியேற்றினார்கள். அவர்கள் **சமாரியர்கள்** (The Samaritans) என அழைக்கப்பட்டார்கள்.

சிறிது காலத்திற்குப்பின், கி.மு. 586-ல், பாபிலோனிய அரசனான **நேபுக்கத்நேச்சரால்** (Nebuchadnezzar) யூதா மக்கள் சிறைபிடிக்கப்பட்டு, பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். ஆனால், பாபிலோனை வென்ற பெர்சிய பேரரசின் (Persian Empire) அரசனாகிய **கோரேசின்** (Cyrus) ஆட்சிகாலத்தில், யூதர்களைத் தங்கள் தாய்நாட்டிற்கு திரும்பிச் செல்ல அவன் அனுமதி அளித்தான். கி.மு. 550-ல் பெர்சிய அரசன் கோரேசு **மேதிய** நாட்டை (Mede) **பெர்சிய** நாட்டுடன் இணைத்தான். ரோமப் பேரரசு (The Roman Empire) விரிவாக்கப்பட்டு, தனது ஆதிக்கத்தை அண்டை நாடுகளின் மீது செலுத்திய போது, யூதர்களின் நாடாகிய பலஸ்தீனா, **ரோமப் பேரரசின்** ஆட்சிக்குட்பட்டது.

**கிரேக்க நாகரீகத்தின் தாக்கம்,** அதைச் சுற்றியுள்ள ஐரோப்பிய நாடுகளின் கலாச்சாரங்களில் மிகவும் அதிகமாகக் காணப்பட்டது. கி.மு. 2000-1500 வரையான காலகட்டத்தில், கிரேக்கர்களின் ஆட்சி **ட்ராய்** (Troy) மற்றும் **ஆசியா மைனரின்** (Asia Minor) பிற நாடுகளுக்குப் பரவியது. ஆரிய இனத்தைச் சேர்ந்த அவர்கள் ஓர் கலப்பு ஜாதியாக இருந்தனர். கி.மு. 7-ம் நூற்றாண்டிற்குள் கிரேக்க தீபகற்பத்திலும், அதைச் சுற்றியுள்ள நாடுகளிலும் அவர்கள் ஆட்சி பரவி விட்டிருந்தது. ஆனால் அவ்வாட்சியில் நிலவிய ஒற்றுமையின்மையின் காரணமாக அது வீழ்ச்சியடைந்தது. கி.மு. 4-ம் நூற்றாண்டில் மக்கெதோனிய அரசன் அதன்மேல் படையெடுத்தான். கி.மு. 359-356 வரை மக்கதோனியாவை **பிலிப்பு** (Philip) மன்னன் ஆண்டுவந்தான். அவனது மகன் **அலெக்சாந்தர்** (Alexander) மன்னனானபோது, கி.மு. 334-ம் ஆண்டு முதல் அநேக

நாடுகளை அவன் போரில் வென்றான். இந்தியா வரைக்குமுள்ள அநேக நாடுகள் அவனது ஆட்சியின் கீழ் வந்தது. அவன், தான் வென்ற நாடுகளை **கிரேக்கமயமாக்க** நினைத்தான். கிரேக்க மொழி, கிரேக்க கலாச்சாரம் ஆகியவற்றை அவன் பரப்பியது மூலம், **எபிரெயர்களிடையேயும் கிரேக்க மொழி பரவியது. பழைய ஏற்பாட்டு நூல்கள் கிரேக்க மொழியில் எழுதப்பட்டன. ரோம நாகரீகம் கூட கிரேக்க நாகரீகத்தின் பிரதிபலிப் பாகவே இருந்தது.**

**ரோமாபுரி** (Rome) எனும் நகரம், முதலில் கிரேக்க நகரங்களைப் போன்ற ஒரு சிறிய நகரமாகவே இருந்தது. **டைபர்** (River Tiber) நதிக்கரையில் அது கட்டப்பட்டிருந்தது. கி.மு. 753-ம் ஆண்டு இரட்டை சகோதரர்களாகிய ரோமுலஸ், ரெமுஸ் என்பவர்களால் அது நிறுவப்பட்டது என்று நம்பப்படுகிறது. **இத்தாலி** (Italy) யில் குடியேறிய (லத்தீனியா் உட்பட) அநேக ஜாதிகளின் சங்கமதலமாக ரோமாபுரி விளங்கியது. கி.மு. 270-ற்குள் தென் இத்தாலி நாடு முழுவதும் ரோமப் பேரரசின் கீழ் கொண்டு வரப்பட்டது. கி.மு. 197-ல் **மக்கெதோனிய அரசனை (Mecedonian King) ரோமர்கள் வென்றார்கள்.** பின்பு கிரேக்க நாட்டின் மீது படையெடுத்து, **அத்தேனே** (Athens) பட்டணத்தை ஆள ஓர் ஆளுநரையும் நியமித்தார்கள். கி.மு. 190-ல் ஆசியாமைனரையும் அவர்கள் கைப்பற்றி னார்கள். மக்கெதோனியாவும், ஸ்பெயின் நாடும் (கி.மு. 133-ல்) அவர்களது ஆட்சியின் கீழ் வந்தது. ரோமப் பேரரசு இவ்வாறு மிகவும் வலுவடைந்து, விரிவாக்கப்பட்டு, **'மெடிட்டரேனியன் நாடுகளின் எஜமானி'** என வர்ணிக்கப்படுமளவு புகழ்பெற்றது.

கி.மு. 29-ல் **அக்டேவியன்** (Octavian) ரோமப் பேரரசின் அரசனானான். ரோமப் பேரரசு, அவனுக்கு **'இராயன்'** என்றும், **அகஸ்து** (Augustus Meaning Magestic) என்று பட்டங்கள் வழங்கி கௌரவித்தது. **அகஸ்து இராயன் ஆட்சியின்போது இயேசு கிறிஸ்து பெத்லெகேமில் பிறந்தார்.** அதன்பின்பு ஆட்சி புரிந்த முதல் நான்கு தலைமுறை இராயர்களும் இவனது சந்ததியினராவார்கள். அவர்கள் Tiberius, Cius, Claudius, Nero ஆகியோராவார்கள். கி.பி. 70-79 வரைக்கும் ஆண்ட பேரரசன் **வெஸ்பேசியன்** ரோமாபுரியிலுள்ள, மிகப்பிரம்மாண்டமான கற்களால் கட்டப்பட்ட, **கொலேசியம்** (Collosseum) என்கிற அரங்கை (theatre) கட்டினான். கி.பி. 96-190 வரைக்கும் ஐந்து அரசர்கள் ரோம நாட்டை ஆண்டார்கள். கி.பி. 284-305 வரைக்கும் **டயக்லீசியன்** (Diocletian) மன்னன் ரோமப்பேரரசை ஆண்டான். அதன்பின்பு அதன்மீது **கான்ஸ்டன்டைன் மன்னன்** (Emperor Constantine) ஏகாதிபதியாக ஆட்சி புரிந்தான்.

கி.பி. 4-ம் நூற்றாண்டில் ரோம ஆட்சியில் ஒரு புதிய திருப்பம் நடந்தது. **இரு பேரரசர்கள்** ரோம அரசை ஆள ஆரம்பித்தார்கள். அவர்களில் ஒருவர் **கான்ஸ்டாண்டி நோபிளை**யும், ஒருவர் **ரோமாபுரியை**யும் தலைநகரங்களாகக் கொண்டு ஆட்சி புரிந்தார்கள். பேரரசர் **ஜஸ்டினியன்** கி.பி. 6-வது நூற்றாண்டில் இரு அரசுகளையும் மீண்டும் **ஒன்றாக இணைத்தான்.** ஆனால் அவனது காலத்திற்குப் பின் **மீண்டும் அது**

**இரண்டாக உடைந்தது.** ரோமப்பேரரசின் மேற்கு பாகம் அநேக படையெடுப்புகளுக்கு இரையானது. ஆனால், கி.பி. 1453-ல், கான்ஸ்டான்டிநோபிளின் வீழ்ச்சி வரைக்கும், கிழக்கு ரோமப் பேரரசு நிலைகொண்டது.

# 18. யூதர்களுக்கு பலஸ்தீனா தேசம் எப்படி கிடைத்தது?

## வரலாற்று பின்னணி

ஏற்கனவே வாசித்து அறிந்தபடி மனித இனம் படைக்கப்பட்ட நாள் முதல், நோவாவின் காலத்தில் பேரழிவு நிகழ்ந்தது வரைக்கும் அவனது வாழ்க்கை தேவசித்தத்திற்கு விரோதமாக பாவம் நிறைந்ததாக காணப்பட்டதுமின்றி, நோவாவின் நாட்களுக்குப் பின்பும் மனிதன் பாவம் புரிந்துகொண்டேயிருந்தான். பாவ இச்சைகளால் இழுப்புண்டு, தேவனை விட்டு மெல்ல மெல்ல அகன்று, தங்களையும், அண்ட சராசரத்தையும் படைத்து பரிபாலனம் செய்த தேவனிடம் அவர்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கவில்லை. மகிமை நிறைந்த தேவனை உதறிவிட்டு மனிதனால் உருவாக்கப்பட்ட விக்கிரகங்களை ஆராதித்து, விக்கிரகாராதனையில் நடத்தப்பட்ட பாவ காரியங்களிலும் அவர்கள் ஈடுபட ஆரம்பித்தார்கள். இவர்களது நடவடிக்கைகளை கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த தேவன் மனம் உடைந்துபோனார். அந்த வேளையில் ஆபிரகாம் என்கிற மனிதனை அவர் தேர்ந்தெடுத்தார். (ஆதி. 12:1) தேவகட்டளைப்படி அவன், தனது ஒரே புதல்வனை தேவனுக்காக தியாகம் பண்ண முன்வந்தபோது, தேவன் அவனுக்கு தம் மேல் இருந்த பாசத்தையும், நம்பிக்கையையும் உணர்ந்தார். அப்பொழுது அவர் அவனிடம் உடன்படிக்கை பண்ணி, வாக்குத்தத்தங்கள் அருளி, அவனை ஆசீர்வதித்தார் (ஆதி. 17:4-8). ஆபிரகாமின் வாக்கு தத்தத்தின் மகனான ஈசாக்கின் மகன் யாக்கோபுக்கு தேவன் 'இஸ்ரவேல்' என்கிற பெயரை அளித்தார். 'இஸ்ரவேல்' என்கிற யாக்கோபின் பிள்ளைகள் தாம் இஸ்ரவேலர் என அழைக்கப்படும் யூதர்கள்.

பரிசுத்த வேதாகமத்தில், பலஸ்தீனா என்று அழைக்கப்படும் கானான் தேசத்தைக் குறித்தும், அதன் எல்லைகளைக் குறித்தும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. எகிப்து தேசம் முதல் யூப்பரட்டீஸ் நதிவரைக்குமுள்ள விசாலமான பூமியை ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் தேவன் உரிமையாக அளித்தார் என்றும், (ஆதி. 15:18-21) சாரா மூலமாக ஆபிரகாமுக்குப் பிறந்த வாக்குதத்தின் மகனாகிய ஈசாக்கின் தலைமுறையினருக்கு மட்டுமே அதை உரிமையாக்கிக் கொள்ளமுடியும் என்பதும் தேவன் ஆபிரகாமிற்கு அளித்த உறுதியான வாக்குத்தத்ததமாகும் (ஆதி. 17:19-22). ஆகவே, இஸ்ரவேலர் என்கிற யூதர்கள் தங்களுடைய முற்பிதாக்களுக்கு தேவன் அளித்த அந்த நாட்டை தங்களது நாடாக ஏற்றுக்கொண்டு அதன்மீது உரிமை கொண்டாடுகிறார்கள்.

ஆபிரகாமின் காலம் முதல் யாக்கோபின் காலம் வரைக்கும் அங்கு குடியிருந்த அவர்கள், கொடிய பஞ்சம் தங்களது நாட்டை தாக்கியபோது எகிப்திற்கு சென்று அங்கு கிட்டத்தட்ட 400 ஆண்டுகள் தங்கியிருக்கவேண்டிய சூழ்நிலை உருவாயிற்று. எகிப்தில் அவர்கள் வாழ்ந்த காலத்தில், அரசியலில் ஏற்பட்ட சில மாறுதல்களினால், எகிப்திய புதிய அரசர்களால் அவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். ஆகவே, அங்கிருந்து அவர்களை மீட்டு, மீண்டும் கானானில் கொண்டு சேர்க்கும் பொறுப்பை தேவன் மோசேக்கு அளித்தார். மோசேயின் தலைமையில் புறப்பட்டுச் சென்ற அவர்கள், தாங்கள் எகிப்தில் வாழ்ந்திருந்த காலகட்டத்தில் கானானில் குடியேறியிருந்த பெலவான்களாகிய அநேக ஜாதிகளை தோற்கடித்து மீண்டும் அங்கு தங்களது அதிகாரத்தை நிலை நிறுத்த தேவன் அவர்களுக்கு அற்புதமாக துணை நின்றார்.

## பலஸ்தீனா நாட்டை இழந்து தவித்த யூதர்கள்.

பலஸ்தீனாவில் வாழ்ந்து வந்த ஜனங்கள் விக்கிரகாராதனைக்காரர்கள் மட்டுமின்றி, விதவிதமான பாவங்கள் செய்து சீரழிந்து போனவர்களாகவும் இருந்தனர். ஆகவே அவர்களை முற்றிலுமாக அழித்துவிட்டுதான் அங்கு குடியேறவேணடும் என்பது தான் தேவன் அவர்களுக்கு அளித்திருந்த கட்டளையாகும். இதற்கு அவர்கள் கீழ்படிய வில்லை எனில் அவர்கள் பிற இன மக்களிடையே சிதறிப்போய் மிகவும் பரிதாபகரமான நிலைமைக்கு தள்ளப்படுவார்கள் என்றும் அவர் அவர்களை எச்சரித்திருந்தார். (லேவி. 26:14-39; 1 இராஜா. 9:6-8). ஆனால், மிக விரைவில் அவர்கள். தங்களை அதுகாறும் அற்புதமாக நடத்திவந்த தேவனை மறந்து விட்டு, பிற ஜாதிகளுடைய அருவருப் பானதும் வெட்கக்கேடானதுமான வாழ்க்கை முறைகளைப் பின்பற்றி நடக்க ஆரம்பித்தார்கள். தேவனைத் தன் உளமார நேசித்த தாவீது ராஜாவும், அவனுடைய புதல்வனான சாலொமோன் ராஜாவும் புகழின் உச்சிக்கு போய்விட்ட போதிலும் கி.மு. (1000 - 900) சாலொமோன் தனது ராஜ்யபாரத்தின் பிற்காலத்தில் தேவனை விட்டு அகன்றுபோய் பிற தேவர்களை சேவித்து, மக்களை தீமைக்கு நேராக வழிநடத்தினான். அவன் காலத்திற்கு பின்பு இஸ்ரேல் நாடு இரண்டாக உடைந்தது. அவ்விரு நாடுகளும் எப்போதும் ஒருவருக்கொருவர் பகைமை கொண்டிருந்தன. கி.மு. 606-ல் பாபிலோனியப் பேரரசர் நேபுக்காத்நேச்சார் யூதா தேசத்தை தனது ஆட்சியின் கீழ் கொண்டுவந்ததுமல்லாமல், அங்கிருந்து அநேகரை கைது செய்து தனது நாட்டிற்கு இழுத்துச் சென்றான். அதற்கு முன்புதானே அசீரியர்கள் வட நாட்டை முற்றிலுமாகக் கைப்பற்றி, அத்தேசத்து மக்களை அங்கிருந்து இடம்பெயர்த்து வேறு அநேக நாடுகளில் கொண்டு சென்று குடியமர்த்திவிட்டிருந்தான். அத்துடன் நில்லாமல், அவன் வேற்று நாட்டினரை அங்கு கொண்டுவந்து குடியமர்த்தவும் செய்தான்.

## பாபிலோனிய அரசின் கீழ் பாலஸ்தீனா (கி.மு. 606 - 539)

தம்மை விட்டு விலகித் தீய வழிகளைப் பின்பற்றி தங்களைக் கெடுத்துக் கொண்ட இஸ்ரவேலரைத் தண்டிக்க தேவன் தேர்ந்தெடுத்த 'சவுக்கு' தான் பாபிலோன் என்கிற அரசு! ஆனால், மிகப் பெரிய சக்தியாகத் திகழ்ந்த அந்த அரசும் வெறும் 67 வருடங்கள்

மட்டுமே நிலைநின்றது. இஸ்ரவேலரைத் தண்டித்து திருத்த தேவன் உபயோகித்த சவுக்காக பாபிலோன் திகழ்ந்தபோதிலும், நீதி தவறிவிட்ட அந்த அரசை தேவன் வெகு விரைவில் கீழே தள்ளிவிட்டார். இஸ்ரவேலர் மட்டுமின்றி வேறு எந்த இனம் மற்றும் ஜாதியாக இருந்தாலும் தேவன் நீதி தவறாதவராகவே நடந்து கொண்டார் என்பதற்கு இது போன்ற அநேக அத்தாட்சிகள் உண்டு.

## மேதிய பாரசீக அரசுகளின் கீழ் இஸ்ரவேலர் (539 - 331 B.C.)

மேதிய பாரசீக அரசுகள் பாபிலோனை கி.மு. 539-ல் கைப்பற்றிய பின்பு, கி.மு. 520-ல் **கோரேசு** அரசனால் இஸ்ரவேலர் எருசலேமுக்கு திருப்பி அனுப்பப்பட்டார்கள். (எஸ்றா. 1:1-4) கிட்டத்தட்ட ஐம்பதினாயிரம் மக்களைக் கொண்ட முதல் குழு பாபிலோனிலிருந்து தங்களது தாய்நாடு திரும்பினார்கள் (எஸ்றா. 2:64, 65) கி.மு. 516-ல் தேவாலயம் திரும்ப கட்டப்பட்டு, அலங்கங்களும் கட்டப்பட்டன. கிட்டத்தட்ட 208 வருடகாலம் மேதிய பெர்சிய அரசால் பாலஸ்தீனா நாடு ஆளப்பட்டது.

## கிரேக்கப் பேரரசின் கீழ் பலஸ்தீனா (கி.மு. 331 - 631)

கி.மு. 331-ல் ஆட்சி புரிய ஆரம்பித்த **மகா அலெக்சாந்தர்** மேதிய பெர்சிய அரசை தோற்கடித்ததால், பலஸ்தீனா கிரேக்கப்பேரரசின் ஆளுகையின் கீழ் வந்தது. கிரேக்க அரசு 268 வருடங்கள் அநேக நாடுகளை வென்று அவைகளை ஆண்டது. மகா அலெக்சாண்டர் மரணமடைந்தபின்பு **டாலமி** (Ptolemy), **செலூக்கியர்** (Seleucus) எனும் இரு பேரரசர்கள் பலஸ்தீனாவை மாறி மாறி ஆண்டபோது, அவ்விரு அரசுகளுக்கு இடையே உள்ள பகையால் மூண்ட யுத்தங்களால் பலஸ்தீனா சீரழிய ஆரம்பித்தது. முடிவில் **செலூக்கியர்கள்** வென்றபோது **அந்தியோகஸ் எப்பிபேனஸ்** அரசனானான். யூதர்களை வெறுத்த அவன் எகிப்து மற்றும் ரோமப் பேரரசுகளுடன் யுத்தம் புரிந்து தோற்றபோது, ரோமப்பேரரசுக்கு கப்பம் கட்டுகிறவனானான். அதற்காக அவன் தனது நாட்டிலுள்ள விலையுயர்ந்த பொருட்களையெல்லாம் எடுத்துக் கொண்டான். அதுவுமின்றி கிரேக்க ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்த அவர்களது தேவர்களை அனைவரையும் வணங்க ஏவினான். ஓய்வு நாட்களை ஆசரிப்பவர்களைக் கொலை செய்ய உத்தரவிட்டான். கிரேக்க நாணயங்களை புழக்கத்தில் விட்டான். பட்டணங்களுக்கு கிரேக்க பெயர்களை சூட்டினான். கிரேக்கமயமாக்குதலால் அநேக யூதர்கள் தங்களை மாற்றிக் கொள்ளும் சூழ்நிலை உருவானது. ஆனால் கி.மு. 63-ல் அவன் மரணமடைந்தபோது, யூதர்களுக்கு ஓரளவு ஆறுதல் கிடைத்தது.

## ரோமப் பேரரசின் கீழ் பலஸ்தீனா

வீர பராக்கிரமசாலிகள் என தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு **போம்பே பேரரசரின்** (Pompeii) கீழ் ரோமர்கள் பலஸ்தீனாவிற்குள் நுழைந்து கி.மு. 63-ல் எருசலேமை பிடித்தார்கள். அப்படியாக **இராயர்கள்** (Ceasars) எனப்படும் பேரரசர்களால்

பலஸ்தீனா தேசம் ஆளப்பட்டபோது. ‘கிரேக்க மய’ மாக்கப்பட்டவைகளெல்லாம் **‘ரோமமய’** மாக்கப்பட்டது. கிரேக்க பெயர்கள் கொடுக்கப்பட்ட பட்டணங்கள், ரோமப் பெயர்களுக்கு மாற்றப்பட்டன. யூதர்கள் ரோம குடிமகன்களாக மாற்றப்பட்டனர். ரோம நாணயங்கள் புழக்கத்தில் விடப்பட்டன. ஏரோது ராஜாவின் தகப்பனார் ரோம குடிமகனாக தன்னை மாற்றிக் கொண்டான். கி.மு. 39-ல் **ஏரோது** கலிலேயா (வட பலஸ்தீனா)வின் ஆளுநராக நியமிக்கப்பட்டான். கி.மு. 39-4 வரைக்கும் ராஜாவாக இருந்த அவன் இறந்தபோது அவனது புதல்வன் **அந்திப்பா** ராஜாவானான். அவனுக்கும் அவனது சகோதரர்களுக்கும் ஆட்சி செய்வதில் பிரச்சனை எழவே, தெற்கு பலஸ்தீனாவை ஆளும் பொறுப்பை ரோமப் பேரரசர் ஏற்றுக் கொண்டு அங்கு ஆளுநர்களை நியமித்தான். அவ்வாறு ஆளுநராக கடைசியாக பொறுப்பு வகித்தவன் தான் இயேசுவை சிலுவை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்த **பிலாத்து** என்கிற கோழை. (கி.பி. 26 - 36).

## மேசியாவின் தோற்றம்

அகஸ்து இராயனின் (Augustus Caesar) ஆட்சி காலத்தில், பழைய ஏற்பாட்டுகால தீர்க்கர்கள் முன்னுரைத்திருந்த எல்லா தீர்க்க தரிசனங்களும் அற்புதமாக நிறைவேற, **இயேசு கிறிஸ்து எனும் மேசியா** (இரட்சகர்), தாவீதின் குலத்தில் பெத்லெகேமில் பிறந்தார். அவரது பிறப்பை முன்றித்தவர்களில், ஏசாயா தீர்க்கதரிசி முதன்மையானவர். அவர் கிட்டத்தட்ட 700 வருடங்களுக்கு முன் எழுதி வைத்திருந்த பிரகாரம் (ஏசாயா. 9:6, 7) தேவன் மனிதனாக அவதரித்தார். இயற்கையின் மீதும், மனிதனை ஆட்டிப்படைத்த பிசாசின் மீதும் அவர் தமது அதிகாரத்தை மக்கள் முன் வெளிப்படுத்தினார். தெய்வீக அன்பை மனிதனுக்கு போதித்து அவனை நேரான பாதையில் நடத்திய அவரை ஏனோ அநேகர் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது மட்டுமல்ல, அவர்மீது தங்களுக்கு இருந்த வெறுப்பை, அவரை கொலை செய்வது மூலம் பிரகடனப்படுத்திக் கொள்ளவும் அவர்கள் தயங்கவில்லை. **திபேரியா இராயன்** (Tiberias Caesar)-னின் காலத்தில் பிலாத்துவின் ஒப்புதலுடன் அவரைச் சிலுவையில் குரூரமாகக் கொன்ற வேளையிலும் கூட ‘இவனது இரத்தப்பழி எங்கள் மேலும், எங்கள் பிள்ளைகள் மேலும் வரட்டும்’ என்று அவர்கள் வெறுப்புடன் கூவினார்கள்!

## எருசலேம் பாழாக்கப்படுகிறது

இயேசுகிறிஸ்து மரணத்தை வென்று உயிர்த்தெழுந்த சம்பவம் பலஸ்தீனாவின் சரித்திரத்தையே தலைகீழாக மாற்றிவிட்டது. அன்றைய பேரரசரான **எத்ரியான் பேரரசர்** (Emperor Hadrian), எருசலேமில் ரோம காலனியை நிறுவ முற்பட்டான். அப்போது யூதர்கள் அதை எதிர்த்தார்கள். சேனைத்தலைவன் **தீத்து** (Titus) வின் தலைமையில் கி.பி. 70-ல் ரோமர்கள் எருசலேமை முற்றுகையிட்டு 47 நாட்களில் அதைத் தரைமட்டமாக்கினான். அவன் யூதர்களைப் படுகொலை செய்தான். அநேகரைக்

கைதிகளாக்கினான். யூதர்கள் தங்கள் உயிரை காப்பாற்றிக் கொள்ள அங்கிருந்து தப்பிச்சென்றார்கள். (மத். 23:37, 38) எருசலேம் தேவாலயம் சுட்டெரிக்கப்பட்டது. பட்டணங்களுக்கு ரோமப் பெயர்கள் அளிக்கப்பட்டது. ரோமர்கள் வழிபடும் தேவர்களின் ஆலயங்கள் கட்டப்பட்டன. ஆனால் கி.பி. 4-ம் நூற்றாண்டில், **கான்ஸ்டன்டைன்** என்கிற பேரரசர் (Emperor Constantine) கிறிஸ்தவனாக மாறியபோது நிலைமை சீராகியது. அவரது தாயார் ஹெலனா அநேக தேவாலயங்களைக் கட்டி எருசலேமை ஒரு புனிதஸ்தலமாக மாற்றினார்.

கி.பி. 4-ம் நூற்றாண்டிற்கு பிறகு பலஸ்தீனா இரண்டாக பிரிக்கப்பட்டபோது, மீண்டும் பிரச்சனைகள் உருவாகியது. கி.பி. 638-ல் பாலஸ்தீனா தேசம் **இஸ்லாமிய காலிப்களின்** கையில் வந்தது. கி.பி. 8-ம் நூற்றாண்டில், மோரியா மலைமீது எருசலேம் தேவாலயம் கட்டப்பட்டிருந்த இடத்தில் ஒரு **இஸ்லாமிய தேவாலயம்** (Mosque of omar - Dome of of the Rock) கட்டினார்கள். அதன் பக்கத்திலேயே எல் அக்ஸா பள்ளிவாசல் (El Aqsa Mosque) கட்டப்பட்டுள்ளது. யூதர்களில் அநேகர் இஸ்லாம் மதத்திற்கு மாறினார்கள்.

## புனிதப்போர்கள்

சீரியா தேசம் இஸ்லாமியருக்கு விரோதமாக படையெடுத்தபோது, பலஸ்தீனா யுத்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்டது. கிறிஸ்தவர்கள், ரோமிலுள்ள போப்பாண்டவர், ரோம சக்கரவர்த்தி மற்றும் ஐரோப்பிய நாடுகளின் துணையுடன் புனிதப்போர் தொடுத்தார்கள். கி.பி. 1100-ல் அத்தேசத்தை இஸ்லாமியர் கையிலிருந்து விடுவித்த போதிலும், கி.பி. 1187-ல் மீண்டும் அது அவர்களிடமிருந்து இஸ்லாமியர் கைக்கு திரும்பியது.

## துருக்கிகள் பலஸ்தீனாவை ஆண்டபோது

கி.பி. 1516-ல், பலஸ்தீனாவை **துருக்கி சுல்த்தான்** பிடித்தான். சுலைமான் சுல்த்தான், கி.பி. 1540-ல் எருசலேமின் கோட்டை மதிலைச் செப்பனிட்டான். இரண்டு நூற்றாண்டுகள் பலஸ்தீனாவை அவர்கள் ஆண்டார்கள். 19-ம் நூற்றாண்டில் ருஷ்யா, **பிரான்சு, ஜெர்மனி** ஆகிய நாடுகளின் **காலனிகள்** பலஸ்தீனாவில் நிலைநாட்டப்பட்டன. 1882-ல் ருஷ்ய நாட்டிலிருந்து திரும்பிய யூதர்கள் தங்களுக்கு காலனிகளை உருவாக்கி அங்கு விவசாயம் செய்ய ஆரம்பித்தார்கள். 1896-ல் **தியடோர் ஹெர்ஸசல்** (Theodore Herzel) என்கிற யூத தலைவன் அவர்களை ஒருங்கிணைத்து Zionist Congress என்கிற அமைப்பை உருவாக்கினான். அவர்கள், **பலஸ்தீனா தங்களுடைய நாடு** என்று உரிமைக்குரல் எழுப்பினார்கள். பிரிட்டிஷ் அரசு, யூதர்களுக்கு ஆப்பிரிக்காவில் உள்ள உகாண்டாவில் ஒரு தேசம் உருவாக்க அனுமதி அளிக்க முன்வந்தது. ஆனால்... அவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்களா?

## அத்தி மரம் துளிர்விட்டது!
## யூத வரலாற்றில் ஒரு மாறுதல் உருவாகிறது

கி.பி. 1914 முதல் 1918-வரைக்கும் நடைபெற்ற முதலாம் உலகப்போர், யூத வரலாற்றில் ஓர் மாறுதலை ஏற்படுத்தியது. எப்படி என்று பார்ப்போமா?

Zionist Congress என்கிற அமைப்பின் பிரதிநிதியான (ருஷ்யாவில் பிறந்து வளர்ந்த) **செயிம் வெயிஸ்மான்** (Chaim Weizman) என்கிற யூத வேதியியல் அறிஞர் (Scientist) இங்கிலாந்திற்குச் சென்றார். பிரிட்டனில் தங்கி அங்குள்ள குடியுரிமை பெற்ற அவர், **யூதர்களுக்கு பலஸ்தீனா தவிர வேறெங்கும் ராஜ்யம் தேவையில்லை என்பதை அவர்களுக்கு புரியவைக்க பாடுபட்டார்.** அப்போது நடைபெற்றக்கொண்டிருந்த முதல் உலகப்போரில் பிரட்டன் மற்றும் ஐக்கிய நாடுகளின் வெற்றிக்கு அவரது அரிய கண்டுபிடிப்பு ஒன்று உதவியது. அது எப்படி என்று பார்ப்போமா? பிரிட்டனில் போருக்கு வெடிமருந்து தயார் செய்ய தேவையான Nitrates தென் அமெரிக்காவிலிருந்து கொண்டு வரப்படவேண்டியதாக இருந்தது. ஆனால் ஜெர்மன் நீர்மூழ்கி கப்பல்கள், அட்லான்டிக் கடலில் நிலை கொண்டிருந்தபடியால், வெடி மருந்து தயார் செய்யும் பொருட்களை அங்கிருந்து கப்பல்களில் கொண்டுவரமுடியாமல் பிரட்டன் தத்தளித்தது. இவ்வாறு உலகப்போரில் தோல்வியை தழுவும் நிலை வந்த இக்கட்டான நேரத்தில் வெயிஸ்மான் தனது அயராத உழைப்பால், காற்றிலிருந்து நைட்ரஜனை பிரித்தெடுத்து வெடிமருந்து செய்யும் வழியை கண்டுபிடித்தார். அவ்வாறு எடுக்கப்பட்ட நைட்ர ஜனால், யுத்தத்திற்கு தேவையான வெடிமருந்து முழுவதையும் தயாரித்து, அவர்கள் யுத்தத்தில வெற்றி வாகை சூடினார்கள். இந்த பேருதவிக்காக பிரிட்டன் அவரை கவுரவிக்க முன் வந்தபோது அதை அவர் ஏற்க மறுத்தார்.. மாறாக, தனது ஜனங்களுக்கு அவர்கள் உதவவேண்டும் என்று வேண்டினார். அதன்பயனாக, 1917 நவம்பர் மாதம் 2-ம் நாள் இஸ்ரவேல் வரலாற்றின் முக்கிய நிகழ்ச்சியான **பால்பர் அறிவிப்பு** (Balfour Proclamation) நடைபெற்றது. ''யூதர்களுக்கு பலஸ்தீனாவில் ஓர் நாடு கிடைக்க பிரிட்டிஷ் அரசு விரும்புவதையும், அதற்காக அவர்கள் முயற்சிப்பார்கள்'' என்பதையும் அது மூலமாக பிரட்டன் அறிவித்தது. இந்த அறிவிப்பு வெளியிடபபட்ட உடனே யூதர்கள் பெருமகிழ்ச்சியுற்றனர். ஆனால் அரேபியர்கள் இதை எதிர்க்கவே, பிரிட்டனும் சிறிது பின்மாற்றமடைந்தது. ஆனாலும் அதை நம்பி 1922-ம் ஆண்டிற்குள் அநேக யூதர்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து பலஸ்தீனாவிற்கு சென்று குடியேற ஆரம்பித்து விட்டிருந்தார்கள். ஆனால், அரபியர்களின் எதிர்ப்பும், பிரிட்டனின் மனமாற்றவும் அவர்களது குடியேறுதலுக்கு முட்டுக்கட்டையை உருவாக்கியது. ஆகவே, உயிருக்கு பயந்து அவர்கள் மீண்டும் நாட்டைவிட்டு ஓடிவிட்டார்கள். இவ்வாறு பிரிட்டனால் வஞ்சிக்கப்பட்ட அவர்கள், மிகவும் தத்தளிப்பிற்குள்ளானார்கள்.

பாலஸ்தீனாவில் அநேக யூதர்கள் வசித்து வந்தார்கள். முதலாம் உலகப் போரின்போது, 1917-ல், பிரிட்டிஷ் படைத்தலைவர் **ஆல்லன்பி** எருசலேமை பிரிட்டிஷ்

ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார். அரேபியர்கள் ஆட்சி புரிந்திருந்த அந்த கால கட்டத்தில், இப்படியான ஒரு திருப்புமுனை வந்தது, அரேபியருக்கு பிடிக்கவில்லை என்றாலும், பிரிட்டனின் அதிகார வல்லமை மிகப்பெரியதாக இருந்ததால் அவர்களால் அவர்களை எதிர்க்கவும் முடியவில்லை. முதல் 1947 வரையுள்ள 20 வருடங்களில் 1917 - 1947 சில மோதல்கள் நடந்து கொண்டேயிருந்தது. 1947-ல் **லீக் ஆப் நேஷன்ஸ்** (League of Nations) இந்த பிரச்சனைக்கு ஒரு முடிவு எடுத்தது. அதன்படி யோர்தான் நதியின் **மேற்கு பாகம் பிரிட்டிஷ் அரசுக்கும்,** கிழக்கு பாகம் **டிரான்ஸ் ஜோர்டன் எனப்பெயரிடப்பட்டு (Trans Jordan) அரபிய அரசன் அப்துல்லாவிற்கும்** கொடுக்கப் பட்டது. மீண்டும் யூதர்கள் உலகின் பல பாகங்களிலுமிருந்து பிரட்டிஷ் ஆளுகையின் கீழுள்ள பலஸ்தீனாவில் வந்து குடியேறினார்கள். அரேபியர்களுக்கு இது மிகவும் விசனமாக இருந்தது. ஆனால் அவர்களால் எதிர்ப்பு தெரிவிக்க இயலவில்லை. இந்த இக்கட்டான சூழ்நிலையில், **1948-ம் வருடம் இஸ்ரவேல் எனும் நாடு உருவாக்கப்பட்டது!** இது எப்படி நடந்தது என்று ஆச்சரியப்படுகிறீர்களா? மேலும் தொடர்ந்து படியுங்கள்.

## இக்கட்டான சூழ்நிலையில் இஸ்ரவேல் நாடு எப்படி உருவானது?

பிரிட்டிஷ் அரசாங்கம், தங்களுடைய ஆட்சியின் கீழிருந்த காலனிகளுக்கு சுதந்திரம் அளித்து வந்த காலம் அது. 1948-ம் வருடம் மேய் மாதம் 14-ம் நாள் நள்ளிரவு 12 மணிக்கு, பலஸ்தீனா மீதான பிரிட்டிஷ் ஹைகமிஷனரின் அதிகாரத்தை யூதர்களுக்கு விட்டு கொடுத்துவிட்டு, அந்நாட்டை விட்டு அவ்வரசாங்கம் வெளியேறியது. **அவ்வாறு, யூதர்கள் திடீரென ஓர் அரசை நிறுவ தேவகிருபை பெற்றார்கள்.** 1948-ம் வருடம் மேய் 15-ம் நாள் முதல் உலகத்திலுள்ள பிற நாடுகளைப் போன்று அதுவும் ஒரு நாடாக அங்கீகரிக்கப்பட்டது. கிட்டத்தட்ட 2700 வருடங்களுக்கு முன்பு ஏசாயா தீர்க்க தரிசி மூலமாக உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம் (ஏசாயா. 66:8) இவ்வாறு நிறைவேறியது. ருஷ்யா (சோவியற்று யூனியன்) கூட அதை அங்கீகரித்தது என்றால் பாருங்களேன்!

## துளிர்விட்ட அத்திமரம் வளர்ந்து உலகத்தை வியக்க வைத்தது

இஸ்ரவேலருக்காக தேவன் செய்த அற்புதங்கள் இவ்வாறு நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, அரேபியர்களால் தங்களது குரோதத்தையும், பொறாமையும் அடக்கவே முடியவில்லை. இஸ்ரவேல் மக்கள் தொகையை விட ஐம்பது மடங்கு மக்கள் தொகை கொண்ட அவர்கள் இஸ்ரேலுக்கு எதிராக போர் தொடுத்து அநேகரைக் கொன்று குவித்தார்கள். ஆனால் இஸ்ரவேலரோ தைரியமாக அவர்களை எதிர்த்து, போராடினார்கள். 1949-ல், போர் முடிவுக்கு வருவதற்குள், மிகவும் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் அவர்கள் தங்களிடமிருந்து எடுக்கப்பட்ட நாடுகளை தங்கள் வசமாக்கிக்

கொண்டார்கள். சிறிய துப்பாக்கிகள் மட்டுமே அவர்களிடம் இருந்தன. தங்கள் எதிரிகளிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை வைத்து தான் அவர்கள் மிகப்பெரிய வெற்றியை ஈட்டினார்கள். 1956-ல் எகிப்திய அதிபர் **நாசர்,** இஸ்ரவேலரை பூமியிலிருந்து அறவே ஒழித்துவிடவேண்டும் என்கிற வெறியுடன் **நெகேபில்** புகுந்து யுத்தம் புரிந்தான். ஆனால், **மோஷேதயான்** என்கிற படை தளபதியின் தலைமையில் இஸ்ரவேல் படை நான்கே நாட்களில் சீனாய் தீபகற்பத்தை முழுவதுமாகக் கைப்பற்றியது. அறுபதாயிரம் படைவீரர்களை கைதிகளாக சிறைபிடித்ததுடன், டாங்குகள் மற்றும் யுத்த உபகரணங்கள் யாவையும் பிடித்தெடுத்தார்கள். நாசசர் பின்னிட்டு திரும்பிவிட்டார். இஸ்ரவேலர் தங்களைத் தாங்களே திடப்படுத்திக் கொண்டு, தாங்கள் பிடித்த பூமியை அழகிய விவசாய நிலமாக்கி மாற்றினார்கள். ஆனால், எருசலேமோ அரேபியர்கள் வசம் இருந்தது. அதைக் கைவசப்படுத்த காத்திருந்த அவர்களுக்கு, அது கூடிய சீக்கிரமே வாய்த்தது.

பதினொரு வருடங்கள் இஸ்ரவேலுக்கு எதிராக போர் புரிய காத்திருந்த அரேபியர் தங்களை மீண்டும் யுத்தம் செய்ய தயார் செய்தனர். 'இஸ்ரவேலரை அங்கிருந்து முற்றிலுமாக விரட்டி கடலில் தள்ளிவிட' அவர்கள் 1967-ம் வருடம் ஜுன் மாதம் 5-ம் தேதி போர் தொடுத்தார்கள். நாசர் இந்தத் தடவை, சீரியா தேசத்தையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டான். ஆனால், அரேபியப் படை, போர் தொடுக்க முனைவதற் குள்ளாகவே, இஸ்ரவேலின் போர் விமானங்கள், ஐந்து நாடுகளின் முக்கால் பங்கு போர் விமானங்கள் மீதும் குண்டுமழை பொழிந்து அவற்றை எரித்து சாம்பலாக்கிவிட்டது! ஆறே நாட்களில், நாசரின் தலைமையிலான போர் தோற்று பின்வாங்கியது. ஜோர்டான் முற்றிலும் இஸ்ரவேலின் ஆட்சிக்குட்பட்டது. தேவையற்ற வம்பிற்கு வந்த சீரியா தேசத்திற்கும் போரின் தாக்கத்தை எதிர்கொள்ளவேண்டியதாயிற்று. ஆறே நாட்களில், அரேபியரிடமிருந்து 64,000 சதுர மைல் நிலத்தை இஸ்ரவேலர் கைப்பற்றினர். அரேபியர்களின் போர் அலுவலகங்கள் தரை மட்டமாயின. அவர்களது எண்ணெய் கிணறுகள் இஸ்ரவேலர் வசமாயிற்று. இவ்வாறு, இஸ்ரவேலரை தேவன் புறஜாதியினரிட மிருந்து மீட்கப் போகிறதைக் குறித்து ஏசாயா தீர்க்கன் கூறிய தீர்க்க தரிசனம் நிறைவேறிற்று. (ஏசா. 54:7)

1973-ல் எகிப்தும், சிரியாவும் சேர்ந்து மீண்டும் இஸ்ரயேலை தாக்கியபோதும் கூட அவர்களால் எதிர்த்து நிற்க முடிந்தது. இவ்வாறு, யுத்தம் எப்போது வேண்டுமானாலும் நிகழலாம் என்கிற சூழ்நிலையில், 1977-ல் எகிப்திய அதிபர் **அன்வர் சாதத்** சமாதானதூதுடன் இஸ்ரயேலுக்கு போனார். அமெரிக்க அதிபர் **ஜிம்மிகார்ட்டர்** முன்னிலையில் எகிப்திய அதிபர் சதாத்தும், இஸ்ரேல் பிரதமர் **மெனாஹம் பெகினும்** சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர். சீனாய் தீபகற்பத்தை இஸ்ரேல், எகிப்துக்கு விட்டுக் கொடுத்தது. ஆனால், எந்த சமாதான உடன்படிக்கையும் முழுமையாக இதுவரைக்கும் நிறைவேற்றப்படவில்லை என்பதே உண்மையாகும்.

உலகின் பல பாகங்களிலிருந்தும் வந்து பலஸ்தீனாவில் குடியேறிய இஸ்ரவேலரில், இந்தியாவின் கேரள மாநிலத்திலிருந்து சென்று குடியேறியவர்களும் உண்டு. இவர்கள் பெயர்சேபா பட்டணத்திலிருந்து சுமார் 20 கி.மீ. கிழக்கேயுள்ள **நெவாற்றிம்** (Nevatim) என்கிற கிராமத்தில் சென்று, மிகக் கடினமாக உழைத்து, அதை அழகிய ஒரு கிராமமாக மாற்றியுள்ளனர். தற்போது மிக வசதியுடனும், செல்வச் செழிப்புடனும் அவர்கள் அங்கு வாழ்த்து வருகின்றனர்.

இஸ்ரேலில் உள்ள கிராமங்களில் **கிபூட்ஸ்** (Kibutz) எனும் சமூகமாக வாழும் மக்களை நாம் காணலாம். இவர்கள் ஒரு பெரிய கூட்டு குடும்பம் போல, ஒருவரையொருவர் ஆதரித்து தாங்கி வாழ்ந்து வருகிறார்கள். ஒவ்வொரு குறிப்பிட்ட இடத்திலுள்ள அனைத்து ஸ்தாபனங்களும் அவர்களது உடமையாக கருதப்படுகிறது. இவ்வாறுள்ள அமைப்புகள் அங்கு அநேகம் இருக்கின்றன. ஒவ்வொரு கிபூட் அமைப்பிலும் பொதுவான ஓர் உணவுக்கூடம் இருக்கும். அதனதன் வசதிக்கு தகுந்தபடி அங்கு உணவு தயாரிக்கப்பட்டு பரிமாறப்படுகிறது. இஸ்ரவேல் மந்திரிசபையிலும் கூட இக்குழுக் களை சார்ந்த பிரதிநிதி ஒருவர் இடம் பெற்றுள்ளார்.

## தேவனின் மக்களின் இன்றைய நிலை

தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட மக்களாகிய இஸ்ரவேலருக்கு **மேசியா** எனும் **இயேசுகிறிஸ்து**வை தேவன் அனுப்பினார். ஆனால் அவர்களோ அவரை உதறிவிட்டதன் மூலம் தேவனுடன் தங்களுக்கு இருந்த இணைப்பை உடைத்தெறிந்து விட்டார்கள். பழைய ஏற்பாட்டை மட்டும் நம்பி அதன்படி வாழ்ந்து வரும் அவர்கள், அதன் ஆசாரங்களை தற்போது ஏனோதானோ என்று கடைப்பிடித்து வருகிறார்கள். அநேகர் பாவத்தில் வாழ்ந்து வந்தாலும், அவர்களில் நான்கில் ஒரு பங்கு மக்கள் தேவனைப் பின்பற்றுபவர்களும், புதிய ஏற்பாட்டை நம்புகிறவர்களாகவும் இருக்கின்றனர்.

எருசலேம் ஆலயம் கட்டப்பட்டிருந்த இடத்தில் தற்போது **ஓமரின் ஆலயம்** (Dome of the Rock) என்கிற இஸ்லாமிய ஆலயம் இருக்கிறது. ஆனால், யூதர்கள் தங்களால் அதே இடத்தில்ஒரு ஆலயம் கட்ட முடியும் என்று நம்பிக்கையோடு காத்திருக்கிறார்கள். தேவனால் கூடாதது ஒன்றுமில்லை அல்லவா? இந்நிலையில், 1974-ல் யூத ரபிமார் ஒரு தீர்மானம் எடுத்தனர். அதன்படி, மோரியா மலையிலிருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவிலுள்ள ஓரிடத்தில் ஒரு ஆலயத்தை எருசலேமின் தேசிய ஆலயமாக (National Synagogue) கட்டி வருகிறார்கள்.

## ஆச்சரியமாக நிலைநிற்கும் ஞாபகச் சின்னங்கள்

அநேக எதிரிப்படைகளால் பலஸ்தீனா நாசமாக்கப்பட்ட வரலாற்றை நாம் பார்த்தோம் அல்லவா. எருசலேமில் 28 பயங்கர போர்கள் நடந்தன. குண்டு மழை பொழிந்தது. ஆனால் கிறிஸ்துவின் காலம் முதற்கொண்டு இன்றுவரைக்கும்

நிலைநிற்கும் ஞாபகச் சின்னங்கள் எவராலும் அழிக்கப்படமுடியாமல் தற்போது சாட்சியாக நிலைநிற்கின்றன. இயேசு உயிர்த்தெழுந்ததை பறைசாற்றும் திறந்த கல்லறை (Empty tomb), மிகவும் பத்திரமாகவே இருக்கிறது. இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், அக்கல்லறையையும் அதற்கு சுற்றிலும் இருக்கும் தோட்டத்தையும் பராமரித்து பாதுகாப்பவர்கள் இயேசு மீது நம்பிக்கை வைக்காத இஸ்ரவேலரே தான்!

## தேவன் அளித்த வாக்குறுதிகளும், இஸ்ரவேலர்களின் எதிர்காலமும்

எதிர்காலத்தைக் குறித்த அறிவு மனித மூளைக்கு அப்பாற்பட்டதாகும். ஆனால் தேவன் அதை தீர்க்கர்கள் மூலமாக அநேக வருடங்கள் முன்பாகவே முன்குறித்து உரைத்திருந்தார். ஆதியாகம புத்தகத்தின் 12-வது அதிகாரத்தில் தேவன் ஆபிரகாமை அழைத்து, அவனுக்கு கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன என்பதை நாம் கண்கூடாக பார்த்து விட்டோம் அல்லவா. ஆனால், அவற்றை சுதந்தரித்து மகிழ்ந்திருக்க வேண்டிய அவர்கள், பிற தேவர்களை நாடிச் சென்றது மட்டுமின்றி தங்களை மீட்க வந்த மேசியாவையே கொலை செய்யவும் துணிந்தார்கள். அதன் பலன்களை அவர்கள் வெகுவிரைவில் அனுபவித்தார்கள். கி.பி. 135-ல் ரோமப் பேரரசர் **ஹேட்ரியான்** (Emperor Hardrian) யூதர்களை எருசலேமிலிருந்து வெளியேற்றினான். உலகத்தின் வெவ்வேறு நாடுகளில் சிதறிப்போய் மனம்நொந்து வாழ்ந்து வந்த அவர்களை, கருணையுள்ள தேவன், எரேமியா 16:15-ன்படி, 1948-மேய் மாதம் 15-ம் தேதி பலஸ்தீனா நாட்டின் குடிமக்களாக மீண்டும் ஒருங்கிணைத்தார்.

ஏசாயா 41:10-ல் தீர்க்கதரிசனமாக உரைத்திருந்தபடி தங்கள் தேவனைச் சார்ந்திருந்து, அவரால் தாங்கப்பட்டு, பெரிய காரியங்களை செய்த இஸ்ரவேலர் முன்பாக அநேக பெரிய நாடுகள் தலை கவிழ்ந்து நின்றன. ஏசாயா 54:7-ன்படி, கொஞ்சக்காலம் தேவனால் கைவிடப்பட்டது போல் தத்தளித்த அவர்களை அவர் மேன்மையுள்ள ஒரு நாட்டின் மக்களாக மாற்றினார். ‘அழிந்து போய்விட்டது’ என்று கருதப்பட்ட இடங்கள் எல்லாம் தற்போது பூத்துக்குலுங்கும் பூஞ்சோலைகளாக மாறிவிட்டன.

வருங்காலத்தில் அந்திகிறிஸ்து (Antichrist) என்கிற ஒரு கெட்டவனின் ஆட்சி நடைபெறும் என்பதையும் வேதத்தில் நாம் காண்கிறோம். வெளிப்படுத்திய விசேஷத்தில் தேவன் அருளிச் செய்திருக்கிறபடி இயேசு மகிமையுடன் திரும்பி வருமளவும் அவனால் உலகம் பலவிதமான நாசங்களையும், அழிவுகளையும் சந்திக்க நேரும். அதன் பின்பு சமாதானமும், நீதியும் நிறைந்த அவரது ஆட்சியின் கீழ், அனைவரும் சந்தோஷமாக வாழுவார்கள். அந்த நாள் விரைவில் வர காத்திருப்போம்.

# 19. வேதத்தில் காணப்படும் பழைய ஏற்பாட்டுக் காலத்தின் இராஜாக்கள், தலைவர்கள் மற்றும் தீர்க்கதரிசிகள் — கால அட்டவணைப்படி.

| காலம் | இராஜாக்கள் |
|---|---|
| கி.மு. 1050 - 1010 | சவுல் |
| கி.மு. 1010 - 970 | தாவீது |
| கி.மு. 970 - 930 | சாலொமோன் |

**யூதா, இஸ்ரேல் என தேசம் இரண்டாக பிரிந்த பின்**

| காலம் | இராஜாக்கள் | தீர்க்க தரிசிகள் | இராஜாக்கள் |
|---|---|---|---|
| கி.மு. 930 - 910 | ரெகோபெயாம்<br>அபியாம் | | யெரோபெயாம்<br>நாதாப் |
| கி.மு. 910 - 850 | ஆசா<br>யெகோசாபாத்<br>யெகோராம் | | பாஷா<br>ஏலா, ஓம்ரி<br>ஆகாப் |
| கி.மு. 850 - 800 | அகசியா<br>அத்தாலியா<br>யோவாஸ் | யோவேல் | யோராம்<br>யெகூ<br>யெவோகாஸ் |
| கி.மு. 800 - 750 | அமாசியா<br>உசியா<br>(அசரியா) | யோனா, ஆமோஸ்<br>ஓசியா<br>ஏசாயா | யெவோகாஸ்<br>யெரோபெயாம் II<br>சகரியா |
| கி.மு. 750 - 700 | யோதாம்<br>ஆகாஸ்<br>எசேக்கியா | மீகா | மெனாகெம்<br>பேகா<br>ஓசியா |

| | | | |
|---|---|---|---|
| கி.மு. 700 - 650 | மனாசே | நாகூம் | கி.மு. 722-ல் அசீரியர்களால் பிடிக்கப்பட்டது. |
| கி.மு. 650 - 600 | ஆமோன்<br>யோசியா<br>யெகோயாகீம் | ஆபகூக்<br>செப்பனியா<br>எரேமியா | |
| கி.மு. 600 - 586 | செதேக்கியா<br>(யூதா, பாபிலோனால் வீழ்தப்பட்டு, அதன் மக்கள் சிறைபிடிக்கப்பட்டு பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்). | ஒபதியா | |
| | (எருசலேம் நகரமும், தேவாலயமும் இடிக்கப்பட்டது) | தானியேல் | |

| | **தலைவர்கள்** | **தீர்க்கதரிசிகள்** |
|---|---|---|
| கி.மு. 537 | செருபாபேல் | ஆகாய் |
| கி.மு. 458 | எஸ்றா | சகரியா |
| கி.மு. 445 | நெகேமியா | மல்கியா |

# 20. பழைய ஏற்பாட்டின் புத்தகங்கள் கால அட்டவணைப்படி

| காலம் | புத்தகம் | நிகழ்வுகள் |
|---|---|---|
| உலக ஆரம்பம் | ஆதியாகமம் | உலகம் படைக்கப்பட்டது. ஆதாமும், ஏவாளும். ஏனோக்கு தேவனால் எடுத்துக் கொள்ளப்பட்டது. நோவாவின் காலம். பெருவெள்ளம். நோவாவின் பிள்ளைகள் சேம், காம், யாப்பேத். பாபேல் கோபுரம். மொழிகள் வெவ்வேறாகப் பிரிய, அனைவரும் பூமியெங்கும் சிதறிப்போதல். |
| கி.மு. 2200 - 2000 | யோபு<br>ஆதியாகமம் | யோபுவின் கதை.<br>தேவன் ஆபிராமை கானானுக்குப் போகச் சொன்னது. மெசெப்பொத்தேமியாவிலுள்ள ஊர் எனும் தனது தேசத்தைவிட்டு விட்டு, வாக்குதத்தம் பண்ணப்பட்ட கானானுக்கு நேராகச் செல்கிறான். தேவன் அந்த பூமியை அவனுக்கும், அவனுடைய சந்ததிக்கும் வாக்குப்பண்ணுவது. எகிப்துக்குச் செல்லுதல். இஸ்மவேலின் பிறப்பு. ஆபிராம் ஆபிரகாம் ஆகிறான். சோதோம், கொமோரா. ஈசாக்கின் பிறப்பு. |
| கி.மு. 2000 - 1800 | | ஈசாக்கு, ரபேக்கா தம்பதிக்கு ஏசா, யாக்கோபு எனும் இரட்டையர் பிறப்பது. யாக்கோபு ஆரானுக்குப் போய் லேயாளையும், ராகேலையும் மணப்பது. 12 குழந்தைகள். யாக்கோபு, இஸ்ரவேல் ஆகிறான். மகன் யோசேப்பு அடிமையாக விற்கப்பட்டு, எகிப்துக்கு கொண்டுபோகப்படுகிறான். |
| கி.மு. 1800 - 1600 | | பார்வோனின் சொப்பனங்களுக்கு விளக்கம் கூறிய யோசேப்பு, எகிப்தின் அதிபதியாக உயர்த்தப்பட்டது. யாக்கோபு, குடும்பமாக எகிப்திற்கு குடிபெயர்ந்தது. 400 வருடங்கள் அங்கு வாழ்ந்த எபிரெயர், எகிப்தியருக்கு அடிமைகளாக மாறிப்போனது. பித்தோ, ராமசேஸ் எனும் நகரங்களைக் கட்டியது. |

| | | |
|---|---|---|
| கி.மு. 1600 - கி.மு. 1400 | யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம். | குழந்தை மோசே, பார்வோனின் மகளால் காப்பாற்றப்படல். எரியும் செடியில் தோன்றிய தேவனின் அழைப்பு. 80 வயதான மோசே, இஸ்ரவேல் மக்களை, தேவனின் அற்புதச் செயல்களால் விடுவித்தது. முதல் பஸ்கா. சிவந்த சமுத்திரம் வழியாக பயணப்பட்ட இஸ்ரவேலரின் 40 வருட அலைச்சல் காலத்தில் தேவனால் அற்புதமாக பரிபாலிக்கப்பட்டது. |
| கி.மு. 1400 - 1200 | யோசுவா நியாயாதிபதிகள் | 40 வருட அலைச்சல். 10 கற்பனைகள். பொற்கன்றுக்குட்டி. ஆசரிப்புகூடாரம். தேவனின் உடன்படிக்கைப் பெட்டி. கானானை உளவு பார்க்கச் செல்வது. ராகாப் உளவாளிகளை தப்புவிக்கப் பண்ணியது. மோசேயின் மரணம். 40 வருட முயற்சியால் யோசுவா கானானை சுதந்தரித்தது. நியாதிபதிகளின் காலம். தேவனை மறப்பதும், பின்பு கீழ்ப்படிவதுமாக மாறி மாறிச் செயல்பட்ட ஜனம். |
| கி.மு. 1200 - 1100 | ரூத் | நியாதிபதிகள், தெபோராள் மற்றும் கிதியோனின் காலம். பெலிஸ்தர்கள், கானானியர், மீதியானியர், அம்மோனியர் முதலியவர்களின் படையெடுப்புகள். ரூத் என்கிற மோவாபிய விதவை இஸ்ரவேலின் தேவனைத் தன் தெய்வமாக ஏற்றுக்கொண்டது. ரூத்தின் கதை ஏலி என்கிற பிரதான ஆசாரியனின் 40 வருடங்கள். |
| கி.மு. 1100 - 1000 | I & II சாமுவேல் I நாளாகமம் | காசாவிலுள்ள பெலிஸ்தரின் ஆலயம் சிம்சோன் இடித்தது. இஸ்ரவேலின் முதல் தீர்க்க தரிசியும், கடைசி நியாயாதிபதியுமான சாமுவேல். சவுல் இஸ்ரவேலின் முதல் ராஜா. தாவீதால் கோலியாத் தோற்கடிக்கப் பட்டது. கீழ்படியாமையால் தேவன் சவுலை அரசபதவியிலிருந்து தள்ளியது. தாவீதை தேவன் தேர்ந்தெடுத்தது. சவுல் தாவீதைக் கொல்ல முயற்சிப்பது. |

| | | |
|---|---|---|
| கி.மு. 1000 - 900 | சங்கீதம்<br>நீதிமொழிகள்<br>பிரசங்கி<br>உன்னதப் பாட்டு<br>I ராஜாக்கள் | இஸ்ரவேலின் இரண்டாவது அரசனான தாவீது. அப்சலோம் மறறும் அதோனியா என்கிற தாவீதின் மைந்தர்களின் சதி ஆலோசனைகள். அரசனாக முடிசூட்டப்பட்ட சாலொமோன். தேவாலயம் கட்டப்பட்டது. இஸ்ரேல், யூதா என இரண்டாகப் பிரிந்த தேசம். |
| கி.மு. 900 - 800 | II ராஜாக்கள்<br>யோவேல் | எலியாவும், பாகாலின் தீர்க்கதரிசிகளும். யேசபெல் என்கிற கெட்ட அரசியின் கொடுங்கோலாட்சி (ஆகாப் மன்னனின் மனைவி). எலியா வானத்திற்கு நேராக எடுத்துக் கொள்ளப்படுதல். எலிசா புரியும் அற்புதங்கள். நாகமான் குணமாகுதல். அரேமியப் படைகள் கண்மயக்கம் அடைதல். யோவேலின் எச்சரிப்பின் தீர்க்கத்தரிசனம். |
| கி.மு. 800 - 700 | யோனா,<br>மீகா<br>ஏசாயா,<br>ஓசியா<br>ஆமோஸ். | யோனாவைத் தேவன் நினிவேக்கு அனுப்பியது. ஓசியா மற்றும் ஆமோஸின் தீர்க்கதரிசனங்கள். ஏசாயா மற்றும் மீகா, யூதாவுக்கு தீர்க்க தரிசனம் உரைத்தல். சமாரியா (இஸ்ரவேல்)வின் வீழ்ச்சி (கி.மு. 722). மக்கள் பிற நாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு குடியமர்த்தப்படுதல். |
| கி.மு. 700 - 600 | நாகூம்,<br>எரேமியா<br>புலம்பல்,<br>செப்பனியா,<br>ஆபகூக். | ஏசாயா, எரேமியா மற்றும் பிற தீர்க்கதரிசிகளின் தீர்க்க தரிசனம். கி.மு. 606-ல் பாபிலோனியர்கள் யூதாவைப் பிடித்து, அதன் மக்களை பாபிலோனுக்கு சிறையெடுத்துச் செல்லுதல். தானியேலும், நண்பர்களும் பாபிலோனுக்கு கொண்டுசெல்லப் படுதல். தேவனுடைய பெட்டி தொலைந்துவிட்டது. |
| கி.மு. 600 - 500 | II நாளாகமம்,<br>தானியேல்,<br>எசேக்கியேல்,<br>ஒபதியா. | எருசலேம் பிடிக்கப்பட்டு, யூதா நாடு (கி.மு. 586) அழிக்கப்பட்டு, கைதிகள் நேபுக்கத்நேச்சரால் பாபிலோனுக்கு கொண்டு செல்லப்பட்டது. தானியேல் சிங்ககுகைக்குள் தள்ளப்பட்டது. எரேமியா எகிப்துக்குக் கொண்டுபோகப்பட்டது. செருபா பேலின் தலைமையில் யூதர்கள் முதலாவதாக பாபிலோனிலிருந்து திரும்பி வருவது. (கி.மு. 536) இரண்டாவது தடவையாக ஆலயம் கட்டப்பட்டது. |

| | |
|---|---|
| கி.மு. 500 - 400 ஆகாய், சகரியா எஸ்தர், எஸ்றா நெகேமியா, மல்கியா. | பெர்சியாவின் அரசரான அகாஸ்வேரு, எஸ்தர் என்கிற யூதப் பெண்ணை அரசியாகத் தேர்ந்தெடுத்தது. ஆமானின் சதித்திட்டம் முறியடிக்கப்பட்டது. எஸ்றா, யூதர்களை பாபிலோனிலிருந்து எருசலேமுக்கு அழைத்து வந்தது. எருசலேமின் அலங்கம் கட்டப்பட்டது. ஆகாய். சகரியா. யூதர்கள் பெர்சிய அரசின் கீழ் அரசாளப்பட்டனர். |
| கி.மு. 400 - 300 | இருண்ட காலம்-பழைய ஏற்பாட்டுக்கும், இயேசுவின் பிறப்புக்கும் இடையேயான 400 வருடகால நிகழ்ச்சிகள். யூதர்கள் பெர்சிய அரசின் ஆதிக்கத்தில். கிரேக்கப் பேரரசர் அலெக்சாந்தர் கி.மு.330-ல் ஆதிக்கம் செலுத்தியபோது. அவன் தனது 32-வது வயதில் மரித்தான். (அவனது நான்கு தளபதி களிடையே கிரேக்கப் பேரரசு பங்குவைக்கப்பட்டது.) எகிப்திய ராஜாக்களான டாலமியர்களின் ஆட்சி. |
| கி.மு. 300 - 200 | யூதேயா, எகிப்திய டாலமியர்களின் அரசாட்சியின் கீழ். செல்யூசிட் அரசு (சிரியா) ஆட்சி. |
| கி.மு. 200 - 100 | அந்தியோகியா IV (எபிபேனியா) என்கிற சீரிய அரசன், சீயஸ் சிலையை எருசலேம் தேவாலயத்தில் ஸ்தாபித்து, பன்றியைப் பலியிட்டு ஆலயத்தைத் தீட்டுப்படுத்தியது. மக்கபேயர்களின் புரட்சி. 'விளக்குகளின் பண்டிகை' (பிரதிஷ்டைப் பண்டிகை) மூலம் சுத்திகரிக்கப்பட்ட தேவாலயம் மீண்டும் பிரதிஷ்டை செய்யப்பட்டது. யூதர்களின் தற்காலிக விடுதலை. ஆஸ்மோனிய அரசு (கி.மு. 166-63) யூதர்களை ஆண்டது. |
| கி.மு. 100 - 1 B.C. | கி.மு.63-ல் ரோமர்களின் படையெடுப்பு. யூதேயா ரோமர்களின் கீழ். இராயனால், ஏரோது யூதேயாவின் ஆளுநராக அறிவிக்கப்படல். மகா ஏரோது என்கிற அவனது மகன் யூதருக்கு ராஜாவானது. 10 வருடத்தில் எருசலேம் தேவாலயம் புதுப்பிக்கப்பட்டது. இயேசுகிறிஸ்துவின் பிறப்பு. |

# 21. புதிய ஏற்பாட்டின் புத்தகங்கள் - கால அட்டவணைப்படி

| | | |
|---|---|---|
| கி.மு. 10 - கி.பி. 1 | மத்தேயு, லூக்கா | மரியாளுக்கு தேவதூதனின் செய்தி. இயேசுவின் பிறப்பு (கி.மு. 6 - 4) வானசாஸ்திரிகளின் விஜயம். தேவதூதனால் எச்சரிக்கப்பட்ட யோசேப்பு தனது குடும்பத்தை எகிப்துக்கு அழைத்துச் செல்லல். இரண்டு வயதுக்குட்பட்ட பாலகர்கள் கொல்லப் படுதல். ஏரோதின் மரணத்திற்குப்பின் கலிலேயாவி லுள்ள நாசரேத்துக்குத் திரும்பிச் செல்வது. |
| கி.பி. 1 - 9 | | ஏரோதின் மைந்தர்களாகிய அர்கேலியு, அந்திப்பா மற்றும் பிலிப்பின் அரசாட்சி. எருசலேம் பண்டிகைக்குச் சென்ற சிறுவன் இயேசு. மதபோதகர்களைத் தனது ஞானத்தால் கலக்கிய சிறுவன். தர்சு பட்டணத்தானான சவுலின் (பரி. பவுல்) ஜனனம். |
| கி.பி. 10 - 19 | | பெற்றோருக்கு கீழ்ப்படிந்து வாழ்ந்த இயேசு. ஞானத்திலும், அறிவிலும், வளர்த்தியிலும் சிறந்து விளங்கிய இளைஞன். தர்சு பட்டணத்திலிருந்து (ஆசியாமைனர் - துருக்கி) கமாலியேலின் கீழ் வேதம் படிக்கச் சென்ற சவுல். |
| கி.பி. 20 - 29 | மாற்கு, யோவான் | யூதேயாவின் ஆளுநராகப் பொந்தியு பிலாத்து. யோவானால் இயேசு ஞானஸ்நானம் பெற்றது. வனாந்திரத்தில் 40 நாட்கள் உபவாசம். கி.பி. 26-ல், தனது 30-வது வயதில் ஊழியம் ஆரம்பித்த இயேசு. இயேசுவின் முதல் சீடர்கள். |
| கி.பி. 30 - 39 | அப். நடபடிகள் | காய்பா, பிலாத்து, ஏரோது ஆகியோரால் இயேசு நியாயந்தீர்க்கப்படல். சிலுவையில் அறையப்பட்டு, மரித்து, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த இயேசு. சீடர்களுக்கு இயேசு அளித்த காட்சி மற்றும் அன்பின் கட்டளைகள். பரமேறுதல். பெந்தேகோஸ்தே நாள். சபை நிறுவப்படல். முதலாம் இரத்தசாட்சி ஸ்தேவான். |

| | | |
|---|---|---|
| | | பிலிப்பு, பேதுரு, தொற்காள் ஆகியோரின் ஊழியம். பவுலின் மனமாற்றம் (கி.பி. 34) அகரிப்பா ராஜா, யூதேயாவின் ராஜா. |
| கி.பி. 40 - 49 | யாக்கோபு, கலாத்தியர் | கொர்நேலியு இரட்சிப்புக்குள் வழிநடத்தப்படல். இயேசுவின் அடியவர்கள் 'கிறிஸ்தவர்கள்' என அழைக்கப்படல். அகரிப்பா ராஜாவால் யாக்கோபு கொலை செய்யப்படல். பேதுரு தப்பிப் பிழைப்பது. தேவனால் அடிக்கப்பட்டு (கி.பி. 44) புழுப்புழுத்து இறந்த அகரிப்பா ராஜா. யூதேயாவில் பஞ்சம். அந்தியோகியாவில் உள்ள கிறிஸ்தவர்கள் செய்த உதவி.<br>கி.பி.48-ல் பவுலும், பர்னபாசும் முதல் மிஷனெரிப் பயணம் மேற்கொண்டது. |
| கி.பி. 50 - 59 | I & II தெசலோனிக்கேயர் | எருசலேமில் கூடுகை (கி.பி. 50) கி.பி. 50 - 51-ல் பவுலின் இரண்டாம் மிஷனெரி பயணம், கி.பி. 53 - 57-ல் மூன்றாம் பயணம். ஆக்கில்லா மற்றும் பிரிஸ்கில்லா ரோம் நகரத்துக்குச் செல்லுதல். |
| | I & II கொரிந்தியர். ரோமர். | கொரிந்துவில் பவுலை சந்திப்பது. நியாயசாஸ்திரிகள் மற்றும் பெலிக்ஸ், பெஸ்து, ஏரோது, அகிரிப்பா II ஆகியோர் முன் பவுல். கப்பலில் ரோமாபுரிப் பயணம். மெலித்தா தீவில் கப்பல் சேதம் (கி.பி. 59). |
| கி.பி. 60 - 69 | எபேசியர்<br>பிலேமோன்<br>கொலோசேயர்<br>பிலிப்பியர்<br>I & II பேதுரு<br>I தீமோத்தேயு<br>தீத்து, எபிரெயர்<br>II தீமோத்தேயு | கி.பி. 60-ல் பவுல் சிறைச்சாலையில். ரோம ஆட்சிக்கெதிரான யூதரின் கலகம். சபைகளுக்கு பவுலும், பிறசீடர்களும் எழுதிய கடிதங்கள். கி.பி. 64-ல் பேதுரு தலைகீழாகச் சிலுவையில் அடிக்கப்பட்டு கொல்லப்பட்டான். கி.பி. 68-ல் பவுல் சிரச்சேதம் பண்ணப்பட்டான். (ரோம் நகரில்) |

| | | |
|---|---|---|
| கி.பி. 70 - 79 | யூதா | கி.பி. 70-ல் ரோமர்களால் எருசலேம் பாழ்க்கடிக்கப்பட்டது. தேவாலய உருப்படிகள் களவாடப்பட்டன. தேவாலய ஆராதனைகள் முடிவுற்று, யூதர்கள் சிதறடிக்கப்பட்டனர். யூதா (இயேசுவின் ஒன்றுவிட்ட சகோதரன்) தனது கடிதத்தில், கிறிஸ்தவர்களை வழிதவறவைக்கும் போதகர்களிடமிருந்து அவர்களை விலகிச்செல்ல அறிவுறுத்துகிறான். இயேசு தான் தெய்வம் என்பதை நினைவூட்டுகிறான். |
| கி.பி. 80 - 89 | I, II, III யோவான் | கிறிஸ்தவர்களுக்கெதிரான கொடுமைகள் அதிகரிக்கின்றன. கிறிஸ்தவர்களைக் கொல்ல ரோமச்சட்டம் அனுமதித்தது. 'சவக்கடல் சுருள்கள்' கி.மு. 300 - கி.பி. 100-ல் எழுதப்பட்டன. (கி.பி. 1947-ல் கண்டுபிடிக்கப்பட்டன.) யோவான் எழுதிய I, II, III கடிதங்களில் கிறிஸ்துவினுடன் உள்ள ஐக்கியம், அவரது அன்பு, தேவனுக்கு கீழ்ப்படிதல், தவறான போதகத்துக்கு விலகல், கிறிஸ்தவர்களிடையே ஒற்றுமை ஆகியவை. |
| கி.பி. 90 - 100 | வெளிப்படுத்தின விசேஷம் | பத்மோஸ் (பத்மு) தீவிற்கு யோவான் நாடு கடத்தப்பட்டது. இயேசு தமக்களித்த தரிசனத்தையும், அவரது வெளிப்படுத்தலையும் ஏழு சபைகளுக்கு எழுதியது. பத்மோஸிலிருந்து விடுவிக்கப்பட்டு எபேசுவுக்கு போனான். (கி.பி. 100-ல் சுமாராகத் தனது 120வது வயதில் இறைவனடி ஏகினான்.) |

# 22. இயேசுவின் வாழ்க்கை, முதல் கிறிஸ்தவ சபையின் தோற்றம், அப்போஸ்தலர்களின் ஊழியங்கள், உலகெங்கும் கிறிஸ்தவம் பரவிய விதம்... (ஒரு தொகுப்பு)

B.C. 4 (?) இயேசு கிறிஸ்துவின் பிறப்பு

A.D. 29 (?) இயேசுவின் ஊழியம் ஆரம்பம் கிட்டத்தட்ட முப்பது வயதில் அருளுரை கூறி அற்புதங்கள் ஆகியவை புரிந்து தன்னை **தேவனின் குமாரன்** என்று அறிவித்தார்.

A.D. 33 சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்பட்ட இயேசு உயிர்த்தெழுந்து, தம்மைத் தமது சீடர்களுக்கு வெளிப்படுத்தினார். நாற்பது நாட்களுக்குப் பின் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட அவர், பூமியில் இருக்கும் போது தமது சீடர்களிடம் உலகமெங்கும் போய் நற்செய்தியை அறிவிக்க கேட்டுக்கொண்டார். பெந்தெகோஸ்தே நாளில், சீடர்கள் பரிசுத்தாவியைப் பெற்றுக்கொண்டனர். எருசலேமில் குழுமியிருந்த 3000 பேர்கள் கிறிஸ்தவர்களானார்கள்.

A.D. 35 **ஸ்தேவான்** கல்லெறியப்பட்டு முதலாம் இரத்த சாட்சியாக மரித்தான். சீடர்கள் சிதறுண்டு போனார்கள்.

இயேசுவால் தொடப்பட்ட **சவுல்** (பின்பு பவுலாக மாறி) யூதர்களுக்கும், புறஜாதியினருக்கும் சுவிசேஷம் அறிவித்தான். அவன் புதிய சபைகளுக்கு நிருபங்கள் எனப்படும் 13 கடிதங்கள் மூலம் உபதேசங்கள் கொடுத்தான்.

A.D. 41 ரோம நூற்றுக்கதிபதி **கொர்நேலியு**வின் மதமாற்றம். **பேதுருவி**ன் ஊழியம் (புறஜாதியினரிடையே). கிறிஸ்துவின் அடியவர்கள் அந்தியோகியாவில் 'கிறிஸ்தவர்கள்' என அழைக்கப்பட்டார்கள்.

A.D. 44 **அகரிப்பா** இராஜாவால் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படுதல், யாக்கோபு கொல்லப்படுதல் - பேதுரு சிறையிலடைக்கப்பட்டான். யூதேயாவில் பஞ்சம். அந்தியோகியாவின் சபை மக்கள் அவர்களுக்கு உதவியது.

A.D. 45-100 மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் சுவிசேஷங்கள் எழுதப்பட்டன. (பிற புதிய ஏற்பாடு நூல்களும் கூட எழுதப்பட்டன.)

A.D. 49-50 பவுலின், புறஜாதிகளிடையே நடத்தப்பட்ட ஊழியம், மற்ற சீடர்களால் அங்கீகரிக்கப்பட்டது.

| | |
|---|---|
| A.D. 52 | **பரி. தோமா** தென் இந்தியா வந்து இறை பணி தொடங்கியது. |
| A.D. 53 | யூதர்கள் ரோமாபுரியிலிருந்து வெளியேற்றப்படுதல். |
| A.D. 64 | **நீரோ**மன்னனின் கொடுமைகள் - கிறிஸ்தவர்களை சித்திரவதை செய்து கொன்றது. |
| A.D. 67-68 | **பேதுரு**வும், **பவுலும்** கொலைசெய்யப்படல். |
| A.D. 66-70 | ரோமர்களை யூதர்கள் எதிர்த்தது. தீத்து மன்னன் எருசலேம் தேவாலயத்தை அழித்தான். யூதர்கள் சிதறிப்போய்விட்டார்கள். அந்தியோகியா, கிறிஸ் தவர்களின் தலைமையகம் ஆகியது. |
| A.D. 71-81 | ரோம் நகரில் **'கொலோசியம்'** எனப்பட்ட மாபெரும் அரங்கம் கட்டப் பட்டது. அங்கு கிறிஸ்தவர்கள் மிருகங்களுக்கு இரையாக்கப்பட்டு, பலியானார்கள். |
| A.D. 72 | **பரி. தோமா** இந்தியாவில் (சென்னையில்) கொலை செய்யப்பட்டது. |
| A.D. 81 | யூதர்கள் கிறிஸ்தவர்களை ஜெப ஆலயத்திற்கு புறம்பாக்கினார்கள். |
| A.D. 90 | சபையில் அநேக புதிய உபதேசங்கள் முளைத்தன. கிறிஸ்தவம் எகிப்து, சூடான், ஆர்மேனியா, பிரான்சு, இத்தாலி, ஜெர்மனி, பிரிட்டன், ஈராக், ஈரான், இந்தியா, கிரீஸ், யூகோஸ்லேவியா, போஸ்னியா, கிரோஷியா, துருக்கி, அல்பேனியா, அல்ஜீரியா, லிபியா, டுனீஷியா ஆகிய நாடுகளில் பரவியது. |
| A.D. 100 | **யோவான்** (சீடர்களில் அவன் ஒருவன் மட்டுமே) இயற்கையாக மரித் தான். |
| A.D. 107 | அந்தியோகியாவின் பிஷப் இக்னேஷியஸ் கொல்லப்பட்டது. |
| A.D. 132-135 | யூதர்களின் இரண்டாவது கலகம் - எருசலேமின் அழிவு. |
| A.D. 155 | சிமிர்னா சபையின் பிஷப் **போலிகார்ப்** எரித்து கொலைசெய்யப்பட்டார். |
| A.D. 193 | ரோம அரசின் கொடுமைகள் - கிறிஸ்தவர்களுக்கு எதிராக. |
| A.D. 197 | கிறிஸ்தவம் மொராக்கோ, பல்கேரியா, போர்ட்டுகல், ஆஸ்திரியா, வட ஆப்பரிக்கா ஆகிய இடங்களுக்கு பரவியது. |
| A.D. 200 | வேதம் **ஏழுமொழிகளில்** மொழிபெயர்க்கப்பட்டது. |
| | எகிப்தில் கிறிஸ்தவர்கள் கொலைசெய்யப்பட்டனர். |

A.D. 235-270 ரோமப் பேரரசின் கொடுமைகள் தொடர்ந்தது. ஆனால் கிறிஸ்தவம் வளர்ந்தது.

A.D. 261 வீடுகளில் தேவனை ஆராதித்து வந்த கிறிஸ்தவர்களுக்கு ஆராதிக்க **ஆலயம்** கட்டப்பட்டது. எகிப்தில் **மடங்கள்** நிறுவப்பட்டன. (தனிமையிலும், கூட்டமாகவும் வாழும் துறவிகளுக்கான மடங்கள்).

A.D. 287 அர்மேனியா நாட்டில் கிறிஸ்தவம் அரசாங்க மதமாக அறிவிக்கப்பட்டது.

A.D. 292 ரோமப் பேரரசு இரண்டாகப் பிரிக்கப்பட்டது. ரோமப்பேரரசு வலுவிழக்க ஆரம்பித்தது.

A.D. 295 சில கிறிஸ்தவர்கள் யுத்த சேவை செய்ய மறுத்ததால் இராஜாக்களின் அதிருப்தி. ஸ்விட்சர்லாந்து, சஹாரா, பெல்ஜியம், கத்தார், பஹ்ரின் (அசீரியா சபை), ஹங்கேரி, லக்ஸம்பர்க், எடேசா ஆகிய நாடுகளுக்கு பரவிய கிறிஸ்தவம்.

A.D. 303-4 கிறிஸ்தவர்கள் பயங்கரமாக துன்புறுத்தப்பட்டனர். வேதாகமம் எரிக்கப் பட்டது. அநேகர் கொல்லப்பட்டனர்.

A.D. 312 **கான்ஸ்டன்டைன்** I (மேற்கத்திய நாடுகளின் பேரரசன்) சிலுவையில் மரித்த இயேசுவை தரிசித்தான். அவரது தாயாராகிய **ஹெலனா** என்கிற பக்திமிக்க கிறிஸ்தவப் பெண்மணி புனித நாட்டிற்கு விஜயம் செய்து இயேசுவின் வாழ்க்கை சம்பந்தப்பட்ட இடங்களை தரிசித்து, அநேக தேவாலயங்களைக் கட்டினார்கள்.

A.D. 313 கான்ஸ்டன்டைன் அரசனுடன் கிழக்கத்திய நாடுகளின் பேரரசனும் இணைந்து, கிறிஸ்தவர்களுக்கு இழைக்கப்பட்டுக் கொண்டிருந்த கொடுமைகளை நிறுத்தும்படியாக ஒப்பந்தம் (Edict of Milan) செய்துகொண்டான். ஆனால் கொடுமைகள் தொடர்ந்தன.

A.D. 320 Arianism என்கிற கொள்கை (கிறிஸ்து தேவன் என்கிற கொள்கையை எதிர்க்கும் கொள்கை) உருவானது.

A.D. 324 சபை வரலாறு எழுதப்பட்டது.

A.D. 325 Council of Nicaea-வில் தேவதிரித்துவத்தை வலியுறுத்தும் **Nicen Creed** உறுதியாக்கப்பட்டது.

A.D. 330 கான்ஸ்டன்டைன் தனது தலைநகரை கான்ஸ்டான்டிநோபிளுக்கு மாற்றி னான்.

A.D. 337 தனது மரணத்திற்கு சிறிது முன்பாக கான்ஸ்டன்டைன் ஞானஸ்நானம் பெற்றான்.

A.D. 339 பெர்சியா (இரான்)வில் கிறிஸ்தவர்களுக்கு மிகப்பெரிய துன்பம் ஏற்பட்டது.

A.D. 367 **புதிய ஏற்பாடு புத்தகம்** வடிவமைக்கப்பட்டது.

A.D. 381 Nicen Creed உறுதிசெய்யப்பட்டது மூலம், கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையைக்குறித்த கேள்விகள் முற்றுப்பெற்றன.

A.D. 391 **தியோடோஸியஸ்** (Theodosius) கிறிஸ்தவத்தை அரசு மதமாக அங்கீகரித்தான்.

A.D. 398 கிறிஸ்தவம் அப்கானிஸ்தான் மற்றும் எத்தியோபியாவிற்கு பரவியது.

A.D. 404 **வல்கேட்** (Vulgate) என அறியப்படும் **லத்தீன்** மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட வேதம் 22 வருட உழைப்பின் இறுதியில் உருவாக்கப்பட்டது. அதற்கு பின்வந்த 1000 வருடங்கள் இது உபயோகத்தில் இருந்தது.

A.D. 432 அயர்லாந்து நாட்டில் கிறிஸ்தவம் பரவியது. ஏறக்குறைய அனைத்து மக்களும் 30 வருடங்களுக்குள் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினார்கள்.

A.D. 476 மேற்கு ரோமப் பேரரசின் வீழ்ச்சி. மத்திய காலத்தின் ஆரம்பம்.

A.D. 499 இந்த நூற்றாண்டிற்குள், வேதத்தை 13 மொழிகளில் மொழிபெயர்த்து முடித்தார்கள். ஆப்பரிக்கா, அயர்லாந்து, மத்திய ஆசியா ஆகிய இடங்களில் கிறிஸ்தவம் பரவியது.

A.D. 500 எத்தியோப்பியாவில் **சிரியன் ஆர்தடாக்ஸ்** சபை ஒரு **மடத்தை** நிறுவியது.

A.D. 520 அயர்லாந்து நாட்டின் மடங்கள் கல்வியறிவிலும், ஆன்மீக வளர்ச்சியிலும், மிஷனெரிகளை உருவாக்குவதிலும் தலைசிறந்து விளங்கின.

A.D. 525 மத்திய நாடுகள், அரேபியா (சவுதி அரேபியா, ஏமன், ஓமன்) ஆகிய இடங்களில் கிறிஸ்தவம் பரவியது.

A.D. 545 கிறிஸ்துவின் பிறப்பை ஆதாரமாக்கி, கால அளவை கி.மு., கி.பி. என்று பிரித்த Dionysius Exiguus என்கிற துறவி மரித்தார். (அவரது கால கணிப்பில் சிறிய ஒரு பிழை - 4 வருடங்கள் - ஏற்பட்டிருப்பதாக கருதப்படுகிறது).

A.D. 590 **Gregory the Great** எனும் போப் இங்கிலாந்துக்கு மீண்டும் மிஷனெரிகளை அனுப்பினார். மடங்களின் வளர்ச்சியிலும், ஆராதனைப்

பாட்டுகள் இசைப்பதிலும் அவர் வல்லுனராக இருந்தார். தற்போது நாம் பயன்படுத்தும் நாட்காட்டி (English Calender) உருவாக்கியவர் இவரே (Gregorean Calendar).

A.D. 597 ஸ்காட்லாந்திலுள்ள முக்கிய மடத்தை ஸ்தாபித்த கொலம்பாவின் மரணம். வட ஏமன், ஸ்ரீலங்கா, மலபார், சூடான், ஆன்டோரா ஆகிய இடங்களுக்கு கிறிஸ்தவம் பரவியது.

A.D. 600 **Gregorian Chants** எனப்படும் ஆராதனைப் பாடல் பிரபலமாகியது.

A.D. 622 **முகம்மது,** தன்னை தேவனின் தீர்க்கதரிசியாக அறிவித்துவிட்டு, **மெக்கா**வை விட்டு **மெதினா**வுக்கு ஓடினார். 630-ல் திரும்பி வந்து, தனது எதிரிகளை வென்றுவிட்டு, **குரான்** என்கிற புஸ்தகத்தின் மூலம் தனது கொள்கைகளை பரப்பினார்.

A.D. 632 முகம்மதுவின் மரணம். முஸ்லிம் மதம் (இஸ்லாமியரின் மதம்) பலஸ்தீனா மற்றும் சிரியா தேசங்களுக்கு பரவியது. எருசலேம் அவர்கள் ஆட்சிக்குட்பட்டது. எகிப்து மற்றும் வட ஆப்பரிக்காவில் கிறிஸ்தவம் அழிக்கப்பட்டு, இஸ்லாம் மதம் பரவியது.

A.D. 680-692 கிழக்கத்திய மற்றும் மேற்கத்திய சபைகள் இரண்டாகப் பிரிந்தது.

A.D. 688-691 அப்தல் மாலிக் (Abdal-Malik) எனும் இஸ்லாமிய காலிப் (Caliph) எருசலேம் மலையில் **Dome of the Rock** எனும் தங்கத்தகட்டால் மூடப்பட்ட மேல்கூரையுடைய இஸ்லாமிய வழிபாட்டு ஸ்தலத்தை உருவாக்கினான்.

கிறிஸ்தவம், சீனா, அண்டோரா (Andorra), நெதர்லாந்து, இந்தோனேஷியா, நைஜர், (Niger), மங்கோலியா ஆகிய நாடுகளில் பரவியபோது, வட ஆப்பரிக்காவில் குறைய ஆரம்பித்தது.

A.D. 716 **போனிபேஸ்** (Boniface) எனும் துறவி, தெற்கு மற்றும் மத்திய ஜெர்மானிய நாட்டில் மடங்கள் (Benedictine Monasticism) நிறுவினார்.

A.D. 720 யோவான் எழுதிய சுவிசேஷம் **பீட்** (Bede) அவர்களால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது.

A.D. 732 சார்லஸ் மார்டல் (Charles Martel) என்பவரால் பிரஞ்சு நாட்டில் முஸ்லிம் படையெடுப்பு தடைபட்டது. (100 வருடங்கள் வரைக்கும்).

A.D. 754 பெபின் எனும் சார்லஸ் மார்டலின் மகனது உதவியுடன் **இத்தாலி** நாடு **போப்பின் அதிகாரத்தின்** கீழ் வந்தது.

A.D. 768-814 **சார்லமேன்** (Charlemagne - பெபினின் மகன்) பிரான்சு, ஜெர்மனி மற்றும் இத்தாலியைத் தன் அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்தான்.

கிறிஸ்தவம், ஐஸ்லாந்து, பாகிஸ்தான் மற்றும் கிழக்கு ஜெர்மனிக்கு பரவியது.

A.D. 800 போப் லியோ III அவர்களால் சார்லமேன் ரோமப்பேரரசராக பட்டம் சூட்டப்பட்டான். சபை மற்றும் கல்வித்துறையில் அநேக புதிய மாற்றங்கள் உருவாகியது. அதன் மூலம் கலாச்சார மாற்றம் உருவாகியது.

A.D. 800 **எக்பர்ட்** (Egbert - King of the west Saxons) இங்கிலாந்தை ஒருங்கிணைத்து, அதன் முதல் அரசனாக பட்டம் சூட்டிக் கொண்டான்.

A.D. 814 சார்லமேனின் மரணம்.

A.D. 829 ஸ்வீடன் நாட்டில் கிறிஸ்தவம் ஆன்ஸ்கார் (Anskar - Apostle of the North) மூலம் பரவியது.

A.D. 846 முஸ்லிம்கள் ரோம் நகருக்கு நேராக போர் தொடுத்தார்கள்.

A.D. 871 **ஆல்ப்ரட்** (Alfred the Great - King of Wessex), சங்கீதங்களில் சிலவற்றையும், யாத்திராகமம், அப். நடபடிகள் ஆகியவற்றையும் புராதன (Anglo-saxon) ஆங்கில மொழியில் மொழிபெயர்த்தார்.

A.D. 876 கிறிஸ்தவம் திபெத்து, பர்மா, டென்மார்க், செக்கோஸ்லோவேக்கியா, ஸ்வீடன் மற்றும் நார்வே நாடுகளுக்கு பரவியது.

A.D. 902 முஸ்லிம்கள் சிசிலி (Sicily) நாட்டைக் கைப்பற்றினர்.

A.D. 962 **ஒட்டோ** அரசன் (Otto the Great), பரிசுத்த ரோம சாம்ராஜ்யத்தின் (Holy Roman Empire) பேரரசனாக போப் ஜான் XII அவர்களால் பட்டம் சூட்டப்பட்டான்.

A.D. 988 **விளாடிமிர்** (Vladimir of Kiev) கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய பின், ருஷ்யாவில் விக்கிரகாராதனை முதலியவற்றை ஒழித்துவிட்டு தேவாலயங்கள் மற்றும் பள்ளிகள் ஆகியவற்றை நிறுவினான். அவனது மரணத்திற்கு பின் அவனது சொத்துகள் ஏழைகளுக்கு தானமாக கொடுக்கப்பட்டது.

A.D. 996 எகிப்தில், எல் ஹக்கீம் (Caliph El Hakim) எனும் காலிப் கிறிஸ்தவர்களையும், தேவாலயங்களையும் ஒழித்துவிட்டு, மக்களை இஸ்லாம் மதத்தை பலாத்காரமாகத் தழுவச் செய்தான்.

A.D. 999 நார்வே, மற்றும் க்ரீன்லாந்துக்கு கிறிஸ்தவம் பரவியது.

கிறிஸ்தவம் ஹங்கேரி, கீவ் (தற்போதைய ருஷ்யா), க்ரீன்லாந்து, பொஹீமியா, போலந்து ஆகிய நாடுகளுக்கு பரவியது.

A.D. 1009 மங்கோலியா, பெர்சியா (Iran), சீனா ஆகிய நாடுகளுக்கு கிறிஸ்தவம் பரவியது.

A.D. 1066 பிரெஞ்சு கிறிஸ்தவர்கள் (Norman) பிரிட்டன், சிசிலி ஆகியவற்றை கைப்பற்றி சுவிசேஷம் அறிவித்தனர்.

A.D. 1073 **போப் கிரகரி VII**யின் முயற்சியால் சபையில் அநேக நல்ல மாற்றங்கள் உருவாயிற்று.

A.D. 1096 **போப் அர்பன்** (urban II) எருசலேமை கைப்பற்ற போர்புரியும்படி மக்களை ஊக்கப்படுத்தினார்.

A.D. 1097-99 **முதல் புனிதப்போர்** மூலம் 1099-ல் எருசலேம் கைப்பற்றப்பட்டது. அங்கு அரண்மனைகளும், தேவாலயங்களும் கட்டப்பட்டன.

A.D. 1129 The Knights Templar எனும் அமைப்பு, பரிசுத்த நகரத்தைக் காவல்காக்கும் பணியில் ஈடுபடுவது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

A.D. 1130 போப் இன்னஸன்ட் II, போப் ஆகிறார்.

A.D. 1146 இரண்டாவது புனிதப்போர் தோல்வியில் முடிவடைந்தது.

A.D. 1150 சிரியன் ஆர்தடாக்ஸ் சபை மிகவும் பிரபலமாகியது.

போப் அவர்களால் College of Cardinals ஸ்தாபிக்கப்பட்டது.

A.D. 1187 முஸ்லிம்களின் படைத்தலைவன் **சலாடின்** (Saladin) எருசலேமைக் கைப்பற்றினான்.

A.D. 1189-92 **ரிச்சர்ட்** (King Richard I - the Lion Heart) ராஜா, எருசலேமிற்கு புனித பயணம் செய்ய அனுமதிகோரி, சமரசம் பண்ணினான்.

கிறிஸ்தவம் பின்லாந்தில் பரவியது.

A.D. 1209 **புனித பிரான்ஸிஸ்** (of Assisi) தனது சொத்துக்களை தியாகம் செய்துவிட்டு, பிரான்ஸிஸ்கன் மிஷனெரி இயக்கம் (Travelling Preachers) ஆரம்பித்தார்.

A.D. 1211 **ஜெங்கிஸ்கான்** எனும் மங்கோலிய அரசன் சீனா, ஈரான், ஈராக்கு நாடுகளுக்கு எதிரே போர்தொடுத்தான்.

A.D. 1229 பேச்சுவார்த்தைகளால் கைப்பற்றப்பட்ட எருசலேம், 1244-ல் மீண்டும் முஸ்லிம்களின் கைவசமாகியது.

A.D. 1295 மங்கோலியர்களின் தலைவன் **குப்லாய் கான்** (Kublai Khan) கிறிஸ்தவரானபோது, அவர்கள் கிறிஸ்தவ மதத்தில் இணைய ஆரம்பித்தார்கள்.

A.D. 1302 பிரான்ஸிஸ்கன் மிஷனெரிகள் மங்கோலியாவில் பணிபுரிய ஆரம்பித் தார்கள்.

A.D. 1348-51 பிளேக் நோயால் ஐரோப்பிய கண்டத்தின் 33% மக்கள் மரித்தார்கள்.

A.D. 1371 ஆங்கிலேய மதகுருவான **ஜான் வேக்ளிப்** (John Wycliffe) என்பவரது ஏவுதலால் 1382-ல் வேதாகமம் லத்தீன் மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்டது. (Wycliff Bible).

A.D. 1413 செக்கோஸ்லோவேக்கியாவின் பொஹீமியாவிலுள்ள ஜான் ஹஸ் (Jan Hus) என்பவர் வேக்ளிப்பின் கருத்துக்களை ஆதரித்தார்.

A.D. 1414-18 ஜான் ஹஸ்ஸை எரித்துக் கொன்றார்கள்.

A.D. 1453 துருக்கியிலுள்ள ஒட்டோமான்கள் (Ottoman Turks) கான்ஸ்டான்டிநோப் பிளைப் பிடித்தபின் அங்குள்ள St. சோபியா தேவாலயத்தை பள்ளிவாச லாக மாற்றினார்கள். அங்கு வசித்துவந்த கல்விமான்கள், தங்களது மிக அரிய பொக்கிஷங்களான கிரேக்க ஏடுகளையும், வேதாகமப் பிரதிகளையும் எடுத்துக்கொண்டு மேற்கத்திய நாடுகளுக்கு குடிபெயர்ந்து சென்றனர்.

A.D. 1456 முதன்முதலாக வேதாகமம் (Latin Vutgate) **அச்சு இயந்திரத்தில்** அச்சிடப் பட்டது.

A.D. 1492 **கொலம்பஸ்** அமெரிக்கா கண்டத்தை கண்டுபிடித்தான்.

A.D. 1493 அமெரிக்கா மற்றும் ஆப்பரிக்கா கண்டத்திற்கு மிஷனெரிகள் அனுப்பப் பட்டனர். கென்யா, செனகல் முதலிய நாடுகளுக்கு கிறிஸ்தவம் பரவியது.

A.D. 1500 இஸ்லாம் மதம் பரவியதால் சீனா, பெர்சியா, எகிப்து, எத்தியோப்பியா ஆகிய இடங்களில் கிறிஸ்தவம் அழிய ஆரம்பித்தது.

A.D. 1503-12 **மைக்கல் ஆஞ்சலோ,** தேவாலயத்தில் (Sistine Chapel) தனது கைவண் ணத்தால் சித்திரங்கள் தீட்டியது.

A.D. 1516 மதகுருவும், கிரேக்க பண்டிதனுமான **இராஸ்மஸ்** என்பவர் (Erasmus) புதிய ஏற்பாட்டு நூலை கிரேக்க மொழியில் மொழியெபர்த்தார்.

A.D. 1517 **மார்ட்டின் லூத்தர்** தலைமையில் ப்ராட்டஸ்டன்டுகளின் புரட்சியின் ஆரம்பம்.

A.D. 1522 ஜெர்மானிய மொழியில் புதிய ஏற்பாட்டை மார்ட்டின் லூத்தர் மொழிபெயர்த்தார்.

A.D. 1529 **லூத்தரன்கள்** (Lutheranism), **ஸ்விங்கின்கள்** (Zwinglianism), **கால்வினிஸ்ட்கள்** (Calvinism) ஆகியோர் ப்ராட்டஸ்டன்டுகள் (Protestants) என அழைக்கப்பட ஆரம்பித்தனர்.

A.D. 1534 பிரிட்டனின் அரசன் **ஹென்றி VIII** (ஆங்கில திருச்சபையின் தலைவர்), ரோமன் கத்தோலிக்க தலைமையிலிருந்து விடுபட்டார்.

A.D. 1537 அரசரின் அனுமதியுடன் முதன் முதலாக ஆங்கில வேதாகமம் வெளியிடப்பட்டது.

A.D. 1540 புறஜாதியினரிடையே ஊழியம் புரிய ஆரம்பிக்கப்பட்ட **இக்னேஷியஸ் லயோலா**வின் Society of Jesus (ஜெஸுயிட்டுகள்) அங்கீகரிக்கப்பட்டனர்.

A.D. 1549 கத்தோலிக்க மற்றும் ப்ராட்டஸ்டன்ட் பிரிவினருக்கு பொதுவானதாகக் கருதப்படும் ஜெபங்களடங்கிய Book of Common Prayer, இங்கிலாந்தின் Church of England வெளியிட்டது.

இன்டீஸ் மற்றும் ஜப்பானில் **ப்ரான்ஸிஸ் சேவியர்** அடிகளார் மூலம் 1,00,000 பேர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர்.

A.D. 1555 ராணி மேரியால் துன்புறுத்தப்பட்ட ப்ராட்டஸ்டன்டுகள் ஜெனீவா மற்றும் ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகளில் தஞ்சமடைந்தனர். இங்கிலாந்தில் தடைசெய்யப்பட்ட ப்ராட்டஸ்டன்டுகளின் வேதாகமம், **ஜெனீவாவில்** 1560-ல் அச்சிடப்பட்டது.

A.D. 1558 போப் அவர்களால் சபையிலிருந்து புறந்தள்ளப்பட்ட ராணி எலிசபெத்தின், (Queen Elisabeth I) கத்தோலிக்கரையும் ப்ராட்டஸ்டண்டுகளையும் இணைக்கும் முயற்சி தோல்வியுறவே, அவர்களால் கத்தோலிக்கர் கொடுமைக்காளானார்கள்.

A.D. 1598 முப்பது வருடகால சோதனைகளுக்குப்பின் பிரஞ்சு நாட்டில் ப்ராட்டஸ்டன்டுகளுக்கு ஆராதனை செய்ய உரிமை கிடைத்தது.

கத்தோலிக்க மிஷனெரிகளின் அயராத உழைப்பினால் தாய்லாந்து, தென் கொரியா, தென் அமெரிக்கா, ஆப்பரிக்கா தேசங்களில் கிறிஸ்தவம் பரவியது.

A.D. 1601 சீனாவின் அரசருடன் நட்புகொண்டு, சீனர்களைப் போலவே உடையணிந்து அவர்களிடையே பெரும் மதிப்புபெற்ற **Matteo Ricci** எனும் அறிஞரான, ஜெஸுயிட் மிஷனெரி மூலம் சீன தேசத்தில் கிறிஸ்தவம் பரவியது.

A.D. 1609 ஆம்ஸ்டர்டாமில் **முதல் பாப்திஸ்து சபை** உருவாயிற்று. (John Smith மூலம்).

A.D. 1611 **'கிங் ஜேம்ஸ் வெர்ஷன் பைபிள்'** (KJV) உருவாகி வெளியிடப்பட்டது.

A.D. 1630 ஜப்பானில் கத்தோலிக்கர் கொன்று குவிக்கப்பட்டு, கிறிஸ்தவம் அழிந்தது.

A.D. 1633 **வின்செண்ட் டி பாலின்** (Vincent de Paul) Sisters of Charity ஆரம்பமாகியது.

A.D. 1642 விஞ்ஞானியான **கலிலியோ**வின் மரணம்.

A.D. 1667 Paradise Lost, **ஜான் மில்ட்ட**னால் எழுதப்பட்டது.

A.D. 1678 Pilgrim's Progress, **ஜான் பன்யனால்** எழுதப்பட்டது.

A.D. 1692 சீனாவில், அரசனால் கிறிஸ்தவம் ஏற்றுக்கொள்ளப்பட்டு மேலும் பரவியது.

A.D. 1698 ப்ராட்டஸ்டன்டுகளால் மிஷனெரி சொஸைட்டிகள் உருவாக்கப்பட்டன.

A.D. 1705 Pietism என்கிற அதீதமான பக்தியுடன் கூடிய கிறிஸ்தவ வழிபாட்டை ஆரம்பித்த பிலிப் ஜாக்கப் ஸ்பினர் மரணமடைந்தார்.

A.D. 1706 அமெரிக்காவில் முதல்முதலாக **பிரிஸ்பிட்டேரியன் சபை** நிறுவப்பட்டது.

A.D. 1724 கிரேக்க கத்தோலிக்க சபை லெபனானில் நிறுவப்பட்டது.

A.D. 1738 **மெதடிஸ்ட் சர்ச்** நிறுவப்பட்டது. **சார்லஸ் வெஸ்லி** 6,000 கிறிஸ்தவ பாடல்கள் இயற்றினார்.

A.D. 1739 ஆங்க்லிக்கன் சொற்பொழிவாளரான **ஜார்ஜ் ஒயிட்பீல்ட்** (George White Field) திறந்தவெளி அருளுரைகள் நிகழ்த்த ஆரம்பித்தார்.

**ஜான் வெஸ்லி,** குதிரை மீது சவாரிசெய்து கொண்டே, 40,000-ற்கு மேற்பட்ட சொற்பொழிவுகளை ஆற்றினார்.

A.D. 1740 எழுப்புதல், அமெரிக்க தேசத்தை அசைத்தது.

A.D. 1764 அடிமை வியாபாரியான **ஜான் நியூட்டன்,** மனம் திருந்தியபின் Amazing Grace என்கிற பாடலை இயற்றினான்.

A.D. 1780 பட்டணத்திலுள்ள ஏழைகளுக்காக இங்கிலாந்தில் **ஞாயிறு பள்ளி** ஆரம்பிக்கப்பட்டது.

A.D. 1789 பிரெஞ்சு புரட்சியின் காரணமாக, கிறிஸ்தவர்கள் ஒடுக்கப்பட்டனர்.

A.D. 1793 **வில்லியம் கேரி** என்கிற மிஷனெரி இந்தியாவிற்கு தனது மனைவி **டாறதி**யுடன் வந்தார்.

A.D. 1795 அடிமை வியாபாரம், அமெரிக்க சபைகளில் பிளவுகளை உருவாக்கியது.

A.D. 1797 மெதடிஸ்டுகள் Church of England-லிருந்து பிரிந்து, தனியாக சபை ஸ்தாபித்தனர்.

A.D. 1804 **நெப்போலியன் போனாபார்ட்** பிரான்ஸ் தேசத்தின் மன்னனானான்.

A.D. 1807 **வில்லியம் வில்பர்போர்ஸ்** என்பவரது முயற்சியால் இங்கிலாந்தில் அடிமை வியாபாரம் ஒழிந்ததுடன் அநேக சீர்திருத்தங்களும் நடைபெற ஆரம்பித்தன.

A.D. 1813 **அதோனிராம், ஆன் ஜட்ஸன்** ஆகியோர் பர்மாவிற்கு சென்றனர்.

A.D. 1835 **சாரல்ஸ் பின்னி** நியூயார்க்கில் எழுச்சியை உருவாக்கினார்.

A.D. 1836 இங்கிலாந்தில் **ஜார்ஜ் முல்லரால்** அநாதை சாலை உருவாக்கப்பட்டது.

A.D. 1840 **டேவிட் லிவிங்ஸ்டன்** ஆப்பரிக்கா சென்றார்.

A.D. 1844 **YMCA** மற்றும் **YWCA** இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்டது.

A.D. 1854 பாப்திஸ்து போதகர் **ஸ்பர்ஜன்** தனது அருளுரைகள் மூலம் அநேகரைக் கவர்ந்தார்.

A.D. 1855 எழுப்புதல் உருவாக்கிய **மூடி, பின்னி,** பாடகர் **சாங்கி** ஆகியோரின் ஊழியம்.

A.D. 1859 பரிணாம படிமுறை கொள்கையை சாரல்ஸ் டார்வின் எழுதினார்.

A.D. 1864 கொரியாவில் கத்தோலிக்கர்கள் கொல்லப்பட்டனர்.

A.D. 1878 ஏழைகளின் மத்தியில் பணிபுரிய **இரட்சணிய சேனை** (The Salvation Army) என்கிற அமைப்பு **வில்லியம் பூத்** அவர்களால் உருவாக்கப்பட்டது.

A.D. 1880 மூடியின் (Moody) தலைமையில் North field Conferences நடைபெற்றன.

A.D. 1895 துருக்கியர் 300000 அமெரிக்க கிறிஸ்தவர்களைக் கொன்று குவித்தார்கள்.

A.D. 1901 ஐரிஷ் மிஷனெரியான **ஏமிகார்மைக்கல்** அம்மையார் இந்தியாவிலுள்ள டோனாவூரில் தனது 53 வருட ஊழியத்தை ஆரம்பித்தார்கள்.

A.D. 1906 **பெந்தேகோஸ்தே சபை**களின் ஆரம்பம்.

A.D. 1914 **அசெம்பிளிஸ் ஆப் காட்** (Assemblies of God) சபையின் ஆரம்பம்.

A.D. 1934 **Wycliff Bible Translators** அமைப்பு மூலமாக, வேதாகமம் அநேக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட ஆரம்பித்தது.

A.D. 1933-45 நாசிகள் (Nazis) உருவானதால் இரண்டாம் உலகப்போர் ஆரம்பமாகி லட்சக்கணக்கான யூதர்களும், கிறிஸ்தவர்களும் கொலைசெய்யப் பட்டனர்.

A.D. 1945 Dietric Bonhoeffer என்கிற ஜெர்மானிய லுத்தரன் குருவானவர் கொல்லப் பட்டார்.

A.D. 1948 B.C. 100ல் எழுதப்பட்ட **சவக்கடல் சுருள்கள்** (Dead Sea Scrolls) கண்டுபிடிக்கப்பட்டன.

A.D. 1949 சவுதி அரேபியா, அப்கானிஸ்தான், திபெத் ஆகிய நாடுகள் தவிர, பூமியிலுள்ள எல்லா நாடுகளிலும் கிறிஸ்தவ சபைகள் ஆரம்பிக்கப் பட்டன. **பில்லி கிரகாம்** என்கிற தேவ ஊழியன் தனது மகத்தான ஊழியத்தை ஆரம்பித்தார்.

ரோமன் கத்தோலிக்க சபை தவிர மற்ற எல்லா சபைகளும் இணைந்து World Council of Churches உருவாகியது.

A.D. 1962 ரோமன் கத்தோலிக்கர் மற்றும் ப்ராட்டஸ்டன்டுகளிடையே ஒற்றுமை உருவாக ஆரம்பித்தது. அன்னை **தெரேசா,** தனது 50 வருட தியாக உழைப்பை ஆரம்பித்து, அதன் முடிவில் கல்கத்தாவில் மரணமடைந்தார்.

A.D. 2004 The Passion of the Christ என்கிற திரைப்படம் திரையிடப்பட்டது.

A.D. 2008 Feb. 20 இந்தியாவின் தலைசிறந்த கிறிஸ்தவ ஊழியரும், இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் ஸ்தாபகரும், இந்தியாவின் முதல் கிறிஸ்தவ பல் கலைக்கழகமான காருண்யா யூனிவர்சிடியின் நிறுவனருமான **Dr. D.G.S. தினகரனின் மறைவு.**

# 23. வேதாகம மற்றும் உலக நிகழ்ச்சிகளின் தொகுப்பு

| | வேதாகம நிகழ்ச்சிகள் | | உலக நிகழ்ச்சிகள் |
|---|---|---|---|
| கி.மு. 4000 ஆண்டிற்கும் அநேக வருடங்கள் முன் | தேவன் பூமியைப் படைத்தார். | கி.மு. 4500 | சுமேரியப் பேரரசு நிறுவப்பட்டது (ஆபிரகாமின் ஊர் எனும் பட்டணத்தில்) |
| | | கி.மு. 3400 | பெருவெள்ளத்தால் ஊர் பாதிக்கப்பட்டது. |
| | | கி.மு. 2550 | எகிப்திலுள்ள கிஸா (GIZA) பெரிய பிரமிட் கட்டப்பட்டது. |
| | | கி.மு. 2136 | கிரகணம் நடைபெற்ற நிகழ்ச்சி, முதன்முதலில் சீனாவில் பதிவு செய்யப்பட்டது. |
| கி.மு. 2100 | ஆபிரகாம் பிறந்தார் | கி.மு. 2000 | ஊர் பட்டணம் எதிரிகளால் தாக்கப்பட்டது. |
| | | கி.மு. 2000 | பாபிலோனியர்களால் எழுதப்பட்ட முதல் காவியம் (Epic of Gilgamesh). அதில் ஜீவ விருட்சம், கெட்ட பாம்பு மற்றும் பெருவெள்ளம் ஆகியவை குறித்த கதைகள் எழுதப்பட்டிருந்தன. |
| | | கி.மு. 1895 | எகிப்தின் நல்ல ஒரு அரசனின் (King Sesotris II) காலத்தில் மக்கள் அங்கு சென்று குடியேற ஆரம்பித்தனர். வட எகிப்தில் நீர்பாசன திட்டங்களை அமுல் படுத்திய அரசன் இவன் ஆவான். |

கி.மு. 1870 பஞ்சத்தின் பிடியில் சிக்கித்தவித்த யாக்கோபும், அவனது குடும்பத்தினரும் எகிப்திற்குச் சென்றார்கள்.

கி.மு. 1440 மோசே, எபிரெயர்களை எகிப்திலிருந்து வெளியேற்றி, கானானுக்கு நேராக வழிநடத்தினார். (சில அகழ்வாராய்ச் சியாளர்கள் எகிப்தில் ராமசேஸ் (Ramasos II) என்பவர் ஆட்சி புரிந்த காலத்தில், 1275-ம் ஆண்டு இஸ்ரவேலர் எகிப்தை விட்டு புறப்பட்டார்கள் என்று கூறுகிறார்கள்).

கி.மு. 1200 இஸ்ரவேலர் நியாதிபதிகளால் ஆட்சி செய்யப்பட்டனர்.

கி.மு. 1100 சிம்சோன் பெலிஸ்தரை கீழடக்கி நியாயம் விசாரித்தான்.

கி.மு. 1050 சவுல் ராஜாவாகிறான்.

கி.மு. 1010 தாவீது அரசனாகிறான்

கி.மு. 1760 ஹம்முரபியின் (Hammu'rabi) சட்டங்கள், (அவற்றில் சிலவற்றை மோசே அளித்த கட்டளைகளிலும் நாம் காணமுடியும்.)

கி.மு. 1450 ஹிந்து மார்க்கம் உருவானதாக நம்பப்படுகிறது.

கி.மு. 1440 'எகிப்தின் நெபோலியன்' என அழைக்கப்படும் தட்மோஸ் அரசன் (Thutmose III) தற்போதைய இஸ்ரேல் நாடு இருக்கும் இடத்தை ஆக்கிரமித்தான்.

கி.மு. 1300 ராமசேஸ் அரசன் நைல்நதி தீரங்களில் ஆப்பிள் சாகுபடி ஆரம்பித்தான்.

கி.மு. 1200 பெலிஸ்தர்கள் முதலிய வம்சத்தினர் இஸ்ரேல், மற்றும் எகிப்திய கடலோரங்களில் வாசம் செய்ய ஆரம்பித்தனர்.

கி.மு. 1200 தீருவில் நடைபெற்ற போர், தீரு தீக்கிரையாகிப் போன போது நிறுத்தப்பட்டது.

கி.மு. 1100 கிரேக்க கலாச்சாரத்தின் வீழ்ச்சி (350 வருடங்கள்)

கி.மு. 1000 சீனர்கள் உறைபனிக்கட்டிகளால் குளிர்பதனமூட்டும் முறையைக் கண்டுபிடித்தார்கள்.

| | | | |
|---|---|---|---|
| கி.மு. 970 | சாலமோன் ராஜா-வானபின், எருசலேம் தேவாலயத்தை கட்டி முடித்தான். | கி.மு. 950 | எகிப்திய பிரபுக்கள் தலையில் 'விக்' (Wig) அணியும் பழக்கம் ஆரம்பமாகியது. |
| கி.மு. 930 | இஸ்ரவேல் இரண்டாகப் பிரிகிறது. | கி.மு. 776 | கிரேக்க நாட்டில் 'ஒலிம்பிக் விளையாட்டுகளின் ஆரம்பம். |
| கி.மு. 722 | அசீரியர்களால் வடநாட்டு இஸ்ரவேலர்கள் சிறைபிடித்துச் செல்லப்பட்டனர். | கி.மு. 701 | எசேக்கியா ராஜாவை முற்றுகை இட்ட செனாகெரிப். |
| கி.மு. 586 | எருசலேமை தரைமட்ட மாக்கிய பாபிலோனியர்-கள் தென்நாட்டு இஸ்ரவேலரை (யூதேயா) சிறைபிடித்துச் சென்றனர். | கி.மு. 551 | கன்ப்யூசியஸ் (Confucius) பிறந்தார். |
| கி.மு. 538 | சிறைபிடிக்கப்பட்ட யூதர்கள் பாபிலோனிலிருந்து திரும்பினார்கள். | கி.மு. 550 | உலக அதிசயங்களில் ஒன்றான Temple of Artemis எபேசுவில் (துருக்கி)கட்டப்பட்டது. |
| | | கி.மு. 539 | பெர்சிய அரசன் கோரேசு, பாபிலோனைக் கைப்பற்றி, யூதர்களை விடுவித்தார். |
| | | கி.மு. 528 | புத்தருக்கு ஞானம் கிடைத்தது. |
| | | கி.மு. 490 | மாரத்தான் போரில் பெற்ற வெற்றியை அறிவிக்க கிரேக்கர்கள் 25 மைல்கள் ஓடிய நிகழ்ச்சி. |
| கி.மு. 470 | எஸ்தர் மகாராணியால் ஒரு மாபெரும் கூட்டக் கொலை பாதகம் தவிர்க்கப்பட்டது. | கி.மு. 470 | மருத்துவத்தின் தகப்பன் என அறியப்படும் Hippocrates பிறந்தார். |
| | | கி.மு. 63 | ரோமப்படைத்தலைவன் Pompey எருசலேமுக்கு நேராகப் படை எடுத்தான். |

| | | | |
|---|---|---|---|
| கி.மு. 37 | ஏரோது, யூதர்களின் ராஜாவாக அபி-ஷேகிக்கப்பட்டான். | கி.மு. 30 | கிளியோபாட்ரா, அந்தோணி ஆகியோரின் தற்கொலை. |
| கி.மு. 6 | இயேசு பெத்லகேமில் பிறந்தார். | கி.மு. 6 | யூப்பித்தர், சனி ஆகிய கிரகங்கள் நேர்கோட்டில் வந்து மிகப் பிரகாசமாகக் காட்சி அளித்தது. |
| கி.மு. 4 | ஏரோதுவின் மரணம் | கி.மு. 5 | உடைந்து சிதறிய விண்மீன் (Nova) |
| | | கி.பி. 6 | ரோமர்கள், சிசெராவை யூதேயாவிற்கு தலை நகராக்கியது. |
| கி.பி. 30 | இயேசுவை கொலை செய்தது | கி.பி. 26 | யூதாவின் ஆட்சியாளராக பிலாத்து. |
| கி.பி. 35 | பவுலின் மனமாற்றம் | | |
| கி.பி. 37 | பவுலின் முதல் மிஷனெரிப் பயணம். | கி.பி. 45 | பருவக்காற்றுகளின் உதவியால் கடற்பயணம் செய்து 40 நாட்களில் கிரேக்க மாலுமிகள் ஆப்பரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு சென்றனர். |
| | | கி.பி. 47 | அலக்சாந்திரியாவின், உலகத்திலேயே பெரிய நூலகம் எரிந்து சாம்பலாகியது. |
| கி.பி. 50 | பவுலடியார் தனது முதல் கடிதமான, I தெசலோனிக்கேயரை எழுதினார். | கி.பி. 50 | பிரெஞ்சு நாட்டவரால் ரோமர்கள் சோப் உபயோகிப்பதை கற்றுக் கொண்டனர். |
| | | கி.பி. 52 | பரி. தோமா தென் இந்தியா வந்து சுவிசேஷம் அறிவித்தல் |
| கி.பி. 64 | பவுலடியாரும், பேதுருவும் ரோமர்களால் கொல்லப்பட்டனர். | கி.பி.64 | ரோம் நகரம் எரிந்தது. நீரோ மன்னன் கிறிஸ்தவர்களை குற்றம் சாட்டினான். |

| | | | |
|---|---|---|---|
| கி.பி. 66 | ரோமர்களுக்கெதிரான யூதர்களின் புரட்சி. | | |
| கி.பி. 70 | ரோமர்கள் எருசலேமை உடைத்து நாசம் செய்தார்கள். | கி.பி. 68 | நீரோ மன்னன் தற்கொலை செய்தான். |
| | | கி.பி. 72 | பரி. தோமா சென்னையில் கொல்லப்படுதல். |
| | | கி.பி. 80 | ரோமர்களின் கொலிசியம் (Coloseum) எனும் அரங்கில் நூறு நாட்கள் நடைபெற்ற கேளிக்கைகளில் ஆயிரக்கணக்கான மக்களும் மிருகங்களும் கொல்லப்பட்டன. |
| கி.பி. 95 | பரி. யோவான், வெளிப்படுத்தின விசேஷம் எழுதினார் | கி.பி. 105 | சீனர்கள், மரப்பட்டை, துணிகள் ஆகியவற்றிலிருந்து பேப்பர் தயாரித்தனர். |

# 24. வேதாகம காலத்தைய அளவுகள்

## 1. நீட்டலளவை

| பழைய ஏற்பாடு | தற்கால அளவை | தமிழ் இணை |
|---|---|---|
| அம்மா (cubit) | 45.8 செ.மீ. | முழம் |
| | 52.5 செ.மீ. | (அரசர் காலம்) |
| செரத்து (span) | 22.9 செமீ. | சாண் |
| | 26.9 செ.மீ. | (அரசர் காலம்) |
| தோப்பகு (hand breadth) | 6.7 செ.மீ. | நான்கு விரல்கடை |
| | 8.7 செ.மீ. | (அரசர் காலம்) |
| எஸ்பா (finger) | 1.9 செ.மீ. | விரல்கடை |
| | 2.2 செ.மீ. | (அரசர் காலம்) |
| செயாது (pace) | 9.2 செ.மீ. | அடி |
| கப்ரகேல் (foot's length) | 30.8 செ.மீ. | ஓரடி |
| யோம் தெரெக்கு (a day's journey) | 40 கி.மீ. | ஒரு நாள் தொலை |

**புதிய ஏற்பாடு**

| | | |
|---|---|---|
| பேக்சு (அம்மா) Cubit | 45.8 செ.மீ. | முழம் |
| மைல் (Mile) | 1.5 கி.மீ. | கல் |
| ஸ்தாதியம் (Stadion) | 185 - 200 மீ | கூப்பிடு தொலை |
| ஒர்கியா (fathom) | 185 - 200 செ.மீ. | ஆள் உயரம் |
| கோடோசுபத்து (Sabbath day's journey) | 1 கி.மீ. | ஓய்வு நாளில் செல்லக்கூடிய தொலை |

## 2. முகத்தலளவை

### திடப் பொருள்

| பழைய ஏற்பாடு | தற்கால அளவை | தமிழ் இணை |
|---|---|---|
| ஓமர் (omer) | 4 - 4.5 லிட்டர் | 2 படி |
| ஏப்பா (ephah) | 40 - 45 லிட்டர் | 20 - 22 படி |
| கோமர் (Homer - 10 ஏப்பா) | 400 - 450 லிட்டர் | 200 - 220 படி |
| லெத்தேக்கு (Lethec - 5 ஏப்பா) | 200 - 225 லிட்டர் | 100 - 111 படி |
| செயா (seah) | 12 - 13 லிட்டர் | 6 படி (1 மரக்கால்) |
| இசரோன் (Issaron - 1 ஓமர்) | 4 - 4.5 லிட்டர் | 2 படி |
| லாகு (log) | 0.50 லிட்டர் | 0.25 படி |
| காபு (gab - 4 லாகு) | 2.2 லிட்டர் | 1 - 1.25 படி |
| கீன் (hin) | 6 - 6.5 லிட்டர் | 3 - 3.25 படி |
| பாத்து (bath) | 40 லிட்டர் | 1 கலம் |
| கோர் (kor) | 400 லிட்டர் | 10 கலம் (1 மூடை) |

### புதிய ஏற்பாடு

| | | |
|---|---|---|
| கோரோசு (kor) கோர் | 400 லிட்டர் | 1 மூடை (10 கலம்) |
| சற்றான் (Seah) செயா | 12 லிட்டர் | 1 மரக்கால் |
| கொயினிச்சு (Quarts) | 1 லிட்டர் | 0.50 படி |
| மோடியசு (Modios) | 8 லிட்டர் | 1 மரக்கால் |
| செல்டேசு (Pot) | 0.50 லிட்டர் | பரணி |
| மெத்ரேதேசு (1 ஏப்பா) | 40 லிட்டர் | 1 குடம் |

### திரவப் பொருள்

### பழைய ஏற்பாடு

| | | |
|---|---|---|
| கோர் (kor) | 400 லிட்டர் | 10 குடம் |
| பாத்து (bath) | 40 லிட்டர் | 1 குடம் |
| கீன் (hin) | 6 - 6.50 லிட்டர் | 1 கலயம் |
| காபு (gabh) | 2.2 லிட்டர் | 1 கிண்ணம் |
| லாகு (log) | 1 லிட்டர் | 1 ஆழாக்கு |

### புதிய ஏற்பாடு

| | | |
|---|---|---|
| பத்தாசு (bath) | 40 லிட்டர் | 1 குடம் |
| மெத்ரேதேசு (measure) (1 ஏப்பா) | 40 லிட்டர் | 1 குடம் |

## 3. நிறுத்தலளவை

| பழைய ஏற்பாடு | தற்கால அளவை | தமிழ் இணை |
|---|---|---|
| செக்கேல் (shekel) | 11.50 கிராம் (வெள்ளி) | |
| கிக்காா் (talent) | 3600 செக்கேல் (10 - 14 கிராம்) | |
| மினா (mina) | 60 செக்கேல் (685 கிராம்) | |
| பீம் (pim) | 2/3 செக்கேல் (8 கிராம்) | |
| பெக்கா (beka) | 0.50 செக்கேல் (6 கிராம்) | |
| கேரா (gerah) | 0.25 செக்கேல் (60 மி. கிராம்) | |
| கெசித்தா (piece of money) | 4 செக்கேல் (46 கிராம்) | |

**புதிய ஏற்பாடு**

| | | |
|---|---|---|
| தாலந்து (talen) கிக்கார் | 40 - 41 கிலோ | பெருங்கல் |
| வித்ரா (pound) | 320 - 325 கிராம் | |
| மினா (mina) | 685 கிராம் | |

## 4. நாணயம் / பணம்

| பழைய ஏற்பாடு | தற்கால அளவை | தமிழ் இணை |
|---|---|---|
| கிக்கார் (talent) | செக்கேல் (22 வெள்ளி) | வெள்ளிக் காசு |
| மினா (mina) | 60 (அ) 50 செக்கேல் வெள்ளி | |
| திராக்மா (drachma) | 1/4 வெள்ளி செக்கேல் | ஒரு நாள் கூலி<br>8 கிராம் / பொற்காசு |

**புதிய ஏற்பாடு**

| | | |
|---|---|---|
| தெனாரியம் (denarion) | | ஒரு நாள் கூலி<br>(ரோம்) வெள்ளி |
| திராக்மா (drachma) | | ஒரு நாள் கூலி<br>(கிரேக்கம்) வெள்ளி |
| அசாரியன் (Assarion) | 1/16 தெனாரியம் | செப்புக்காசு |
| கொதிராந்து (quadrans) | 1/64 தெனாரியம் | செப்புக்காசு |
| லெப்டான் (lepton) | 1/128 தெனாரியம் | செப்புக்காசு |
| ஸ்தாத்தேர் (Stater) 1 செக்கேல் | 4 தெனாரியம் | வெள்ளிக்காசு |
| மினா (Mina) | 100 தெனாரியம் | பொன் நாணயம் |
| தாலந்து (talent) (வெள்ளி) | 6000 தெனாரியம் | |
| தாலந்து (talent) (பொன்) | 6000 x 3 தெனாரியம் | |

# 25. திருமறை நாட்களில் பயன்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவுகள்

| திருமறை அளவு | ஏறக்குறைய நிகரான பிரிட்டிஷ் அளவு நிறுத்தலளவை | ஏறக்குறைய நிகரான மெட்ரிக் அளவு |
|---|---|---|
| தாலந்து (60 மேனா) | 75 பவுண்டு | 34 கிலோகிராம் |
| மேனா (50 சேக்கல்) | 1 1/4 பவுண்டு | 0.6 கிலோகிராம் |
| சேக்கல் (2 பேக்கா) | 2/5 அவுன்ஸ் (0.4) | 11.5 கிராம் |
| பிம் (2/3 சேக்கல்) | 1/3 அவுன்ஸ் (0.33 அவு.) | 9.5 கிராம் |
| பேக்கா (10 கேரா) | 1/5 அவுன்ஸ் (0.20 அவு.) | 5.75 கிராம் |
| கேரா | 1/50 அவுன்ஸ் (0.02 அவு.) | 0.6 கிராம் |

## நீட்டலளவை

| | | |
|---|---|---|
| முழம் | 18 அங்குலம் | 0.45 மீட்டர் |
| சாண் | 9 அங்குலம் | 23 செ.மீ. |
| உள்ளங்கை (4 விரற்கடை) | 3 அங்குலம் | 8 செ.மீ. |
| விரற்கடை | 3/4 அங்குலம் | 19 மிமீ. |

## கொள்ளளவு (திடப்பொருள்)

| | | |
|---|---|---|
| கோர் (ஹோமர் - கலம்) (10 எப்பா) | 6 மரக்கால் | 220 லிட்டர் |
| லெதெக் (5 எப்பா) | 3 மரக்கால் | 110 லிட்டர் |
| எப்பா (10 ஓமர்) | 3/5 மரக்கால் | 22 லிட்டர் |
| சீயா (படி) (1/3 எப்பா) | 7 குவார்ட் | 7.3 லிட்டர் |
| ஓமர் (கலத்தில் 1/10) (1/10 எப்பா) | 2 குவார்ட் | 2 லிட்டர் |
| காப் (1/18 எப்பா) | 1 குவார்ட் | 1 லிட்டர் |

## கொள்ளளவு (திரவப்பொருள்)

| | | | |
|---|---|---|---|
| பாத் (குடம்) | (6 ஹின்)<br>(1 எப்பா)<br>(3 குஆபுஅ) | 6 காலன் | 27 லிட்டர் |
| ஹின் (படி) | (1/6 பாத்) | 4 குவார்ட் (காலன்) | 4.50 லிட்டர் |
| லாக் (ஆழாக்கு) | (1/72 பாத்) | 1/3 குவார்ட் | 0.375 லிட்டர் |
| ஓமர் | 10 பாத் | 60 காலன் | 270 லிட்டர் |

(பண்டைய உலகில் காலம் மற்றும் இடத்திற்கேற்ப எடைகளும், அளவுகளும் மாறுபட்டன.)

# 26. வேதாகம நாட்களில் வாழ்ந்த எபிரெயர்களின் (யூதர்களின்) கலாச்சாரமும், பழக்கவழக்கங்களும்

## தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட தேவ ஜனங்களாகிய எபிரெயர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்று பார்ப்போமா?

ஆதி மனிதன் புரிந்த பாவம் மூலம், அவன் தேவனிடமிருந்து பிரிந்து போய் விட்டாலும், அவனைத் திரும்பவும் தன்னுடன் சேர்த்துக்கொள்ள தேவன் எடுத்த முயற்சிகளை நாம் வேதாகமம் முழுவதிலும் காண்கிறோம். அவனுக்கு கிடைக்கவேண்டிய **'இரட்சிப்பு',** (பாவத்தினின்று விடுதலை) அவரது ஜனமாகிய **யூதர்கள்** (எபியெர்கள்) மூலமாக வரவேண்டும் என்பதே அவரது சித்தமாயிருந்தது. அவர், தமது ஜனம் தம்மை முழுமனதுடன் பின்பற்றி ஆராதனை செய்யவேண்டும் என்று எதிர்பார்த்தார். ஆகவே, பலிகள் செலுத்தியும், பண்டிகைகளை ஆசரித்தும் அவரைத் தொழுவதைவிட நொறுங் குண்டதும், நறுங்குண்டதுமான இருதயத்துடன் அவரிடம் கிட்டிச்சேர்ந்து அவரை ஆராதிப்பதையே அவர் மனிதனிடம் எதிர்பார்த்தார். தமது மனதுக்குப் பிரியமான **ஆபிரகாமை** அவர் ஆசீர்வதித்து, அவனது சந்ததியைப் பலுகிப் பெருகப் பண்ணினார். ஆனாலும் அவர்கள் மீண்டும் தேவனிடமிருந்து விலகிச்சென்றுவிட்டனர். அந்நிய ஜாதிகளான **அசீரியர்கள், எகிப்தியர்** ஆகியோரின் புதுமையான வழிமுறைகளும், மதசம்பந்தமான சடங்குகளும், விக்கிர ஆராதனையும் இவர்களிடையே புகுந்துவிட்டது.

மோசேயால் வழிநடத்தப்பட்டு எகிப்திலிருந்து கானானிற்குள் மீண்டும் அவர்கள் வந்து சேர்ந்தபோது, கானானியரை இஸ்ரவேலர் முற்றிலுமாக அழித்துவிடவில்லை. **'பாகால்'** என்கிற அவர்களது கடவுள் நாட்டிற்கு செழிப்பைத் தருவதாகவும், **'மோளேக்கு'** போன்ற அநேகக் கடவுள்களைப் பிரீதிப்படுத்தி 'சுகமாய் வாழ', அவர்கள் சிசுபலி, வேசித்தனம் முதலிய அருவருப்பான செயல்களைச் செய்வதையும் அவர்கள் கவனித்து வந்தார்கள். இப்பழக்கங்கள் இவர்களை ஈர்த்ததால், அவைகளால் இழுப்புண்டுபோய் தேவனுக்கு எதிராக, அவர் வெறுக்கும் இவ்வகையான பாவச்செயல்களில் அவர்கள் ஈடுபட்டார்கள். **சாலொமோனின்** காலத்தில், இவ்வகை பழக்கங்கள் ராஜாக்களையும் தொற்றிக்கொண்டன. இவ்வாறு தேவனால் கைவிடப்பட்ட ஜனமாக அவர்கள் மாறியபோது, அந்நிய தேசங்களுக்கு கைதிகளாக இழுத்துச் செல்லப்பட்டனர்.



எகிப்திய கடவுளாகிய வண்டு வடிவத் தாயத்து



பருந்து தலையுடைய இரா என்னும் எகிப்திய சூரிய தெய்வம்.



தமஸ்குவிலும் பெனிக்கேயாவிலும் கண்டுபிடிக்கப்பட்ட பாகாலின் உருவச் சிலைகள்



ஆசரிப்புக்கூடாரமும், பலிபீடமும்.



பிரதான ஆசாரியர்



இயேசுவின் காலத்தில் இருந்த ஏரோது கட்டிய தேவாலயம்

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையடைந்து, வனாந்திரம் வழியாக கானானை நோக்கி பயணப்பட்டுக் கொண்டிருந்த காலத்தில் இஸ்ரவேலர், தேவகட்டளைப்படி உருவாக்கப்பட்ட **ஆசரிப்புக் கூடாரத்தில்** தேவனைத் தொழுதுகொண்டார்கள். அது அவர்களுக்கு ஒரு 'நடமாடும் தேவாலயமாக' இருந்தது. பின்பு ராஜாவாகிய சாலொமோன், எருசலேமில் கி.மு. 950-ல் கர்த்தருக்கு ஒரு **தேவாலயத்தைக்** கட்டினான். இது கி.மு. 586-ல் **பாபிலோனியர்களால்** இடிக்கப்பட்டது. இஸ்ரவேலர் பாபிலோனிலிருந்து தாய்நாட்டிற்கு திரும்பியபோது இவ்வாலயம் மீண்டும் கட்டப்பட்டு, 500 வருடங்கள் வரைக்கும் ஓரளவு பாதுகாக்கப்பட்டது. கி.மு. 20-ல் **ஏரோது** மீண்டும் அதை மிகப் பிரம்மாண்டமாக புதிப்பித்துக் கட்டினான். கி.பி. 70-ல் மீண்டும் அது ரோமர்களால் இடிக்கப்பட்டது.

எருசலேம் தேவாலயத்தைத் தவிர **ஜெப ஆலயங்களிலும்** அவர்கள் தேவனைத் தொழுது வந்தார்கள். (இவை, பாபிலோனின் சிறையிருப்பின் காலத்தில் கட்டப்பட்டிருக்கலாம்.) வேதம் வாசித்தலும், அதைத் தொடர்ந்து சிறிய ஒரு பிரசங்கமும், ஜெபமும் அங்கு ஏறெடுக்கப்படும் ஆராதனையின் முக்கிய அம்சங்களாகும்.



ஜெப ஆலயம்



ஜெப ஆலயத்தின் உட்புறம்



ஜெப ஆலயத்தில் ஆராதனை வேளை

**கல்வி கற்க,** சிறுவர்கள் அங்கு செல்வது வழக்கம். எருசலேமை நோக்கி இருக்கும் படியாக இந்த ஜெப ஆலயங்கள் வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்டிருந்தன.

வேதத்தில் **பழைய** ஏற்பாட்டின் புத்தகங்கள் **எபிரெய** பாஷையிலும், **புதிய** ஏற்பாடு **கிரேக்க** பாஷையிலும் எழுதப்பட்டிருந்தது. (எகிப்திய, பாபிலோனிய, அசீரிய மற்றும்




இயேசுவின் காலத்தில் உபயோகப்படுத்தப்பட்ட வேத சுருள்கள். (வேத புத்தகம்)

*சுருள்கள், தோல் மற்றும் பாப்பைரஸ் நாணல் புற்களால் செய்யப்பட்டன.*

*1. பாப்பைரஸ் நாணல் புல்*

*2. பாப்பைரசை வெட்டுகிறார்கள்*

*3. தண்டைச் சீவி அடுக்கும் விதம்*

*4. சுருள்*

*5. மை, எழுதுகோல்களை வைக்கும் தட்டு*

பெர்சிய வார்த்தைகளும், சொற்றொடர்களும் கூட வேதத்தில் ஆங்காங்கே காணப்படுகின்றன.) **தானியேல், எஸ்றா** ஆகிய புத்தகங்கள் **அரேமிய** பாஷையில் எழுதப்பட்டிருந்தது. அநேக ஊர்களின் பெயர்களும் அந்நிய மொழிகளில் இருந்தன.

**ஆபிரகாம்** வாழ்ந்து வந்த **'ஊர்'** எனும் தேசம் கல்வியறிவில் சிறந்து விளங்கியதுடன், அங்குள்ள **சுமேரியர்கள்** கணக்கு, மொழியியல், பூமி நூல், இயற்பியல், சித்திரம் தீட்டுதல் என அனைத்திலும் சிறந்து விளங்கினார்கள். குடும்பத் தலைவிகள் தங்களது குழந்தைகளுக்கு மதசம்பந்தமான அறிவைக் கல்வியாக புகட்டினர். பின்பு, ஜெப ஆலயங்களில் கல்வி புகட்டப்பட்டது. அவர்களது சரித்திரம் எழுதும் திறமையும், குடும்ப வரலாறுகள் எழுதப்பட்டிருக்கும் விதமும் மிகவும் விந்தையாக உள்ளன.

தங்களுக்கு தேவையான சாமான்களை வாங்கவும், விற்கவும் **பணம்** உபயோகப்படுத்தப்பட்டது. முற்காலத்தில் ஆடுமாடுகள், எண்ணெய், தானியங்கள், திராட்சைரசம்

ஆகியவைகளை பண்டமாற்றுப் பொருட்களாக உபயோகித்தனர். பிறகு தாமிரம், வெள்ளி, பொன் ஆகியவற்றின் **துண்டு**கள் பணமாக உபயோகப்படுத்தப்பட்டன. உலோகத்துண்டுகளை எடைபோட்டு, அதன் கிரயத்தை நிர்ணயித்தனர். பின்பு **காசு**கள் செய்யப்பட்டு அவற்றின்மேல் அவற்றின் எடை பொறிக்கப்பட்டது. உதாரணமாக, **'செக்கேல்'** என்பது, செக்கேல் என்கிற நிறையைக் கொண்ட காசின் பெயராயிற்று. நடமாடும் வங்கிகளாக (mobile banks) செயல்பட்ட **'காசுக்காரர்கள்'** எனும் கூட்டத்தினர் அந்நிய நாட்டுச் செலாவணியை, தேசத்தில் புழங்கும் நாணயங்களாக மாற்றிக்கொடுப்பதுடன், அதற்கு 'பீஸ்' ஆக ஒரு தொகையைப் பெற்றுக் கொண்டனர். எருசலேம் ஆலயத்தின் திருவிழாக்காலங்களில், இவர்களது 'வியாபாரம்' கொடிகட்டிப் பறக்கும்!



யூதர்களின் இந்த நாணயங்களில் எக்காளம், கின்னரம் ஆகிய வாத்தியக் கருவிகளின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

எபிரெயர்கள் எதிரிகளிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்வதற்காக, **கூட்டம் கூட்டமாக** வாழ்ந்து வந்தனர். அவர்களுடைய பட்டணங்களைச் சுற்றி பெரிய மதிற் சுவர்கள் காணப்பட்டன. ஆகவே, தங்களுக்கு பாதுகாப்பு தேவைப்பட்டபோது, கிராமங்களில் வாழ்பவர்கள் அங்கு வந்து, பாதுகாப்புடன் தங்கினார்கள். பட்டணங்களில் வாழ்ந்தவர்களோ, பயிரிடும் காலங்களில் கிராமங்களுக்குச் சென்றனர்.



கோட்டைகளாலும், உறுதியான வாசல்களாலும் பட்டணங்கள் எதிரிகளிடமிருந்து பாதுகாக்கப்பட்டன.



எரிகோவின் மதிற் சுவர்கள் இவ்விதம் இருந்திருக்கலாம்.

இஸ்ரவேலரை வழிநடத்திய **தலைவர்கள், நியாயாதிபதிகள்** மற்றும் **தீர்க்கதரிசிகளின்** நாட்களுக்குப் பிறகு **இராஜாக்களின்** தலைமையிலும், அதன்பின் **ஆசாரியர்களின்** தலைமையிலும் அரசாங்கம் நடைபெற்றது. **தாவீது, சாலொமோன்** ஆகிய அரசர்களின் காலங்கள் இஸ்ரவேல் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுள்ளன. அந்நாட்களில் அரசர்களின் முடிசூட்டு விழா மிகவும் ஆடம்பரமாக நடத்தப்பட்டன. அதிகாரிகளும், ஊழியர்களும் அடங்கிய ஒரு கூட்டம் மக்கள் அரசரவையை அலங்கரித்தனர். **யூத சட்டங்கள்** எழுத்தில் எழுதிவைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டவையும், அவைகள் அவர்களது அயல்நாட்டு சட்டங்களை விட மேன்மையானவைகளும், வித்தியாசமானவைகளுமாக இருந்தன. ரோமப் பேரரசின் கீழ் வாழ்ந்தபோது இவற்றில் சில மாற்றங்கள் நடைபெற்றன. ரோமப்படை வீரர்கள் கூட எபிரெயர் மீது அதிகாரம் செலுத்தினார்கள். ஆனால் ரோமர்களால் கட்டப்பட்ட கட்டிடங்களும், போடப்பட்ட சாலைகளும் மிக நேர்த்தியானவைகளாகத் திகழ்ந்தன என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.



ரோம ஆளுநர்



ரோமர்கள் அமைத்த சாலை



ரோமப் போர் வீரன்

**பரிசேயர், சதுசேயர்கள், ஆலோசனை சங்கத்தினர்** ஆகியோர் அதிகாரமுடைய கூட்டத்தினர்களாகத் திகழ்ந்தனர். மிகவும் செல்வாக்குடைய இந்த பரிசேயர்கள் ஆசாரியர்கள் அல்ல. நியாயப்பிரமாணத்தைக் கற்றுத் தேர்ந்தவர்களான இவர்கள், அதனைக் கைக்கொள்ளுவதில் மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களாகக் காணப்பட்டனர். (பரிசேயனாக இருந்த பரி. பவுல், இயேசுவால் தொடப்பட்டபோது நியாயப்பிரமாணம் முழுவதும் 'அன்பு'

என்கிற ஒரே சொல்லில் அடங்கியிருப்பதை உணர்ந்தான்.) மோசேயின் நியாயப்பிரமாணத்தை மட்டுமே பின்பற்றும் இவர்கள், பழைய பிரமாணங்களைக் காலத்திற்கேற்றபடி மாறுதல் செய்து போதித்து வந்தனர்.

**'ஆலோசனை சங்கத்தினர்'** என்பவர்கள் யூதர்களின் சிறையிருப்புக்குப் பின்னர் மிகவும் அதிகாரமுடைய கூட்டத்தினராகத் திகழ்ந்தனர். ஆசாரியர்கள், நியாய சாஸ்திரிகள், சதுசேயர், பரிசேயர் ஆகியோர் உட்பட **71 பேர்கள்** அடங்கிய இச்சங்கத்தின் தலைவர் **பிரதான ஆசாரியராவார்.** இவர்களுக்கு யூத சட்டங்களை உருவாக்கவும், சட்டத்தை மீறுபவர்களைத் தண்டிக்கவும் உரிமை இருந்தது. (இயேசு, பேதுரு, யோவான், ஸ்தேவான், பவுல் முதலிய அனேகருக்கு இச்சங்கத்தினர் நியாயத்தீர்ப்பு வழங்கினார்கள்.)

**ஏரோதியர்கள்** என்கிற பிரிவினர் ஏதோமியர்களாகவும் (ஏசாவின் சந்ததியினர்), ஏரோதுவை ஆதரிப்பவர்களாகவும் இருந்தனர்.

**சதுசேயர்கள்** ஆசாரிய அந்தஸ்துடையவர்களாக இருந்தனர். இவர்களிலிருந்து பிரதான ஆசாரியனைத் தேர்வு செய்வது வழக்கம். மோசேயின் ஐந்து ஆகமங்களை மட்டும் விசுவாசிக்கும் இவர்களுக்கு தூதர்கள், ஆவிகள், உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் நம்பிக்கை இல்லை.

**பிரதான ஆசாரியர், ஆசாரியர்கள், லேவியர்கள்** என மூன்று விதப் பிரிவினர் தேவ சன்னிதியில் ஆசாரியவேலை செய்யும் மக்களாக இருந்தனர். பிரதான ஆசாரியன், வருடத்தில் ஒரே ஒருமுறை மட்டும் **மகா பரிசுத்த ஸ்தலத்தில்** சென்று, ஜனங்களின் பாவ நிவிர்த்திக்காக வேண்டுதல் செய்வான். ஆசாரியர்கள், பலிசெலுத்துவதிலும், பரிசுத்த ஸ்தலத்தின் ஊழியங்களிலும், வேத போதனைகளிலும் தங்களை ஈடுபடுத்தினார்கள். லேவியர்கள் ஆலயத்தை சுத்திகரிப்பதையும், அப்பம் தயார் பண்ணுவதையும், துதி ஆராதனை செய்வதையும் தங்கள் கடமையாக் கொண்டிருந்தார்கள். லேவியர்கள் தேவனுக்கு சொந்தமானவர்களாக எண்ணப்பட்டனர்.

யூதர்களின் **குடும்பத் தலைவர் தகப்பனாவார்.** அனைவரும் அவரைக் கீழ்ப்படிய வேண்டும். அனேக மனைவிகளையுடைய குடும்பத்தலைவரின் **வாரிசுரிமை,** மூத்த மனைவியின் **மூத்த மகனுக்கே** சேரும். பிள்ளைகள் குடும்பத்தின் மிகப்பெரிய சொத்தாக நினைக்கப்பட்டதால், மணமான பெண் தாய்மையடைந்தால் மட்டுமே அவளுக்கு மனைவி என்கிற அந்தஸ்து கிடைத்தது. ஆண் குழந்தை பிறக்கும்போது, எட்டாவது நாள் அவனுக்கு விருத்தசேதனம் செய்வதுடன், அன்றுதானே அவனது பெயர் சூட்டுவிழாவும் நடைபெறும். 13 வயதிற்குமேல் உள்ள சிறுவர்கள், வயது வந்தவர்களாகக் கருதப்பட்டனர். திருமணங்கள் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டன. (சில திருமணங்கள் மணமுறிவில் முடிவடைவதுமுண்டு.)

அசீரியர் இஸ்ரவேலைக் கைப்பற்றியபோது, அவர்கள் **'சமாரியர்கள்'** என்கிற ஒரு கூட்டத்தினரை அழைத்து வந்து தாங்கள் இஸ்ரவேலில் கைப்பற்றிய இடங்களில் குடி அமர்த்தினார்கள். இவர்கள் தங்களது கடவுளை மட்டுமின்றி இஸ்ரவேலின் தேவனையும் வணங்கி வந்தனர். இவர்களை யூதர்கள் வெறுத்தார்கள்.

யூதர்களில் சிலர் **'நசரேயர்கள்'** என அழைக்கப்பட்டனர். இவர்கள் தேவனுக்கு தங்களை அர்ப்பணம் செய்து கொண்டதற்கு அடையாளமாக தங்களது முடியை சிரைக்காமலும், மது போன்ற போதையூட்டும் பானங்களை அருந்தாமலும் வாழ்ந்தனர். தங்களது வாழ்நாள் முழுவதும் இப்படியாக நசரேய விரதம் எடுக்கும் வழக்கம், பின்பு மாறிவிட்டது. குறிப்பிட்ட சில காலம் மட்டும் நசரேய விரதம் எடுப்பதும், அதன் முடிவில் தங்களது முடியை சிரைத்து பலிபீடத்தில் எரிப்பதும் நசரேயர்களின் வழக்கமாக மாறிற்று.

**மரணவீட்டில்,** துக்கம் கொண்டாடி அழுது **புலம்பும் கூட்டம்** ஒன்று இருக்கும். அப்போது தங்களது அங்கிகளைக் கிழித்து, சாம்பலில் உட்காருவதும், இரட்டுடுப்பதும், ஒப்பாரி வைப்பதும், புலம்பல் பாடல்கள் இயற்றிப்பாடுவதும் அவர்களது வழக்கம் ஆகும். மரித்துப்போனவரின் சடலத்தை மெல்லிய துணியில் சுற்றி, இயற்கையாகவோ செயற்கையாகவோ உருவான கல்லறையில் (கெபி) வைப்பார்கள். சில நாட்கள் சென்றபின்பு அதன் எலும்புகளை எடுத்து ஒரு ஜாடியில் போட்டு, அதை அந்த குகையின் ஒரு மூலையில் வைத்துவிட்டு, வேறு ஒரு சடலத்தை அந்த இடத்தில் வைப்பார்கள். (குகைகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால் இப்படி ஒரு ஏற்பாடு!)




செல்வந்தர்களுக்காக தயார் செய்யப்பட்ட குகைக் கல்லறைகள்.



இயேசுவின் காலத்தில் உள்ள குகைக் கல்லறை

கானானில் குடிபுகுமுன் வனாந்தரத்தில் 40 வருடங்கள் அலைந்து திரிந்த இஸ்ரவேலர், கானானில் குடியேறியபின்பு **விவசாயத்** தொழிலில் ஈடுபட்டனர். கோதுமை, வாற்கோதுமை, பலவித தானியங்கள் ஆகியவை அங்கு பயிர் செய்யப்பட்டன. வாற்கோதுமை, கோதுமையை விட விலை குறைவானதும், விரைவில் விளைந்து அறுவடைக்கு தயாராகும் தானியமுமாகும். மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் உணவாக இருக்கும் இது, ஏழைகளின் முக்கிய உணவாகும். தங்களது **முதல் பலனை** தேவ சன்னிதியில் படைப்பதற்கு ஆரம்பமாக, வாற்கோதுமையின் அரிக்கட்டுகளை **தேவனுக்கு படைப்பது வழக்கம்.**



போரடித்தல்



பயிர்த் தொழிலுக்கு பயன்படும் கருவிகள்.



ஏர் நுகம்



காற்றில் தூவுவது மூலம் தானியங்கள் வேறுபடுத்தப்படுகின்றன.

வயல்களில் விளைந்த தானியங்களின் கதிர்களைக் கொய்து, போரடித்து, தானியத்தை அவர்கள் அதிலிருந்து பிரித்தெடுப்பார்கள். பின்பு அந்த தானியத்தைக் காற்றில் தூவி, பதரை அதிலிருந்து வேறுபடுத்துவார்கள். துளைகளுள்ள சல்லடைகளின் வழியே அந்த தானியத்தை விழச்செய்து, அவற்றை சுத்தப்படுத்தி, காயவைத்து, மண்பாண்டங்களில் அதை சேமித்து வைப்பார்கள்.



இஸ்ரவேல் நாட்டில்
காணப்படும் பழமையான
கிணறுகளில் ஒன்று.



நீர் இறைக்கும் விவசாயி



கழுதை பூட்டி ஏர் உழுவது



தானியங்களை
சலித்து
சுத்தப்படுத்துதல்.



தானிய மணிகளைக்
காற்றில் தூவி
பதரிலிருந்து
வேறுபடுத்துதல்.



மாடுகள் பூட்டி போரடிப்பது



அத்தி இலையும் பழமும்

**திராட்சைப்** பழங்களை உண்ணுவதும், அதன் இரசத்தை அருந்துவதும் அவர்களுக்கு மிகவும் பிடிக்கும். ஆகவே, திராட்சத்தோட்டங்கள் மிகக் கவனமாக பராமரிக்கப்பட்டு வந்தன. திராட்சைப் பழத்தைப் பிழிந்து, அதிலிருந்து இரசம் எடுக்கும் ஆலைகளும், தொட்டிகளும் இருந்ததுமட்டுமின்றி, திராட்சத்தோட்டங்களில் கோபுரங்களும் இருந்தன. திராட்சைப் பழங்களிலிருந்து பிழிந்தெடுக்கப்பட்ட இரசத்தை **ஜாடி**களிலும், **துருத்தி**களிலும் சேமித்து வைத்தார்கள்.



திராட்சைரசம் பிழியும் ஆலையில் பழங்களை மிதித்து நசுக்குதல்



நதி நீரில், தோலினாலான திராட்சரச துருத்தியை சுத்தம் செய்யும் ஓர் எகிப்தியப் பெண்.



மண் ஜாடிகளில் தானியங்கள் சேமிக்கப்படுகிறது.



திராட்சை ரசம் பாதுகாக்கப்படும் ஜாடி.



ஒலிவ எண்ணெய் பிழிந்தெடுத்தல்



ஒலிவ எண்ணெய் பிழிந்தெடுத்தல்

**ஒலிவமரத்**தில் விளையும் காய்களிலிருந்து, ஒலிவ எண்ணெய் எடுக்கப்படுகிறது.



ஒலிவ எண்ணெய் எடுக்க பயன்படுத்தப்படும் கருவி.





மரம்போல் வளரும் பலஸ்தீனா நாட்டுக் கடுகுச் செடி. பறவைகள் இதில் கூடுகட்டி வாழ முடியும். இதன் இலை, விதை, நெற்று ஆகியவற்றின் அளவைப் படத்தில் பாருங்கள்.

**அத்திமரம், காட்டத்தி** மரம் ஆகியவற்றின் பழங்களும் அவர்களது உணவில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**அப்பம், பால்கட்டி, பழங்கள், காய்கறிகள்** ஆகியவை அடங்கிய உணவுடன் **இறைச்சி, மீன்** ஆகியவற்றையும் அவர்கள் உண்டு வந்தனர். உணவை ருசியாக்க, அவர்கள் தேன் மற்றும் **உப்பு** ஆகியவற்றை உபயோகித்தனர். இறைச்சிக்காக ஒரு மிருகத்தைக் கொன்ற

பின்பு, அதன் இரத்தம் முழுவதையும் கீழே வடியவிட்டபின்பே அதன் மாம்சத்தை உண்ணவேண்டும் என்பது தேவனின் கட்டளையாக இருந்தது.

உணவிற்காக **வேட்டையாடுவதும்**, **மீன்பிடிப்பதும்** அவர்கள் வழக்கமாயிருந்தது. வலை மற்றும் ஈட்டிபோன்ற கம்புகளால் மீன்பிடிப்பது அவர்களது வழக்கம்.




கலிலேயாவின் மீன்பிடி துறைகள்.



ஆழமற்ற நீர்நிலைகளில் வலையெறிந்து மீன்பிடிக்கும் மீனவன்.



இரு படகுகளின் உதவியுடன் மீனவர்கள் மீன்பிடிக்கிறார்கள்.

ஆட்டு மயிர், தோல், இறைச்சி ஆகியவற்றிற்காக அவர்கள் **ஆடு**களை வளர்த்தனர். (இயேசுவின் பிறந்த நாளை மேய்ப்பர்கள் அல்லவா கொண்டாடி மகிழ்ந்தார்கள்!)





ஆட்டிடையனைப் பின்தொடரும் வெள்ளாடுகளும், செம்மறியாடுகளும்.



ஆயரின் கோல்
(ஆடுகளை நடத்திச்செல்ல)



தடி
(பாதுகாக்க)



கவண்
(துஷ்டமிருகங்களை விரட்ட)

அப்பம் சுடுவதற்கான தானியங்கள் எந்திரக்கல்லால் அரைக்கப்பட்டன. சமையல் செய்யவும், உணவு அருந்தவும், உணவை சேமிப்பதற்கும் மிக அழகான பாத்திரங்கள் உபயோகப்படுத்தப்பட்டன. அடுப்பு எரிக்க விறகு உபயோகப்படுத்தப்பட்டது.

மத்திய தரை நாடுகளில் **'விருந்தோம்பலை'** ஒரு புண்ணியகாரியம் செய்வதாகவே நினைத்துச் செயல்பட்டனர். இஸ்ரவேலரின் விருந்தோம்பும் பண்பு நம்மை வியக்கவைக்கும். வழிப்போக்கர்களை அவர்கள் மிகவும் உபசரித்தனர். (ஆபிரகாம் இப்படி

உபசரித்ததன் மூலம், தேவதூதர்களை உபசரிக்கும் பாக்கியம் அவனுக்குக் கிடைத்தது.) ஒருவரையொருவர் வாழ்த்தி வரவேற்று, பயணிகளுக்குத் தங்கும் வசதிகளையும் கூட அவர்கள் மகிழ்ச்சியுடன் செய்தனர். (எதிர்பாராத விதமாக இரவில் வந்த விருந்தாளிக்கும்





மாவரைக்கும் பெண்கள்




அப்பம் சுட பயன்படுத்தப்படும் மண் அடுப்பு



உணவு உண்ணவும், உணவைச் சேமித்து வைக்கவும் பயன்படுத்தப்படும் பாத்திரங்கள்.



விருந்தோம்பி மகிழும் குடும்பத்தலைவி



கோலாகலமாக நடைபெறும் திருமண விருந்து.



தனது கால்களால் சக்கரத்தைச் சுழலவிட்டு, மண்பாண்டம் செய்யும் குயவன்

கூட உணவளிக்கும் அவர்களது பண்பை நாம் வேதத்தில் காண்கிறோம்.) அது மட்டுமின்றி, வேதத்தில் அநேக விருந்துகள் நடைபெற்ற நிகழ்ச்சிகளையும் காண்கிறோம். (தங்களது பயண நாட்களில், இயேசு நாதரும், அவரது சீடர்களும் கூட விருந்தோம்பும் குடும்பங்களைச் சார்ந்திருந்தார்கள் அல்லவா).

**மண்பாண்டம் செய்வது** அவர்களது முக்கிய தொழில்களில் ஒன்றாகும். **தச்சுத் தொழிலிலும்** அவர்கள் கைதேர்ந்து விளங்கினர். (இயேசுவும் தச்சுத்தொழில் செய்தார் அல்லவா.) **பொன், வெள்ளி, செம்பு** முதலிய **உலோகங்களால்** கலைத்திறன்மிக்க வேலைகளைச் செய்வதும், **தோலினால்** கூடாரம், செருப்பு ஆகியவை செய்தலும், ஆட்டு



துணி நெய்வதற்காக கம்பளிநூல் நூற்கும் பெண்



துணிநெய்யும் பெண்

மயிரினாலும், பஞ்சு நூலாலும் கண்கவர் **உடைகளைச் செய்தலும்** அவர்களது தொழிலாக இருந்தது. கட்டிடம் கட்டுவதில் **கல்தச்சர்கள்** அதிகபங்கு வகித்தனர். எருசலேம் ஆலயம் சாலோமோன் அரசனால் மிகுந்த கலை நுணுக்கத்துடன் கட்டப்பட்டதை அறிவோம்.



தோலினால் செருப்பு தைக்கும் தொழிலாளி



தந்தையும் மகனும் இணைந்து தச்சுத்தொழில் புரிகிறார்கள். (இயேசுவும் தனது வாலிபநாட்களில் இப்படித்தானே உழைத்திருப்பார்.)



எருசலேமின் கல்தச்சர்கள்

சாலொமோன் காலத்து வணிகம்



வேதத்தில், **ஆயக்காரர்** மற்றும் **வணிகர்களைக்** குறித்தும் கூட கூறப்பட்டுள்ளன. வரி வசூல் செய்யும் ஆயக்காரர்கள் மக்களிடமிருந்து அநியாயமாக பணத்தை பறித்து வந்ததால் மக்கள் அவர்களை வெறுத்தார்கள்.


யூத செல்வந்தர்களின் ஆடையணிகலன்கள்.

அங்கிகளைப் போன்ற **நீண்ட உடைகள்** அணிவது மூலம் மக்கள் தங்களைப் பாலைவனத்தின் உஷ்ணத்திலிருந்தும், குளிர்காலக் குளிரில் இருந்தும் பாதுகாத்துக் கொண்டனர்.

பெண்களின் அங்கி நீளமாகவும், ஆண்களின் அங்கி சற்று நீளம் குறைந்தவையுமாக இருந்தன. ஆண்களின் உடையைப் பெண்களும், பெண்களின் உடையை ஆண்களும் அணிவதை வேதம் அனுமதிக்கவில்லை. செல்வந்தர்கள் மற்றும் ஏழைகளின் உடைகளில் வித்தியாசம் இருந்தது. உடைகளின் ஓரத்தில் தொங்கல்கள் இருந்தன. அத்தொங்கல்கள், அவர்கள் தேவ கற்பனைகளைக் கைக்கொள்ள அவர்களை ஞாபகமூட்டியது. (இயேசுவின் அங்கியின் தொங்கலைத் தொட்டு சுகம்பெற்ற பெண் மற்றும் சவுலின் அங்கியின் தொங்கலை தாவீது


நீளமான, தொங்கல்களுடன் கூடிய, அங்கியணிந்த ஒரு சாதாரண மனிதனும், ஒரு விவசாயியும் (பின்னால் நிற்பவர்கள்), ஒரு செல்வந்தனுடன்.



காப்பு நாடா





முக்காடணிந்த இரு பெண்கள் (சாதாரண மற்றும் பணக்காரப் பெண்கள்.)

அறுத்தது ஆகியவை உங்களுக்கு நினைவு வருகிறதா?)

முற்காலத்தில் மனிதர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள **கெபி**களிலும், **குகை**களிலும் மறைந்து வாழ்ந்து வந்தனர். (**லோத்து, தாவீது** ஆகியோர் வாழ்ந்து வந்ததும் **இயேசுவின் பிறப்பு** நடைபெற்றதும் குகையில்தான்). ஆபிரகாமின் காலத்தில் மக்கள் பாலைவனங்களில் **கூடாரங்களில்** வாழ்ந்தார்கள். பிற்காலத்தில் அவர்கள் **வீடு**களைக் கட்டி, அவற்றில் வாழ்ந்தார்கள். செல்வந்தர்களின் வீடுகள் மிகப்பெரியதாக இருந்தன. செல்வந்தர்களின் வீடுகளில் குளியல் அறை காணப்பட்டன. வீட்டிற்குத் தேவையான நீரைப் பெண்கள் கிணறுகளிலிருந்து மொண்டு எடுத்து வந்தார்கள். குளிப்பதற்காக அவர்கள் நதி, குளம் மற்றும் நீர் ஊற்றுகளாகிய நீர்நிலைகளுக்குச் சென்றனர்.



கர்மேல் பர்வதத்தில் கண்டுபிடிக்கப்பட்ட, கற்காலத்தில் மனிதர்கள் வாழ்ந்திருந்த, குகை (மிகப் பழமையான காலங்களிலிருந்தே மனிதர்கள் இங்கு வாழ்ந்திருந்தார்கள் என்பதற்கான அத்தாட்சி.)



சாதாரண மக்கள் வாழும் வீடு



எளிய யூத இல்லத்தின் உட்புறம்



சாதாரண மக்கள் வாழும் வீட்டின் முற்றமும், மேல் தளத்திற்கு ஏறிச்செல்லும் படிகளும். (தேவைப்படும்போது மேல் தளத்தில் மேலும் ஒரு அறை கட்டுவது உண்டு.)



யூத வீட்டின் மேலறை



பலஸ்தீனா நாட்டிலுள்ள ஒரு வீட்டின் உட்புறம்.



செல்வந்தர்கள் வாழும் வீடு

தேவ கற்பனைகளைக் கைக்கொண்டு வாழ்ந்த காலங்களில் அவர்கள் நோய் நொடியின்றி வாழ்ந்தார்கள். அவர்கள் தங்களுக்கு சுகவீனம் ஏற்பட்டபோது அதை தேவகோபம் என்று எண்ணினார்கள். வேதத்தில் 'காயம் கட்டுதல்' மற்றும் 'வேதனையகற்றும் மருந்துகள்' (கீலேயாத்தின் பிசின் தைலம் முதலியவை) ஆகியவற்றைக் குறித்தும், வைத்தியர்களைக் குறித்தும் கூறப்பட்டுள்ளது. ('பிணியாளிக்குத் தான் வைத்தியன் தேவை' என்று இயேசு கூறியது நினைவுக்கு வருகிறதல்லவா.)

**பாபிலோன் சிறையிருப்பின் நாட்களில்** யூதேயாவிலிருந்து சிறைபிடிக்கப்பட்டு பாபிலோனுக்குக் கொண்டு செல்லப்பட்ட எபிரெயர்கள், **'யூதர்கள்'** என அழைக்கப்பட்டனர். பின்பு, (பாபிலோனிய மற்றும் பெர்சிய அரசு எல்லைக்குட்பட்ட,) புற ஜாதியரல்லாத யூதேயாவின் குடிமக்கள் யூதர்கள் என அழைக்கப்பட்டார்கள். அதற்குப்பின், யூதனாகப் பிறவாதிருந்தும் கூட, யூதர்களின் தேவனை ஆராதித்த அனைவரும் யூதர்கள் என அழைக்கப்பட்டனர்.

தேவ கற்பனையின்படி, இஸ்ரவேலர்களால் ஐம்பது வருடங்களுக்கு ஒருமுறை **'யூபிலி வருடம்'** ஆசரிக்கப்பட்டது. இது 'விடுதலையின் வருடமாக'க் கருதப்பட்டு, தங்களது நிலங்களை விற்றவர்கள் அதைத் திரும்பப்பெற்றுக்கொள்ளவும், அடிமைகள் தங்களை விற்றுவிட்ட எஜமானர்களிடம் மீண்டும் போய்ச்சேரவும் கிடைத்த ஓர் வாய்ப்பாக அதை ஆசரித்தார்கள்.



ஒட்டகம் - பாலைவன கப்பல்!



பாரம் சுமக்கும் கழுதை மீது அமர்ந்து சவாரி செல்வது.



தேர்கள், இரதங்கள்

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையானபோது, இஸ்ரவேலர், தரைவழியாகத் தங்கள் பயணத்தை செய்தனர். பின்பு அவர்கள் பிற நாடுகளுடன் **வாணிபத்திற்**காக கடல்வழிப் பயணத்தை மேற்கொண்டனர். (பரி. பவுல் தனது நற்செய்திப் பணியின்போது அநேக கடல்பயணங்களை மேற்கொண்டான்.) தரைவழிப்பயணத்திற்காக **பெர்சிய** மற்றும் **ரோம** அரசர்களால் போடப்பட்ட **சாலைகள்** மிக நேர்த்தியானவைகளாக இருந்தன. தரைவழி பயணத்திற்காக **கழுதை**களும், **ஒட்டகங்**களும் உபயோகப்படுத்தப்பட்டன. செல்வந்தர்களும், இராஜாக்களும் **தேர்கள்** மற்றும் **இரதங்**களில் பயணித்தனர்.



வெண்கல யுகத்தில் (Bronze Age) உபயோகப்படுத்தப்பட்ட ஆயுதங்கள்.



ரோம நூற்றுக்கதிபதியும், (முன்னால் நிற்பவர்) ரோமப் படையாளியும்.

இஸ்ரவேலர், ஆபிரகாமின் காலம் துவக்கியே (லோத்துவின் குடும்பத்தை ஆபிரகாம் மீட்டது), எந்நேரமும் போர் புரிய தயார் நிலையில் இருந்தார்கள் என்று காண்கிறோம். நியாதிபதிகள் மற்றும் அரசர்களின் காலங்களில், போர் புரிய **போர்வீரர்கள்** ஏற்படுத்தப்பட்டிருந்தார்கள். **தங்களது யுத்தத்தை நடத்துபவர் தேவனே** என்பதில் அவர்கள் விசுவாசமாயிருந்தார்கள். ஆகவே, யுத்தத்திற்குப் புறப்படுமுன்பு அவர்கள் தங்களை சுத்திகரித்துக் கொள்வது வழக்கமாயிருந்தது. ரோமப்படை வீரர்கள் உலோகத்தினாலான கவசங்களை அணிந்து போர் புரிந்தனர். இஸ்ரவேல் இராஜாக்களும் **போர் கவசங்கள்** அணிவது வழக்கம்.

**இசைக் கருவிகள்** மீட்டி, பாடல் இசைப்பது யூதர்களுக்கு மிக விருப்பமான பொழுதுபோக்கு மட்டுமின்றி, விழாக்களிலும், திருமண வீடுகளிலும் இசைக்குழுவினர்



வேதாகம காலத்தில்
உபயோகப்படுத்தப்பட்ட
வாத்திய கருவிகள்.
(Musical instruments
of Bible times.
1. Kinnor
2. Menanaim
3. Mezitaim
4. Halil
5. Hazora
6. Shophar)





பாடலிசைத்து விருந்தினரை மகிழ்விப்பது வழக்கம். **கின்னரம், தம்புரு, குழல், யாழ், கைத்தாளம், கொம்பு** என அநேக இசைக்கருவிகளை அவர்கள் மீட்டி மகிழ்ந்தனர். அத்துடன் நடனமாடி மகிழ்வதும் அவர்களது வழக்கமாயிருந்தது. ஆலய வழிபாட்டிலும், பொது வழிபாடு மற்றும் தனிப்பட்ட வழிபாடுகளிலும் (கெத்சமெனே தோட்டத்திற்கு போகுமுன் **இயேசுவும்** சீடர்களும் ஸ்தோத்திரப் பாடலைப் பாடியது) **பாடல்கள் இசைத்து தேவனைத் துதிப்பது** அவர்களது வழக்கம்.



தம்புரு



கொம்பு (எக்காளம்)
இசைக் கருவிகளை இசைக்கும்
கலைஞர்கள்

யூதர்களின் வீடுகளில் சிறிய கதவுகள் மூலம் உள்ளே வரும் வெளிச்சம், மிகக் குறைவாக இருப்பதால் குழந்தைகள் வெளியே ஓடியாடி விளையாடுவதையே விரும்பினார்கள். பெரியவர்கள் மற்றும் வாலிபர்கள் தாயங்கள், பந்து போன்றவற்றை வைத்து பொழுதுபோக்காக விளையாடுவது வழக்கம். பெண் குழந்தைகள் பொம்மைகளை வைத்து விளையாடுவதை விரும்பினார்கள். பூந்தோட்டம் அமைப்பதும், படங்கள் வரைந்து மகிழ்வதும், புத்தகங்கள் படிப்பதும் அவர்களது **பொழுதுபோக்கு** அம்சங்களாக இருந்தன.



வேதபோதனை.

கிரேக்க, ரோம விளையாட்டு வீரர்களைப் போன்று விளையாட்டு அரங்கங்கள் அமைத்து பலவிதமான விளையாட்டுகளில் ஈடுபட அநேக யூதர்கள் விரும்பியபோதும் அவற்றிற்கு கடினமான எதிர்ப்பு இருந்தது.

வாரத்தின் ஏழாவது நாள் **'ஓய்வு நாளாக'** யூதர்களால் ஆசரிக்கப்படுகிறது. ஓய்வு நாளை மீறுபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டார்கள். **அறுப்பின் பண்டிகை, பஸ்கா பண்டிகை, கூடாரப் பண்டிகை, பெந்தேகோஸ்தே பண்டிகை** என்கிற பண்டிகைகளை அவர்கள் எருசலேம் தேவாலயத்திற்குச் சென்று கொண்டாடினார்கள். (சிறுவன் இயேசுவைத்




எபிரேயரின் நாள்காட்டியும், பண்டிகைகளும்.

தொலைத்துவிட்டு அவரது பெற்றோர் அலைந்த அலைச்சல் நினைவு வருகிறதல்லவா.) இப்பண்டிகைகளைத் தவிர **எக்காளங்களின் பண்டிகை, ஒப்புரவாகுதலின் பண்டிகை,** எஸ்தர் ராஜாத்தியின் முயற்சியால் யூதர்கள் மரணத்தினின்று தப்புவிக்கப்பட்ட நாளைக் குறிக்கும் **பூரீம் பண்டிகை, விளக்குகளின் பண்டிகை** (பிரதிஷ்டையின் பண்டிகை – சீரியர்களை விரட்டி விட்டு தேவாலயத்தை சுத்திகரித்ததை நினைவுகூரும் பண்டிகை) என அநேக பண்டிகைகளை அவர்கள் தாங்கள் வசிக்கும் இடங்களில் ஆசரித்தனர்.




எருசலேம் தேவாலயம் இருந்த இடம், தற்போது இஸ்லாமிய தொழுகை ஸ்தலமாக மாறியுள்ளது. (Dome of the Rock)

**தேவனுக்கு பலிசெலுத்தி ஆராதிப்பதை** அவர்கள் தேவகட்டளையாக அனுசரித்தார்கள். லேவியர் கோத்திரம் ஆசாரியர்களாக அபிஷேகிக்கப்பட்ட கோத்திரமாகத் திகழ்ந்தது. லேவியருக்கு அநேக சலுகைகள் அளிக்கப்பட்டிருந்தன.

தேவனுக்கும், மக்களுக்கும் இடையே தொடர்புகொள்ள **ஆசாரியர்களைத்** தவிர **தீர்க்கதரிசிகள்** என அழைக்கப்பட்ட தேவ மனிதர்களும் இருந்தார்கள். இவர்கள் தேவ வார்த்தையை மக்களுக்கும், அரசர்களுக்கும், தலைவர்களுக்கும் எடுத்துக்கூறி அவர்களை வழிநடத்தினார்கள். மக்கள் வழிதவறிப்போகாமல் பாதுகாக்கும் பொறுப்பை இவர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.




சீயோன் மலை மற்றும் ஒலிவமலைகளுக்கிடையில், எருசலேம் தேவாலயம் கட்டப்பட்டிருந்த இடம் தற்போது...

# 27. வேதத்தில் காணப்படும் நாடுகளும், ஊர்களும்

## பாபிலோனியா (Babylon)

தென் மெசப்பெத்தோமியாவில் யூப்பர்ட்டீஸ் (Euphrates), மற்றும் டைக்ரிஸ் (Tigris) ஆறுகளுக்கிடையில் அமைந்திருந்தது **பாபிலோனியப் பேரரசு.** கி.மு. 3000 முதல் 1000 ஆண்டு வரை வளமையும் கலாச்சார செழுமையும் பெற்றிருந்தது. இப்பேரரசின் தலைநகரம் **பாபிலோனியா.** பாபிலோனியாவை கல்தேயர் நாடு என்றும் (எரே. 24:5; எசே. 12:13) தலை நகர் பாபிலோனியாவை **சினெயார்** (சினார்) (ஆதி. 11:2; 14:1, 9) என்றும் விவிலியம் குறிக்கிறது. தொன்மைக் காலத்தில் **'சுமேர்'** என்றும், **'அக்காது'** என்றும் பாபிலோனியப் பேரரசு அழைக்கப்பட்டது. பாபிலோனியா இன்றைய **ஈராக்கின் தென்பகுதி**யாகும். பாபிலோனியாவில் கி.மு. 7000 - 2500 வரை ஐந்து வகையான பண்பாட்டுக் காலகட்டங்கள் நிலவின. கி.மு. 3100 - 2900 வரை **சுமேரியர்** பாபிலோனியாவை ஆட்சி செய்தனர். கி.மு. 2300 - 2230 வரை சுமேரிய அரசை செமித்திய அரசு மரபினர் வென்று **செமித்திய அரசு** மரபை நிலை நாட்டினர். கி.மு. 1940ல் **'எமோரியர்'** பாபிலோனியாவைக் கைப்பற்றினர். கி.மு. 1792 - 1750 வரை ஆட்சி செய்த **அம்முராபியின்** (Hammurabi) ஆட்சி காலத்தில் பாபிலோனிய அரசு வலிமை பெற்றது. **அக்காத்திய மொழி,** அரசு மொழியாயிற்று. பின்னர் பாபிலோனியா அசீரியர்களால் கைப்பற்றப்பட்டது. கி.மு. 587-ல் நெபுகத்னேசர் பாலஸ்தீனத்தை வென்று, கி.மு. 587-ல் எருசலேம் அழிக்கப்பட்டது. **யூதாவில் வசித்து வந்த இஸ்ரவேலர்** பாபிலோனியாவுக்கு நாடுகடத்தப்பட்டனர். (II இரா. 24-25) கி.மு. 520 - 485 **பாரசீக மன்னர்** பாபிலோனியாவைக் கைப்பற்றினார். **மன்னர் இரண்டாம் தரியு** ஆட்சிக்கு வந்தபோது பாபிலோனியாவிற்கு கடத்தப்பட்டிருந்த இஸ்ரவேலரை மீண்டும் தங்கள் தாய்நாடு திரும்ப அனுமதி அளித்தார். கி.மு. 331-ல் **பெரிய அலெக்சாந்தர்** பாபிலோனியாவைக் கைப்பற்றி **கிரேக்க ஆட்சி**யை நிலை நாட்டினார். **பார்த்தியர்களும், செலூக்கியர்களும்** சிலகாலம் ஆண்டபிறகு, கி.பி. 641-ம் ஆண்டிலிருந்து பாபிலோனியா **அரேபியர்** கைவசம் மாறியது.

சுமேரிய, பாபிலோனியப் பண்பாட்டின் வழியாக வரலாற்றுக்குக் கிடைத்த பெருங்கொடை, **எழுத்து முறை**யாகும். இந்த எழுத்துமுறை முதலில் **ஓவிய எழுத்தாகத்** தொடங்கி, **ஆப்பு எழுத்து** முறையாக மலர்ந்தது.

விவிலியம் விவரிக்கும் நிகழ்வுகள் பலவற்றிற்கு நிகரான (பெருவெள்ளம், நோவாவின் கதை (முதலியவை) மூலக்கதைகளை பாபிலோனிய புராணங்கள் தந்துள்ளன. நீதி நெறிமுறை பற்றிய 282 பகுதிகளடங்கிய **ஹமுராபியின் சட்டத்தொகுப்பின்** (Code of Hammurabi) தாக்கத்தை விவிலியத்தின் முதல் ஐந்நூல்களில் (பஞ்சாகமம்) காண முடிகிறது.

இஸ்ரயேல் மக்கள் கடவுளை விட்டு விலகி, சிலை வழிபாட்டைப் பின்பற்றியபோது, அவர்களைத் தண்டிக்க தேவன் பாபிலோனை பயன்படுத்தினார். இஸ்ரவேலரைத் தூய்மைப்படுத்த பாபிலோனிய அடிமைத்தனம் பயன்பட்டது. இறைவன் இஸ்ரவேலரின் எதிரிகளையும் ஒரு கருவியாக பயன்படுத்தி தமது மீட்புத் திட்டத்தை நிறைவேற்றியதில் பாபிலோனுக்கு நிலைத்த இடம் உண்டு.

## எகிப்து (Egypt)

**மூதாதையர்** கால முதல் **மக்கபேயர்** காலம் வரைக்கும் இஸ்ரவேலரின் வரலாற்றிலும், வழிபாட்டு முறையிலும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியது **எகிப்து.** எகிப்து, வடகிழக்கு ஆப்பரிக்காவின் ஒரு பகுதியாகும். சுமார் 10,00,250 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்ட இந்நாட்டின் 96% இயற்கை நிலப்பரப்பு பாலைவனமாகும். **நைல் நதி**யால் 4% நிலம் வளமாக உள்ளது. ஆப்பரிக்க கண்டத்தில் இருந்தாலும், ஐரோப்பியாவையும் ஆசியாவையும் தொட்டுக்கொண்டிருப்பதால் **மூன்று முக்கிய கலாச்சாரங்களிலும்** எகிப்து தொடர்புடையதாக உள்ளது. எகிப்து, தொன்மை வாய்ந்த நாகரிக வரலாற்றைக் கொண்டது. அங்கு சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பே அரசுகள் உருவாகி மக்களை **சிறந்த நிர்வாகத்தில்** வழிநடத்தின. கி.மு. 8-ம் நூற்றாண்டில் உலகின் வல்லரசு நாடான பாபிலோனியாவுக்கு நிகராக எகிப்தும் விளங்கியது. கி.மு. 1786 முதல் 1552 வரை **ஊரியர், செமித்தியர், இந்திய - ஆரியர்** ஆகிய மூன்று இனக்கலப்பில் உருவான **'கிக்சோசர்'** என்ற இனத்தவர் நாட்டை கைப்பற்றி புதிய ஆட்சியை நிறுவினர். இந்த கிக்சோசர்களின் காலத்தில் தான் இஸ்ரவேல் மக்கள் எகிப்தில் குடியேறினார்கள். அவர்கள் அடிப்படையில் **செமித்தியர்** இனத்தவராக இருந்தபடியால் தங்கள் இனத்தவரான இஸ்ரவேல் மக்களுடன் ஒற்றுமையாக இருந்தார்கள். இவர்கள் காலம் வரை (கி.மு. 1580) இஸ்ரவேலர் எகிப்தில் எவ்வித பிரச்சினையும் இன்றி வாழ்ந்தார்கள். **மூன்றாம் தோத்மாசு** (தோத்மோசு) (கி.மு. 1490 - 1430) என்ற மன்னர் (பார்வோன்), கிக்சோசர் ஆட்சியை முறியடித்து **புதிய எகிப்தியப் பேரரசை** நிறுவினார். அந்நாட்டின் பூர்வீகக் குடிகளான இவர்களுக்கு இஸ்ரவேலர் 'வெளிநாட்டவர்' ஆகிவிட்டனர். 'அந்நியராகிய' இஸ்ரவேலரின் மக்கள் தொகை பெருகினால் தங்களுக்கு தொல்லையாகிவிடும் என்று அவர்கள் நினைத்தார்கள். ஆகவே அவர்களை 'அடிமைகளாக' நடத்தி, கட்டிடவேலைக்கு அமர்த்தினார்கள். **இரண்டாம் ராம்சேசு** என்கிற பார்வோனின் காலத்தில் தேவ கட்டளைப்படி மோசேயின் தலைமையில் இஸ்ரவேல் மக்கள் எகிப்திலிருந்து வெளியேறினர். கடவுள் இஸ்ரவேல் மக்களுக்கு தமது திட்டத்தை நிறைவேற்ற எகிப்தையும் அவர் பயன்படுத்திக் கொண்டார். இஸ்ரவேலரின் 'யாவே' கடவுளை அவர்கள் அறியவில்லை என்றாலும், எகிப்தியர் மூலமாக தமது ஆற்றலை அவர் அங்கு வெளிப்படுத்தினார். இஸ்ரவேல் மக்களை எகிப்து கொடுமைப்படுத்தியது.

(ஆனால் தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு அளிக்க விரும்பிய தண்டனைத் தளமாக அது அமைந்தது.) முடிவில் தேவன் தமது ஆற்றலை அங்கு வெளிப்படுத்தி அவர்களுக்கு விடுதலை அளித்தார்.

கி.மு. 700-ல் எத்தியோப்பிய படையெடுப்பில் எகிப்திய அரசு வீழ்ச்சியுற, பின்னர், அசீரிய மன்னர் **இரண்டாம் சார் கோனும்** (கி.மு. 664 - 653), தொடர்ந்து பாபிலோனிய மன்னர் **நெபுக்கத்நேச்சாரும்** (கி.மு. 589 - 570) எகிப்திய அரசைத் தங்களுக்குக் கீழ் கொண்டுவந்தனர். எருசலேம் வீழ்ச்சியுற்றபோது (கி.மு. 587) **எரேமியாவுக்கும்,** அவரது குழுவினருக்கும், எகிப்தில் அப்போது ஆட்சியில் இருந்த **'கோப்ரா'** என்ற பார்வோன் அடைக்கலம் தந்தார். பின்பு கி.மு. 382-ல் **பெரிய அலெக்சாண்டர்** எகிப்தைக் கைப்பற்றினார். அவரது வாரிசான **தியோதோச்சிக்கு**ப் பிறகு **தாலமியர்**களும், **அந்தியோக்கியச் செலூக்கியர்க**ளும் எகிப்தில் ஆட்சி செய்தனர் (கி.மு. 305 - 30). **லாகுஸ்** என்பவரின் மகன், முதலாம் தாலமியின் காலத்தில் வடக்கு எகிப்திலுள்ள **அலெக்சாந்திரியா**வில் ஒரு மாபெரும் நூலகத்தை உருவாக்கினார். [இவரது காலத்தில் **எபிரேய விவிலியமானது (39 நூல்கள்) கிரேக்கத்தில் முதன்முதலில் மொழி பெயர்க்கப்பட்டது** (செப்துவாஜிந்து).] இயற்கையோடு இணைந்த தெய்வங்களை எகிப்தியர் வழிபட்டனர். இறந்த பின்பு மறு வழ்வு உண்டு என நம்பினர்.

## சீனாய் பாலைவனம் (Sinai Desert)

எகிப்து நாட்டிற்குச் சொந்தமான இடம். எகிப்துக்கும் இஸ்ரயேலுக்கும் இடையில் இருப்பது தான் சீனாய் பாலை நிலம். இங்கு சிறு சிறு கற்கள் நிறைந்து காணப்படும். குன்றுகளும், மலைகளும் நிறைந்த இப்பகுதியில் ஆங்காங்கே நீரூற்றுகள் நிறைந்துள்ளன. **'பெடுவின்'** என்று அழைக்கப்படும் ஆடு மேய்ப்பவர்கள் இப்பகுதியில் வாழ்கின்றனர். எகிப்திலிருந்து கானான் நாட்டிற்கு இப்பாலை நிலம் வழியேதான் இஸ்ரவேல் மக்கள் பயணித்தனர்.

## சீனாய் மலை (ஜெபல் முசா)

கடல் மட்டத்திலிருந்து சுமார் 7500 அடி உயரமுள்ளது.

## கத்தரீனா மலை (ஜெபல் கத்தரீனா)

சீனாய் மலைகளிலே மிக உயரமானது. (8700')

# ஒரேப் மலை (ஜெபல் சிர்பால்)

சீனாய் பாலை நிலத்தின் தெற்குப் பகுதியில் உள்ள உயர்ந்த மலை (6800') **(கடவுளின் மலை)**

## கிரேக்கம் (Greece)

கடவுளின் வெளிப்பாட்டை யூத மக்கள் **எபிரேய** மொழியில் எழுதிவைத்தனர். நாளடைவில் இவர்கள் **அசீரியா, பாபிலோனியா, கிரேக்கம்** போன்ற பேரரசுகளின் ஆதிக்கத்துக்கு அடிமையாக்கப்பட்டு வாழ்ந்து வந்தனர். எனவே இவர்களது மொழியிலும், பண்பாட்டிலும் வேற்றுநாட்டவரின் தாக்கம் இருந்தது. **கிரேக்க நாடும், மொழியும் கடவுளின் மீட்புத் திட்டத்தை உலகிற்கு அளிப்பதில் பெரும் பங்கு வகித்தது. மாமன்னர் அலெக்சாண்டர்** (கி.மு. 336) ஆண்ட காலத்தில் கிரேக்க அரசு மிகப்பெரிய பேரசாக **(செலூக்கியப் பேரரசு)** விளங்கியது. கி.மு. 175-164-ல் ஆட்சி செய்த **அந்தியோக்கு எப்பிப்பான் அரசர்** கிரேக்க நாகரிகத்தை யூதர்கள் பின்பற்றவேண்டும் என்று வலியுறுத்தியதால், அவர்களில் பலர் கிரேக்கரின் வழிகளில் நடக்க ஆரம்பித்தனர். அப்போது **மக்கபேயரை** தெரிந்துகொண்டு, யூதர்களுக்கு அதிலிருந்து விடுதலையளிக்க கடவுள் சித்தம் கொண்டார். கிரேக்கர்களின் செல்வாக்கு ஓங்கிய காலத்தில் கிரேக்கம் **ஆட்சி மொழியாகவும், வழிபாட்டு மொழியாகவும்** ஆதிக்கம் பெற்றது. இந்நிலை பிற்காலத்தில் நற்செய்தி பரவ மிகவும் உதவியாக இருந்தது. கிரேக்க ஆட்சியிலும், கலாச்சாரத்திலும் வாழ்ந்த யூதர்களுக்காக விவிலியத்தை எபிரேய மொழியிலிருந்து கிரேக்க மொழியில் மொழிபெயர்ப்பு செய்தார்கள் **(செப்துவாஜிந்து).** புதிய ஏற்பாட்டுநூல்கள் எல்லாம் கிரேக்க மொழியிலேயே எழுதப்பட்டன.

## ரோமப்பேரரசு (Rome)

பாலஸ்தீனாவை கிரேக்க ஆட்சியிலிருந்து மீட்டு கி.மு. முதல் நூற்றாண்டு முதல் தனது ஆட்சிக்குட்படுத்தியது **ரோமப்பேரரசு.** இஸ்ரவேலில் **மீண்டும் மன்னர் ஆட்சி**யை இது ஏற்படுத்தியது. இயேசுகிறிஸ்துவின் காலம் முழுவதும் ரோம ஆட்சியே இருந்தது. **தைபர்** (Tiber) ஆற்றின் கரையில் அமைந்தது தான் **ரோமாபுரி (Rome).** கி.மு. எட்டாம் நூற்றாண்டின் இடைக்காலத்திலிருந்தே ரோமாபுரியில் மக்கள் குடியேறியிருந்ததற்கான சான்றுகள் உள்ளன. வணிக வளர்ச்சியால், **பெனிக்கியர், எத்ரூஸ்கர்,** மற்றும் **கிரேக்கர்களால் உருவாக்கப்பட்ட கிழக்கத்திய கலாச்சாரம்** அங்கு வளர்ச்சியடைந்தது. கி.மு. 509-ல் மன்னராட்சி முடிவுக்கு வந்ததும், ரோம குடியரசின் **பேரவை (Senate) - குடியாட்சி** - ஏற்படுத்தப்பட்டது.

கி.பி. 49-க்கு முன்பே ரோமில் ஒரு கிறிஸ்தவ சமுதாயம் இருந்தது. கி.பி. நான்காம் நூற்றாண்டில் **கான்ஸ்டன்டைன் (Constantine)** மன்னர் காலத்தில் **கிறிஸ்தவம் ரோமின் அதிகாரபூர்வமான அரசாங்க மதமானது.** பின்பு **இத்தாலி முழுவதும் கிறிஸ்தவத்தைத் தழுவியது. நீரோ, தொமீசி**யன் போன்றவர்கள் கிறிஸ்தவர்களை சித்திரவதை செய்து கொன்றொடுக்கினார்கள். ஆனால், எந்தப் பேரரசு கிறிஸ்தவர்களைக் கொன்றொழிக்க மிகுந்த முயற்சி எடுத்ததோ, அதே பேரரசு கிறிஸ்தவ சமயத்தை பெரிய அளவில் வளர உதவியது. **கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை என்பதற்கும், எந்த எதிர்ப்பு சக்தியையும் கடவுள் தமக்கு சாதகமாக மாற்றிக்கொள்வார் என்பதற்கும் இது சான்றாகும்.**

## கானான் (Canaan)

கானான், யோர்தானின் மேற்குப் பகுதியான பாலஸ்தீனத்தையும், சிரியாவின் சில பகுதிகளையும், பெனிக்கியா என்று கிரேக்கர்களால் அழைக்கப்பட்ட கடலோரப் பகுதியையும் இணைத்த பெரிய நாடாக இருந்தது. கானானியரின் மொழி **செமித்திய மொழி.** கானானிய, எமோரிய, அரமேய மொழிகளுக்கிடையே நெருங்கிய தொடர்பு இருந்தது. **கானானியர், ஏத்தியர், கிர்காசியர், எமோரியர், பெரிசியர், இவ்வியர், எபூசியர்** என பல்வேறு மக்களினம் வாழ்ந்த நாடு **கானான் நாடு** என்றழைக்கப்பட்டது. இஸ்ரவேலர், தங்களது கடவுளாகிய 'யாவே'யை வழிபட்டு வந்தாலும், கானானியரின் தெய்வங்களையும் வழிபட்டதால் **'யாவே'** அவர்களை கண்டித்து தண்டனையளித்து வந்தார். கானானியர் வியாபாரிகளாக இருந்தனர். **தீரு. சீதோன், பெல்ருட், பிப்ளோஸ்** ஆகியவை அதன் துறைமுகங்கள் ஆகும். **பெலிஸ்தியர் அங்கே சென்று குடியேறியதால் பாலஸ்தீன் என்றும், அதன்பின் இஸ்ரவேல் மக்கள் இப்பகுதியில் வாழ்ந்ததால் இஸ்ரயேல் என்றும் இப்பகுதி பெயர்பெற்றது.** கடவுள் வாக்குமாறாதவர் என்பதை கானான் நாடு நம்மை அறிவுறுத்துகிறது.

## யூதேயா (Judea)

பெரிய ஏரோதின் காலத்தில் பாலஸ்தீன் நாட்டை வடக்கே கலிலேயா பகுதி என்றும், தெற்கே சமாரியா என்றும் பிரித்தனர். இயேசு வளர்ந்து கலிலேயா பகுதி. அவர் பிறந்து, இறந்தது யூதேயாப் பகுதி. எபிரேயத்தில் **'எகுதா'** என்றும், கிரேக்க மொழியில் **'யூதேயியா'** என்றும் பாலஸ்தீனாவின் இப்பகுதி பழங்காலம் தொட்டே அழைக்கப்பட்டு வந்தது. கி.மு. 587-ல் பாபிலோனிய படையெடுப்பினால் இப்பகுதி மக்கள் **(யூதர்கள்)** பாபிலோனியாவுக்கு நாடுகடத்தப்பட்டனர். ஆனால் கி.மு. 538-ல், பாபிலோனை ஆண்ட **கிரேக்க மன்னர் கோரேசு,** யூதேயாவின் யூதர்களை நாடு திரும்ப அனுமதித்தார்.

கிரேக்கப் பேரரசின் காலத்தில், **'கிரேக்க மயமாக்கப்படுதலை'** எதிர்த்த **மக்கபேயர்** குடும்பத்தினர் கி.மு. 166-ல் கிரேக்க ஆட்சிக்கு எதிராகப் புரட்சி செய்தனர். கி.மு. 63-ல் **ரோமப் பேரரசின்** ஆட்சி இங்கு நிறுவப்பட்டது.

## எபிரோன் (Hebron)

**கிறிஸ்தவர், இஸ்லாமியர், யூதர்** யாவருமே ஒன்றாகச் சேர்ந்து சென்று மரியாதை செலுத்தச் செல்லும் ஒரே நகரம் **எபிரோன்.** மத்திய கிழக்கு நாடுகளில் மிகப்பழமையான நகரம் எபிரோன். கடல்மட்டத்திற்கு மேல் சுமார் 3000' உயரத்தில் உள்ளது இந்நகரம். (**கிரியாத் - அர்பா** என்பது இதன் **எபிரெயப் பெயர்**). இது **மம்ரே** பள்ளத்தாக்கில் அமைந்திருக்கிற செழிப்புமிக்க பகுதியாகும். லோத்தை விட்டு பிரிந்த ஆபிரகாம் எபிரோனில் குடியேரினான். **ஆபிரகாம் தனது மனைவி** இறந்தபோது **மம்ரே** அருகில் **மக்பேலா நிலத்தை** வாங்கி, கல்லறை பூமியாக வைத்தான். **தாவீதின்** முதல் தலைநகர் இதுவே. இன்றைய எபிரோன் பாலஸ்தீன அரேபியர்களின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. எபிரோனுக்கும், எருசலேமுக்குமிடையே சாலொமோன் பெரிய கற்களால் கட்டிய 3 பெரிய குளங்கள் (எபிரோனிலிருந்து வாய்க்கால்கள் வழியாக தண்ணீர் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படுகிறது), தற்போதும் தண்ணீருடன் காட்சியளிக்கின்றன. ஆபிரகாமின் காலத்தில் மம்ரே (Mamre) என்கிற இடத்தில் காணப்பட்ட 4000 ஆண்டுகள் பழக்கமுள்ள Oak tree in Mamre's field, மற்றும் சாராளை அடக்கம் செய்த மக்பேலா குகை (Macpelah Cave) ஆகியவை இங்குள்ளது. (ஆதி. 23:17, 18)

## பெயர்செபா (Beer Sheba)

இஸ்ரேல் நாட்டின் தென்பகுதியில் உள்ள **நெகேபு** (Negev) பாலை நிலத்தில் உள்ள முக்கியமான நகரம் **பெயர் சேபா.** கி.மு. 4000-ம் ஆண்டிற்கு முன்பே இங்கு மக்கள் வாழ்ந்திருந்ததாகக் கூறப்படுகிறது.

## யோப்பா (Jaffa)

எருசலேமிலிருந்து வடமேற்கே சுமார் 50 கி.மீ. தூரத்தில் மத்திய தரை (Mediterranean) கடற்கரையோரத்தில் உள்ள தொன்மைவாய்ந்த நகரம். இந்நகரை ஒட்டித்தான் இன்றைய நவீன நகரமான **தெல் அவி** (Tel-Avi) உருவாகியுள்ளது. யோப்பாவில் **துறைமுகம்** அமைந்திருந்தது. **மகா ஏரோது** பாலஸ்தீன நாட்டின் அரசராக இருந்தபோது

யோப்பா நகரமக்கள் கிளர்ச்சி செய்தார்கள். (கி.மு. 37). இதனால் யோப்பாவுக்கு இணையாக **செசரியா** என்ற துறைமுக நகரை ஏரோது கட்டினான். கி.பி. 68-ல், யூதப் புரட்சி ஏற்பட்டபோது **பேரரசர் வெஸ்பாசியன்** இந்நகரைத் தரைமட்டம் ஆக்கினார். பிறகாலத்தில் இந்தத் துறைமுக நகர் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டது.

## சாரோனின் சமபூமி (Plains of Sharon)

டெல் அவிவ் (Tel Aviv) நிலப்பரப்பையும், அதை ஒட்டியுள்ள வடக்கு, கிழக்கு, தெற்கு பாகங்களையும் உள்ளடக்கிய நிலப்பரப்பு இது. பூக்களும், பழங்களும் திரளாக உற்பத்தி செய்யப்படும் இடம். (உன்னதப்பாட்டு. 2:1).

## செசரியா (Caesarea)

இது ஒரு பழமைவாய்ந்த பட்டணமாகும். ஏரோது ராஜா இப்பட்டணத்தை கட்டி, ரோமர்களின் நல்மதிப்பை பெறுவதற்காக அதற்கு செசரியா (Caesar - இராயன்) என்று பெயர் சூட்டினான். மனிதர்களுக்கும் மிருகங்களுக்குமிடையான ஜீவமரண போராட்டங்கள் நடைபெற்ற பிரம்மாண்டமான ஒரு ரோம அரங்கம் (theatre) இங்கு இப்போதும் காணப்படுகிறது. இந்த நாட்டில்தான் நூற்றுக்கதிபதியாகிய **கொர்நேலியு,** பேதுருவினால் ஞானஸ்நானம் பெற்றான்.

## நாசரேத்து (Nazareth)

இயேசு தனது வாழ்கையின் பெரும் பகுதியைக் கழித்த இடம் (லூ. 4:16). கடல் மட்டத்திலிருந்து சுமார் 1230' உயரமான ஒரு **மலைப்பகுதி.** மத்தியதரைக்கடலிலிருந்து 32 கி.மீ. கிழக்கேயும், கலிலேயா கடலிலிருந்து 24 கி.மீ. தென்மேற்கேயும் உள்ளது இந்த ஊர். இஸ்ரவேல் நாட்டின் மிக முக்கியமான நகரான நாசரேத்தில் இன்று வாழ்பவர்களில் பெரும்பாலானோர் **அரேபிய இன பாலஸ்தீனர்கள்** ஆவார்கள்.

## அயின் கெரிம்

மரியாள் எலிசபெத்தை சந்தித்த ஊர். (யோவான் ஸ்நானன் பிறந்த ஊர்.) எருசலேமின் அருகில் 5 கி.மீ. தொலைவில் உயரமான மலைப்பகுதியில் உள்ள ஊர். தற்போது இந்த சிறு ஊரில் **யூதர்கள்** அதிகமாக வாழ்கின்றனர்.

## பெத்லெகேம் (Bethlehem)

ஆண்டவர் இயேசுகிறிஸ்து உலகில் உதித்த இடம் பெத்லெகேம் (எபிரேய மொழியில் **'அப்ப வீடு';** அரமேய மொழியில் **'மாமிச வீடு'**)

இஸ்ரவேல் நாட்டின் தென் பகுதியான யூதேயாவில் உள்ள ஒரு சிற்றூர். 2800' உயரமுள்ள ஓர் மலையில் இது அமைந்திருக்கிறது. கடல் மட்டத்திலிருந்து சுமார் 3800' உயரத்தில் உள்ளது. பெத்லெகேமிலிருந்து சுமார் 1/2 கி.மீ. தூரத்தில் 'ஆட்டிடையர் வயல்' (Shepherds' field) இருக்கிறது. இங்கு தான் தேவதூதன் இயேசுவின் பிறப்பை இடையர்களுக்கு அறிவித்ததாக (லூ. 2:8-12) நம்பப்படுகிறது.

இந்த வயல் நிலம்தான் ரூத்-போவாஸ் என்பவர்கள் இணைவதற்கு காரணமாக இருந்த இடம் (ரூத். 2:8) என்றும் கூறப்படுகிறது.

## எருசலேம் (Jerusalem)

தற்போதைய எருசலேமுக்கு இரு பாகங்கள் உள்ளன - பழைய எருசலேம், புது எருசலேம். **தாவீதின் நகரம்** என்று அழைக்கப்பட்ட பழைய எருசலேம் 3000 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதாகும். (B.C. 1048 - 2 சாமு. 5:9) குறுகிய பாதைகளும் சந்தடிமிக்க சந்தைகளுமாக காணப்படும் இந்நகரில் மக்கள் நெருக்கம் மிகவும் அதிகமாக இருக்கிறது.

யூத சமுதாயத்திற்கும், கிறிஸ்தவ உலகிற்கும் மையமாக உள்ளது எருசலேம் நகரம். இதை **சீயோன்** என்று யூதரும், **சீயோன் மலை** என்று கிறிஸ்தவர்களும் அழைக்கின்றனர். **சீயோன் கோட்டை** தாவீதின் தலைநகரமாயிருந்தது. கடல் மட்டத்திலிருந்து 2550' உயரமுள்ள மலை மீது இது அமைந்திருக்கிறது. இதன் தெற்கே **கெதரோன்,** மேற்கே **கெகன்னா** பள்ளத்தாக்குகளினால் சூழப்பட்டது. **பாபிலோனியர்களால்** இடிக்கப்பட்டு, மீண்டும் கட்டப்பட்டு, மீண்டும் **கிரேக்கர், சீரியர், ரோமர்** ஆகியோரால் அழிக்கப்பட முயற்சி நடைபெற்றது. **ஏரோதின் காலத்தில் மதில் சுவர்** கட்டப்பட்டது. **ரோமர்களின் காலத்தில் அந்தோனியா கோட்டை, ஏரோதின் அரண்மனை, காய்பாவின் வீடு, பெத்சாயிதா குளம்** போன்றவை கட்டப்பட்டன. கி.பி. 70-ல் யூதப்புரட்சியின்போது ரோமப் படைத்தளபதி **தீத்துஸ்** (Titus) என்பவரால் இந்நகரம் அழிக்கப்பட்டது.

ஆனால் கி.பி. 4-ம் நூற்றாண்டில் **கான்ஸ்டன்டைன்** என்ற ரோமப் பேரரசன் எருசலேமை கிறிஸ்தவ சமயத்தின் மையமாக்கினார். கி.பி. 6-ம் நூற்றாண்டிற்குப் பின் **பாலஸ்தீனர்கள்** இங்கு குடியேறினார்கள் எனவே, **நாளடைவில் எருசலேம் இஸ்லாமியரின் மையமாக அமைந்துவிட்டது.** சாலமோன் கட்டிய ஆலயப்பகுதியில் இஸ்லாமியர் பெரிய மசூதி ஒன்றை கட்டி எழுப்பினார்கள். தற்போது **எட்டு வாயில்கள்** இந்நகரைச்

சுற்றியுள்ளன. **(தமஸ்கு வாயில், ஏரோது வாயில், ஸ்தேவான் வாயில் அல்லது சிங்க வாயில், பொன் வாயில், கழிவுப் பொருள் வாயில், சீயோன் வாயில், யோப்பா வாயில், புதிய வாயில்).**

## ஓமரின் ஆலயம் (Temple of Omar or The Dome of the Rock)

எட்டு சுவர்களால் சூழப்பட்ட (Octogonal shape) ஒரு அழகிய கட்டிடம் இது. இதன் நடுவில், ஆபிரகாம் ஈசாக்கை பலியிடுவதற்காக அவனை படுக்கவைத்த பாறை இருக்கிறது. இதற்கு நேர் மேலாக, மஞ்சள் நிறத்திலுள்ள அலுமினய (aluminium alloy) -த்தால் செய்யப்பட்ட ஒரு குடம் (dome) இருக்கிறது. 50 அடி உயரமான சலவைக்கல் (marble) தூண்கள் இதை தாங்கி நிற்கின்றன. மிகவும் அழகான சித்திர வேலைகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் இதன் சுவர்களில் எந்த ஒரு உருவமும் செதுக்கப் படவில்லை. ஆனால், முஸ்லீம்கள் வசமுள்ள இந்த அழகிய கட்டிடத்தில் தொழுகைகள் நடைபெறுவது இல்லை!

[மோரியா மலையில், ஓமரின் ஆலயத்திற்கு எதிர்புறத்தில் எல் அக்ஸா பள்ளிவாசல் (EL Aqsa Mosque) இருக்கிறது. பெரிய வளைவுகள் (arches), தூண்கள் (pillars), கற்களால் கட்டடப்பட்ட சுவர்கள் என மிகப்பிரம்மாண்டமாக இது நிற்கிறது. இங்கு இஸ்லாமிய தொழுகைகள் நடைபெறுகிறது.]

## தங்கவாசல் (பொன் வாயில்) (Golden gate)

சாலமோன் கட்டிய தேவாலயத்திற்கு (தற்போதைய ஓமரின் ஆலயம்) நேர் எதிராக கிழக்கே காணப்படும் இந்த வாசல் எப்போதும் அடைந்தே கிடக்கிறது. இயேசுகிறிஸ்து கழுதை மீது ஏறி, பவனியாக எருசலேமுக்கு இந்த வாசல் வழியாக வந்ததாகவும், அவர் சிலுவையை சுமந்து இதே வாசல் வழியாக போனதாகவும் வரலாறு கூறுகிறது. அன்று பூட்டப்பட்ட இந்த வாசல் பிறகு திறக்கப்படவே இல்லை.

## புலம்பல் மதில் (Wall of Lamantation or Weeping wall)

எருசலேம் தேவாலயத்தின் மேற்கு பகுதியிலுள்ள, பெரிய கற்களால் மோரியா மலையில் கட்டடப்பட்ட, 80 அடி உயரமுள்ள இந்த சுவரில் யூதர்கள் போய் தங்கள்

தலைகளை முட்டி அழுவது வழக்கம். ஆலயம் மீண்டும் கட்டி எழுப்பப்பட அவர்கள் கண்ணீருடன் ஜெபித்து வருகிறார்கள்.

## பெத் சாய்தா (Bethsaida)

இது ஒரு **அரமேய** வார்த்தை - **(பெத் - வீடு, சாய்தா - மீன் பிடித்தல்)** - மீன் பிடிக்கும் 'வீடு' இது கலீலேயாக கடலின் வடக்குப் புறமாக அமைந்துள்ளது. இவ்வூருக்கு மிக அருகில் **கப்பர் நகூம், கோரோசின்** ஊர்கள் ஆகியவை இருந்தன. கி.பி. 66 - 73-க்கு இடைப்பட்ட காலத்தில் நடந்த யூதப்புரட்சியில் இந்நகரம் தரைமட்டமாக்கப்பட்டது.

## கெதரோன் பள்ளத்தாக்கு (Kedron Valley)

எருசலேமுக்கு கிழக்கே உள்ள இந்த பள்ளத்தாக்கை கடந்து தான் இயேசு தமது மரணத்திற்கு முந்தைய நாள் ஜெபிக்க போனார். (யோ. 18:1).

## ஒலிவ மலை (Mount of Olives)

எருசலேமுக்கு கிழக்கே, ஒலிவமரங்கள் நிறைந்த மலை. தற்போது மரங்கள் குறைந்துவிட்டன. இங்கிருந்து எருசலேம் பட்டணம் மிக அழகாகத் தெரியும். இயேசு, தனது சீடர்கள் புடைசூழ இங்கு அடிக்கடி செல்வது வழக்கம். அங்கு அவர் தமது பிதாவிடம் ஜெபித்துக்கொண்டிருப்பார்.

## கெத்சமனே (Gethsemane)

எருசலேம் நகரை ஒட்டி தெற்கு பகுதியில் **கெதரோன் பள்ளத்தாக்கு** உள்ளது. அந்தப் பள்ளத்தாக்கை கடந்தவுடன் காணப்படுவது **கெத்சமனே தோட்டம்.** (ஒலிவமலைக்கு அடிப்பகுதியில்). கெத்சமனே என்கிற எபிரேயச் சொல்லின் பொருள் **'ஒலிவ எண்ணெய் ஆலை'** என்பதாகும். அங்கே ஒலிவ மரங்கள் அடர்த்தியாக வளர்ந்திருந்தன.

கெதரோன் பள்ளத்தாக்கு எருசலேமின் கிழக்குப் பகுதியில் உள்ளது. அதன் கிழக்கே **ஒலிவமலை** உள்ளது. ஒலிவமலையின் மேற்கு அடிவாரத்தில் இருந்த தோட்டமே **கெத்சமனே தோட்டம்.** இங்கு இயேசு அடிக்கடி ஜெபிக்கச் செல்வது வழக்கம். (லூக். 22:39, 40; யோவா. 18:1). இங்கு Church of All Nations என்கிற தேவாலயம்

கட்டப்பட்டுள்ளது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, இறுதியாக ஜெபித்த பாறை, இந்த ஆலயத்திற்குள் இருக்கிறது. அப்போதுள்ள சில ஒலிவ மரங்களும் கூட இங்கு இப்போதும் இருக்கிறதாம்.

## கல்வாரி (Golgotha - Skull Hill)

கொல்கொதா என்ற எபிரேய வார்த்தைக்கு **'கல்வாரியா'** என்று **இலத்தீன் மொழி**யில் பொருள். **ஆங்கிலத்தில் 'கல்வாரி'** (Calvary) என்று அழைக்கப்படுகிறது. கொல்கொதா என்று அழைக்கப்படும் **'மண்டை ஓட்டு இடம்'** அன்றைய எருசலேம் நகருக்கு வெளியே (வடக்குப்புறம்) இருந்தது. அங்குள்ள பாறைகளின் அமைப்பை உற்றுப் பார்த்தால் மண்டை ஓட்டின் வடிவில் இருப்பதை காணலாம்.

## கல்லறையின் தோட்டம் (Garden Tomb)

பாறையில் வெட்டப்பட்ட கல்லறையில் இயேசுவின் சரீரத்தை வைத்தார்கள் என்று வேதத்தில் கூறப்பட்டுள்ளது. அந்த திறந்த கல்லறை இருக்கும் தோட்டம் இது.

## பரமேறிய குன்று (Mount of Assension)

ஒலிவ மலையின் ஒரு பாகமான இக்குன்றிலிருந்து இயேசு பரமேறினார். இயேசு நின்ற இடத்தில் இருந்த கல்லை உள்ளடக்கி ஒரு ஆலயம் கட்டப்பட்டுள்ளது. அதற்கு ஒரே ஒரு வாசல் மட்டுமே உள்ளது. இயேசு மீண்டும் அங்கு வந்திறங்குவார் என்று எதிர்பார்க்கிறார்கள்.

## மகதலா (Magdala)

கலிலேயாப் பகுதியிலுள்ள **திபேரியாவுக்கு** வடக்கே 5 கி.மீ. தூரத்தில் இருந்தது **மிக்தோல்** (தரிகேக்யா) என்ற நகர். இந்நகர் **கிரேக்க மொழியில் மக்தலா (கோபுரம்)** என்று அழைக்கப்படுகிறது. கலிலேயாக் கடல் ஓரத்தில் உயரமான இடத்தில் இந்த ஊர் இருந்தது. இங்குள்ள ஒரு குன்றின் மீது தான் இயேசுநாதர் மிகப்பிரபலமான தனது மலைப்பிரசங்கத்தை செய்தார். 800 அடி உயரமுள்ள இக்குன்றின் ஒரு பகுதியில் வைத்து அவர் ஐந்தப்பம், இரண்டு மீன்களினால் 5000 பேர்களின் பசியை தணித்தார். இந்த ஊர் **(தாப்கா)** கலிலேயா கடலின் வடக்குக் கரையோரம் இருக்கிறது.

## எம்மாவு (Emmaus)

எம்மாவு என்ற ஊர் எருசலேமுக்கு வடமேற்கில் 11 கி.மீ. தூரத்தில் உள்ளது. இன்று இந்த ஊர் **அம்வாஸ்** என்ற **அராபிய பெயரிட்டு** அழைக்கப்படுகிறது.

## பெத்தானியா (Bethany)

எருசலேமுக்கு 3 கி.மீ. தூரத்தில், எருசலேமிலிருந்து எரிகோவுக்குச் செல்லும் வழியில் இருந்தது. **அனனியாவின் வீடு** என்று பொருள்படும் எபிரெயப் பெயரான **பெத் - அனனியா** என்கிற பெயர், இயேசுவின் காலத்தில் பெத்தானியா என்று அழைக்கப்பட்டது.

## கலிலேயாக் கடல் (Sea of Galilee)

கலிலேயாக் கடல் இயேசுவின் பணிவாழ்வில் மிகமிக முக்கியத்துவம் வாய்ந்தது. எர்மோன் மலையிலுள்ள பனிக்கட்டிகள் உருகியதும், மழை நீரும் சேர்ந்துள்ள இந்தக் கடலின் தண்ணீர் **சுத்தமான குடிநீர்.** ஏராளமான மீன்கள் உள்ள மிகப்பெரிய ஏரியான இதற்கு வடக்கு பகுதியிலுள்ள **கப்பர் நகூமைச்** சார்ந்த மக்கள் அதிகமாக இங்கு மீன் பிடித்தனர். இங்குள்ள ஒரு மீனின் பெயர் St. Peter's Fish என்பதாகும். சுமார் 696' கடல் மட்டத்திற்கு கீழே இருக்கும் இந்த ஏரியானது சுமார் 200' ஆழமான தண்ணீர் கொண்டதாகும். இதன் நீளம் 18 கி.மீ.; அகலம் 12 கி.மீ. (இதற்கு **கப்பர் நகூம் ஏரி, கெனசரேத் ஏரி, கலிலேயாக்கடல், திபேரியாக் கடல்** என்கிற பெயர்கள் உண்டு). இதற்கு கிழக்கே உள்ள யோர்தான் மலைக்கு இடையில் சிறு சிறு கணவாய்கள் வழியாக எப்பொழுதும் காற்று வேகமாக வீசிக் கொண்டிருப்பதால் ஏரியில் அலைகள் அதிகமாக இருக்கும்.

## யோர்தான் நதி (River Jordan)

புண்ணிய பூமியின் உயிர் நாடியான யோர்தான் நதி வடக்கே **எர்மோன் மலை**யிலிருந்து தெற்கு நோக்கி (கீழே) பாய்வதால் இதற்கு யோர்தான் நதி என்று பெயர் வந்தது. (**'ஹ யார்தான்' என்றால் கீழ் நோக்கிப் பாயும் ஆறு** என்று அர்த்தம்.) எர்மோன் மலையிலிருந்து புறப்படும் **மூன்று நீரூற்றுகள்** (நாகார் பன்யாஸ், நாகார் எல்லெடான், நாகார் வராகித்), குலே என்ற இடத்தில் சங்கமமாகி, கலிலேயாக் கடலில் சேர்கின்றன. வேறு பல சிறிய நீரூற்றுகளும் இந்நதியில் சேருகின்றன. இந்நதியானது கடல்

மட்டத்திற்கு 1286' கீழே உள்ள **உப்புக்கடலை (சவக்கடல் Dead Sea)** அடைகிறது. கலிலேயாக்கடல் வரைக்கும் பெரிய நதியாகப் பாய்ந்து வரும் இந்நதியானது, தெற்கு நோக்கி வர வர, சிறு ஆறாக மாறி இருப்பதைப் பார்க்கிறோம்.

## சவக்கடல் (உப்புக் கடல் — Dead Sea, Salt Sea)

இமாலய மலையிலுள்ள எவரெஸ்ட் சிகரம், உலகத்திலேயே உயரமான இடமாக இருப்பது போல, உலகத்திலுள்ள இடங்களில் மிகவும் தாழ்வான பகுதியே சவக்கடலாகும். இது, கடல் மட்டத்திலிருந்து 1300 அடி முதல் 1500 அடிவரை தாழ்வானதும், மிக அதிக அளவில் தாது உப்புக்கள் நிறைந்ததுமாக இருப்பதால் இதற்கு **உப்பு கடல்** என்றும், எந்த வித உயிரினங்களும் இதில் உயிர்வாழமுடியாது என்பதால் **சவக்கடல்** என்றும் அறியப்படுகிறது. இதற்கு பக்கத்தில் நெகெப் பாலை வனமும் (Neger desert), சிறு குன்றுகளும், குகைகளும் காணப்படுகின்றன. இக்கடலில் உப்பு நீரின் அடர்த்தி (density) மிக அதிகமாக இருப்பதால், இதன் மீது மிதந்து கொண்டே படுத்து (float) கிடக்கலாம். இதற்கு மேற்கே என்கேதி (Engedi) என்கிற ஊர் இருக்கிறது. தாவீதும் அவனது ஆட்களும் சவுலுக்கு பயந்து இங்குள்ள குகைகளில் தஞ்சம் புகுந்ததை நாம் வேதத்தில் வாசிக்கிறோம் (I சாமு. 24) சவக்கடலின் மேற்கிலுள்ள **மஸாதா மலையி**ன் மீது ஏரோது ராஜா ஒரு அரண்மனையையும், சுற்றிலும் மிக அரணிப்பான கோட்டையையும் கட்டினான் (இயேசு பிறப்பின் சில ஆண்டுகள் முன்பு). வெகு தூரத்திலுள்ள எபிரோன் மலைகளிலிருந்து வாய்க்கால்கள் வழியாக தண்ணீர் இந்த உயர்ந்த மலைக்கு எடுத்து வரப்பட்டதாம்! இங்கு ஒரு நீச்சல் குளம், மற்றும் குடிநீர் சேகரித்து சேமித்து வைக்கும் பெரிய தொட்டிகள் ஆகியவை இன்றும் காணப்படுகிறது. சவக்கடலின் தெற்கு பகுதியில் **சோதோம் நகர**மும், வடகிழக்கு பகுதியில் **கொமோரா நகரமும்** இருந்ததாகவும், அங்குள்ள மனிதர்களின் பாவ வாழ்க்கையால் அவைகள், வானிலிருந்து விழுந்த தீயாலும் கந்தகத்தாலும் அழிந்தது என்றும் நாம் வேதத்தில் வாசிக்கிறோம். (ஆதி. 18:20, 21, 19:24, 25) அவ்வாறு எரிந்த இடம் பெரிய பள்ளமாக மாறி யோர்தான் நதியின் நீரால் கடலாக மாறியதாக கூறப்படுகிறது. இதன் தென்மேற்கு பாகம் **நெகப் பாலைவனம்** என அழைக்கப்படுகிறது.

## கப்பர் நகூம் (Capernaum)

இது ஒரு மிகப்பழமையான **மீனவப்பகுதி.** கலிலேயாக் கடலின் வடப்பகுதியில் நாசரேத்தூரிலிருந்து 25 கி.மீ. தூரத்தில் உள்ள ஊர். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எச்சரிப்பாக (மத். 11:23, லூா. 10:15ல்) இப்பகுதியைக் குறித்து கூறியிருப்பதிலிருந்து

அது ஒரு செழிப்புமிக்கதும், வணிகத்தில் சிறந்த பட்டணமாகவுமாயிருந்தது என்று தெரிந்துகொள்ளலாம்.

## கானா (Caana)

நாசரேத்துக்கு 8 கி.மீ. வடக்கே உள்ள **மலைப்பகுதி** இது. கலிலேயாக் கடலுக்கு செல்லும் சாலையில் இவ்வூர் அமைந்துள்ளது **(கலிலேயாவின் கானா).** பாலஸ்தீனாவில் இயேசுவின் காலத்தில் கானா என்ற பெயரில் **இரண்டு ஊர்கள்** இருந்தன. (கிர்பெத்கானா, கெஃபார் கானா). நாசரேத்துக்கு மிக அருகிலுள்ள கெஃபார் கானாவில் (Kafer Caana) கானாவில் தான் இயேசு தமது முதல் அற்புதத்தை (யோ. 2:11) நிகழ்த்தியிருக்கவேண்டும். இங்கிருந்து சுமார் 10 கி.மீ. கிழக்காக, கடல் பரப்பிலிருந்து சுமார் 600 அடி தாழ்வாக, கலிலேயா கடலுக்கு சமீபம் இருக்கும் பட்டணம் (கலிலேயா கடலுக்கு மேற்காக) தான் **திபேரியா பட்டணம்.** இதற்கு மேற்காக 500 அடி உயரமுள்ள ஓர் மலை இருக்கிறது. இதன் அடிவாரத்தில் **திபேரியா வெப்ப நீரூற்றுகள்** (Tiberias Hot Springs) என்கிற மருத்துவகுணமுள்ள நீரூற்றுகள் காணப்படுகின்றன.

## சீயோன்மலை (Mount Zion)

எருசலேமில் ஒலிவ மலையிலிருந்து **கெதரோன் பள்ளத்தாக்கைத்** கடந்து சென்றால், எருசலேமின் வடமேற்குப் பகுதியில் **சீயோன் மலை** உள்ளது. எருசலேம் நகரைச் சுற்றியுள்ள மதில் சுவர்களில் பல வாயில்கள் இருந்தன. (சிங்கவாயில் அல்லது ஸ்தேவான் வாயில், ஏரோது வாயில், தமஸ்கு வாயில், புதிய வாயில், பொன் வாயில், கழிவுப்பொருள் வாயில் என்கிற Dung gate, யோப்பா வாயில், சீயோன் வாயில்). சீயோான் மலைப்பகுதியில் உள்ளது சீயோன் வாயில்.

## கர்மேல் மலை (Mount Carmel)

இஸ்ரேல் நாட்டின் வடமேற்குக் கடற்கரைத் துறைமுக நகரமான **ஹைபா**வில் உள்ளது இம்மலை. கடல்மட்டத்திலிருந்து 1650' உயரத்தில் உள்ளது. இது சுமார் 24 கி.மீ. நீளத்திலும் 7 கி.மீ. அகலத்திலும் பரந்து விரிந்துள்ளது. இதன் வடமேற்குப் பகுதி **மத்தியதரைக் கடலைத்** தொடுகிறது. இதன் தென்கிழக்குப் பகுதி **எஸ்தரலோன்** என்ற சமவெளியைத் தொடுகிறது. **கெரம், எல்** என்ற இரு எபிரேய வார்த்தைகளிலிருந்து தான் **கர்மேல்** என்ற பெயர் வந்தது. **(கெரம் - திராட்சைத் தோட்டம்; எல் - கடவுள் - கடவுளின்**

**திராட்சைத் தோட்டம்).** ஹைபா (Haifa) என்கிற துறைமுகப்பட்டணம் இதற்கு வடமேற்கு திசையில் இருக்கிறது. இங்கு எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை (Oil refineries)களும், இரத்தின கற்கள் தயார் செய்யும் பணிகள் செய்யும் தொழிற்சாலை (industry)களும் உண்டு. இதன் சமீபம் ஒரு ஜெர்மானிய காலனி (German Colony) இருப்பது வியப்பாக இருக்கிறது.

## தாபோர் மலை (மறுரூப மலை) (Mount Tabor)

கலிலேயாப் பகுதியில் நாசரேத்துக்கு மிக அருகில் உள்ள உயர்ந்த மலை. இயேசுகிறிஸ்து, பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகிய தமது சீடர்களுக்கு முன்பாக **மறுரூபமான** மலை (மத். 17:1-8) **எஸ்தரோன் சமவெளியின் வடமேற்கில்** சுமார் 1850' உயரத்தில் இருக்கும் மலை. இதன் அடிவாரத்தில் **கஃபர்** என்ற சிற்றூர் உள்ளது.

## நெபோ மலை (Mount Nebo)

நெபோ மலை கி.மு. 14-ம் நூற்றாண்டில் **மோவாப் நாட்டில்** இருந்தது. மோவாப் சமவெளியிலிருந்து எரிகோவுக்குக் கிழக்கே உள்ள நெபோ மலையில் **பிஸ்கா கொடுமுடி** இருக்கிறது. (இங்கிருந்து மோசே கானானைப் பார்த்தான்.) இன்றைய யோர்தான் நாட்டில் **மெடபா** என்ற நகரின் மேற்கே உள்ளது நெபோமலை. இதை **'எல் சியாகா' (இதுவரையில் தான்)** என்று **சீரிய மொழியில்** அழைக்கிறார்கள்.

## எர்மோன் மலை (Mount Hermon)

இஸ்ரேல் நாட்டின் வட எல்லை. உயரமான மரங்கள் (Cypress Trees) இங்கு காணப்படுகின்றன. பலவிதமான பழங்கள் உள்ள மரங்களும், பூக்கள் பூக்கும் செடிகளும் இங்கு நன்றாக வளர்கின்றன. எர்மோன் பள்ளத்தாக்கின் தெற்கில் எஸ்ரேல் பள்ளத்தாக்கு (Jezreel Valley) காணப்படுகிறது; தெற்கே மெகிதோ பள்ளத்தாக்கு (Megiddo Valley) காணப்படுகிறது.

## கெரிசிம் மலை (Mount Gerizim)

கெரிசிம் மலை, **எபால்** மலைக்குத் தெற்கே **சிக்கேம்** அருகில் **நபூலுஸ்** என்ற பகுதியில் உள்ளது. இன்று இம்மலை **ஜெபல் - எத்-தோர் (புனித மலை)** என்று **அராபிய**

மொழியில் அழைக்கப்படுகிறது. இது மத்திய தரைக்கடல் மட்டத்திலிருந்து சுமார் 2900' உயரத்தில் உள்ளது. எருசலேமுக்கும், கலிலேயாவுக்கும் இடையே உள்ள நெடுஞ்சாலை இம்மலையில் உள்ளது.

## எரிகோ (பனைமர நகரம் - Jerico)

யோர்தான் பள்ளத்தாக்கில், கடல் மட்டத்திற்கு கீழே 820' கீழே அமைந்துள்ள இது உலகின் மிகப் பழமையான நகர்களில் ஒன்று. இந்நகர் பல **இயற்கையான நீரூற்றுகளால்** வளமாக்கப்படுகிறது. இது கி.மு. 4000-ஆம் ஆண்டுக்கு முன்பே எழுப்பப்பட்டது. எரிகோவிலிருந்து எருசலேமுக்குச் செல்லும் வழி பாலைநிலமாகும். எரிகோவின் மேற்கு எல்லையில் **குவாரன்தல் (சோதனை மலை)** என்ற மலை இருக்கிறது. (மத். 4:3-10) இங்கிருந்து எருசலேமுக்கு போகும் வழி பாலைவனக் குன்றுகளாக காட்சியளிக்கின்றன (Hills of Samaria). 2 இராஜாக்கள் 2:19-22-ல் கூறப்பட்டுள்ள சம்பவம் (எலிசா நீரூற்றை சுத்தப்படுத்தியது) நடந்த ஊற்று (எலிசாவின் நீரூற்று - Eligah's Fountain) இங்குள்ளது. வற்றாத இந்த ஊற்றிலிருந்து எரிகோவிற்கு. தேவையான தண்ணீர் கிடைக்கிறது.

## சீகார் (Sychar)

எருசலேமிலிருந்து வடக்கு நோக்கி சுமார் 55 கி.மீ. சென்றால் **சீகார்** என்ற ஊர் இருக்கிறது. இது சமாரியாவின் நடுப்பகுதியில் உள்ளது.

## மெகிதோ (Megiddo)

எபிரேய மொழியில் **'ஹார் மெகிதோன்'** என்ற வார்த்தைகள் ஒன்று சேர்தது **அர்மகதோன் (ஹார் - மலை)** என்ற வார்த்தை உருவாகிறது. **(மெகிதோ பகுதியில் உள்ள மலை)** - பாலஸ்தீன நாட்டில், வடமேற்குப் பகுதியில் யெஸ்ரேல் (Jezreel Valley) என்ற பள்ளத்தாக்கு உள்ளது. இது **கர்மேல் மலைத்தொடரில் தொடர்ச்சியாக** உள்ள பகுதியாகும். இன்றைய இஸ்ரேல் நாட்டில் **'டெல் மெகிதோ'** என்று இப்பகுதி அழைக்கப்படுகிறது.

## தீரு (Tyre)

அன்றைய பொனீசிய (Phoenicia) நாட்டில் **சூர்** என்று அழைக்கப்பட்ட நகரத்தின் அருகில் **தீரு என்ற தீபகற்பம்** இருந்தது. இன்றைய லெபனான் நாட்டின் தலைநகரான

பெய்ரூட் என்ற நகரத்திற்கு 75 கி.மீ. தெற்கே **'சுர்'** என்று அழைக்கப்படும் நகரம்தான் இயேசுவின் காலத்தில் **'தீரு'** என்று அழைக்கப்பட்டது. **இதன் அருகில் சீதோன் நகர்** உள்ளது.

## சீதோன் (Sidon)

பாலஸ்தீன் நாட்டிற்கு வடக்கே, அக்கால **பினீசிய** (Phoenicia) என்கிற இன்றைய **லெபனான் நாட்டில்,** மத்தியதரைக் கடல் ஓரமாக அமைந்துள்ள சிறிய நகர் இது. இன்றைய **பெய்ரூட்** நகரத்திலிருந்து (லெபனான் நாட்டின் தலைநகரம்) 45 கி.மீ. தெற்கிலும், தீரு நகருக்கு 40 கி.மீ. வடக்கிலும் உள்ளது இது. இன்று இந்நகரை **'சைதா'** என்று அழைக்கிறார்கள். இது **ஒரு துறைமுக ஊர்.**

## தர்சு (Tarsus)

ரோம ஆட்சிக்கு உட்பட்ட **சிலிசியா**வில் 'தர்சு நகர்' இருந்தது. சிறிய ஆசியாவுக்கும் (Asia Minor) சிரியா (Cyria)விற்கும் நடுவில் உள்ள நெடுஞ்சாலை பகுதியிலும், தாவுருஸ் (Taurus) மலையடிவாரத்தில் மத்தியதரைக்கடலின் அருகாமையிலும் உள்ள இவ்வூர், இன்றைய **துருக்கி நாட்டின் தென்கிழக்குப் பகுதியில்** இது இருந்தது. பவுலின் காலத்தில் வியாபாரத்தில் பெயர் பெற்ற நகரமாகவும், கிரேக்க கலாச்சாரத்தில் உயர்ந்து நின்ற **ஏதென்ஸ் நகருக்கு நிகராக**வும் தர்சு நகர் இருந்தது. அங்கு **ஒரு பல்கலைக்கழகமும்** செயல்பட்டது.

## அந்தியோக்கியா (Antioch)

ஆதி திருச்சபையின் காலத்தில், கிறிஸ்தவர்கள் துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்டபோது, அவர்கள் **பெனிசியா, சைப்ரஸ், அந்தியோக்கியா** ஆகிய நாடுகள் வரைக்கும் சிதறிப்போனார்கள் என்று காண்கிறோம். அந்தியோகியாவில் திருச்சபை நிறுவப்பட்டது. அங்கு தான் முதன்முதலில் கிறிஸ்துவின் சீடர்கள் **'கிறிஸ்தவர்கள்'** என்று அழைக்கப்பட்டார்கள். இந்நகருக்கு கிழக்கே **ஒராந்துஸ்** என்கிற நதியும், மேற்கே **சில்பியுஸ்** என்ற மலையும் உள்ளது. கி.மு. 43-44ல் **பேரரசர் கிளவுதியு, ஒளிம்பிக் விளையாட்டை** இங்கு நடத்தினார். தொடக்கத் திருச்சபை நாட்களில் பெரும்பாலோர் கிறிஸ்தவர்களாக இருந்தனர். கி.பி. 638-ல் **அரேபியர்கள்** இந்நகரைக் கைப்பற்றி மக்களைக் கட்டாயப்படுத்தி இஸ்லாமியராக மாற்றினார்கள். இன்று இந்த அந்தியோக்கியா (அந்தாக்கியா), **துருக்கி** நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ளது.

## கலாத்தியா (Galatia)

**ரோம மாநில**மான கலாத்தியாவின் தென்பகுதியில் ஓர் கிறிஸ்தவ சமூகம் உருவாகி கி.பி. 48-ல் ஒரு **கிறிஸ்தவ திருச்சபை** அங்கு உருவாயிற்று, பாலஸ்தீனாவுக்கு வடமேற்கே இருந்த சிறிய ஆசியாவின் வடக்குப் பகுதியில் கலாத்தியா மாநிலம் இருந்தது. இது இன்று **துருக்கி நாட்டில்** உள்ளது. பிரான்சு (Gaul), பிரிட்டன் (Britain) போன்ற நாடுகளில் வாழ்ந்த **செலூக்கியர்கள்** (Celts) தான் கலாத்தியர்கள் என்று பிற்காலத்தில் அழைக்கப்பட்டனர், கி.மு. 232-ல் சிறிய ஆசியப் பகுதியை (Asia Minor) மட்டுமல்லாமல் **பெர்காம், இக்கோனியா, கப்பதோச்சியா** போன்ற பகுதிகளும் ரோம ஆட்சிக்குட்பட்டது. ரோம ஆட்சிக்குட்பட்ட பிலாத்தியர்கள் கிரேக்க மொழியைத் தங்கள் சொந்த மொழியாக்கிக்கொண்டனர்.

## எபேசு (Ephesus)

எபேசு, அன்றைய சிறிய ஆசியாவின் (இன்றைய **துருக்கி நாடு**) மிக முக்கியமான நகரமாகும். கி.மு. 1110-ல் ஏதென்ஸ் நகர அரசர் **கோத்ருஸ்** என்பவரின் மகன் **அந்ரோக்குஸ்** என்பவரால் கட்டி எழுப்பப்பட்ட கிரேக்க நகரம் தான் **எபேசு.**

## கொலோசை (Colosse)

துருக்கி நாட்டில் **லீக்குஸ்** என்ற நதி **பிரீஜியா** என்ற பகுதியில் ஓடுகிறது. எபேசு நகருக்கு 150 கி.மீ. கிழக்கே ஓடுகிறது இந்த நதி. இந்த நதியின் தெற்குக் கரையோரத்தில் (எபேசுவுக்கு வடக்கே) **கொலோசே** என்ற பழமை வாய்ந்த நகரம் உள்ளது. **இரண்டாம் அந்தியோக்கிய மன்னரால்** (கி.மு. 246-241) உருவாக்கப்பட்டது இந்நகரம். பவுலின் காலத்தில் **பலவித கலாச்சார, சமய நம்பிக்கை** கொண்டிருந்த மக்கள் இங்கு வாழ்ந்தார்கள். கொலோசே நகரில் கிறிஸ்தவர்களாக மாறிய பலர் யூதர் அல்லாத பிற இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

## கொரிந்து (Corinth)

பவுலின் நற்செய்திப் பணியில் மிக முக்கியத்துவம் வாய்ந்த நகரமான கொரிந்து, மத்திய தரைக்கடலின் மேற்கு கடற்கரையில் அமைந்துள்ளது. ஏதிரியன் கடலையும் இது தொட்டுக் கொண்டிருப்பதால், **இந்நகர் ஐரோப்பிய நாடுகளுக்குக் கிரேக்க நாட்டின் நுழைவாயிலாக உள்ளது.** கி.மு. 600-ல் கட்டி எழுப்பப்பட்ட இந்நகரம், பிற்காலத்தில்

சிறந்த துறைமுகப்பட்டினமாக உருவெடுத்தது. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இங்கு இரண்டு முக்கிய துறைமுகங்கள் (லெக்கேயோன், செனிகிரேயா) செயல்பட்டன. சிறந்த வணிகத்தலமான இதன் மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருந்தது. ஆனால் பவுலின் காலத்தில் இந்நகரம் பாவ நிலையில் வாழ்ந்தது. ஆனால் பவுல் அவர்களது ஒழுக்கக் கேட்டைக்கண்டு அச்சம் கொள்ளாமல் துணிவுடன் கிறிஸ்துவை அங்கு அறிவித்தார். ஒரு **மிகப்பெரிய கிறிஸ்தவ சபை** அங்கு உருவானது.

## பிலிப்பி (Philippi)

பிலிப்பி நகரம் ஐரோப்பாவின் ஒரு பகுதி. ஐரோப்பியாவையும், ஆசியாவையும் இணைக்கும் பாலமாகவும், வியாபாரத்தலமாகவும் இது இருந்தது. இங்கு **மாசிதோனிய கிரேக்கர்களும்,** சில **யூத குடும்பங்களும்** வாழ்ந்து வந்தனர். இங்கு வாழ்ந்தவர்கள் கல்வியிலும், கலாச்சாரத்திலும் வளர்ச்சி பெற்றிருந்தனர். இப்பொழுது இந்நகரம் **மாசிதோனிய நாட்டில்** உள்ளது.

# 28. தேவ மைந்தனாம் இயேசுகிறிஸ்து மானிடர் மத்தியில் வாழ்ந்த அற்புத நாட்கள்...!

தேவனிடமிருந்து பூமிக்கு அனுப்பப்பட்ட **காபிரியேல்** என்னும் தூதன் கி.மு. 6 - கி.மு. 5-ல் பலஸ்தீனா நாட்டில் வாழ்ந்து வந்த மரியாள் எனும் கன்னிகைக்கு ஒரு அற்புதமான செய்தியைக் கொண்டு வந்தான். 'பரிசுத்தாவியினால் நீ கர்ப்பமடைந்து இயேசு என்கிற மேசியாவைப் பெறப்போகிறாய்' என்பதே அது. காபிரியேல் என்கிற அந்த தூதன் மூலமாய் அதற்கு முன்பே ஆசாரியனாகிய சகரியாவுக்கும் இதேபோன்ற நம்புவதற்கு மிகவும் அரிதான ஒரு செய்தி வந்தது. மிகவும் வயது சென்ற **சகரியா - எலிசபெத்து** தம்பதிக்கு விரைவில் ஒரு ஆண் மகவு பிறக்கப்போகிற பிரமிக்கவைக்கும் செய்திதான் அது! மரியாளும், எலிசபெத்தும் உறவினர்களும் கூட! தேவதூதன் கூறியபடியே எலிசபெத்துக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அவனுக்கு **யோவான்** என்று பேரிட்டார்கள்.

அக்காலத்தில் பலஸ்தீனாவை ஆண்ட ரோமப்பேரரசன் **அகஸ்து இராயன்,** பாலஸ்தீனா நாட்டின் குடிமக்களின் குடிமதிப்பு எடுக்க உத்தரவு பிறப்பித்தான் (லூ. 2:1-3). ஆகவே அனைவரும் தங்கள் தங்கள் பிறந்த ஊர்களுக்குச் சென்று தங்களது பெயர்களைப் பதிவு செய்ய வேண்டியதாயிற்று. மரியாளின் கணவனாகிய **யோசேப்பு,** பெத்லெகேம் ஊரானாயிருந்தான். ஆகவே, இயேசுவைத் தனது வயிற்றில் சுமந்து கொண்டிருந்த நிறைமாத கர்ப்பிணியான மரியாளுடன் அவன் தனது ஊராகிய பெத்லெகேமுக்கு புறப்பட்டுச் சென்றான். (லூ. 2:4, 5). அங்கு இயேசு பிறந்தார்.

பலஸ்தீனாவின் கிழக்கிலுள்ள தேசத்தில் வாழ்ந்து வந்த சில **வானசாஸ்திரிகள்,** வானில் தோன்றிய அற்புதமான ஒரு நட்சத்திரத்தின் மூலம், யூதருக்கு ராஜா (இயேசு) பிறந்திருப்பதை கணித்தார்கள் (மத். 2:1, 2). அவர்கள் புதிதாகப் பிறந்த இளவரசனுக்கு மரியாதை செலுத்த எருசலேமுக்கு புறப்பட்டு வந்தார்கள். அச்செய்தியை அறிந்த **ஏரோது** எனும் அரசன் (யூதருக்கு ராஜாவாக ரோம அரசால் நியமிக்கப்பட்டவன்) மிகவும் கலங்கினான். குழந்தை இயேசுவைக் கொல்ல திட்டம் தீட்டிய அவனது திட்டம், நிறைவேறாமல் போய் விடவே, **இயேசு என்கிற மேசியா** பிறக்கும் இடத்தை யூத அறிஞர்களிடம் திட்டமாக விசாரித்து தெரிந்துகொண்டான். இவ்வாறு பெத்லெகேமில் மேசியா பிறக்கப்போகிறதை திருமறையிலிருந்து தெரிந்துகொண்ட அவன், (மத். 2:4-6) பெத்லெகேமிலுள்ள பிஞ்சு குழந்தைகளை ஈவிரக்கமின்றி கொலை செய்ய ஆணையிட்டான் (மத். 2:16-18).

குழந்தைக்கு ஆபத்து வரப்போகிறதை தேவதூதனால் யோசேப்பு எச்சரிக்கப்பட்டவுடன், அவன் மரியாளையும், இயேசுவையும் **எகிப்துக்கு** அழைத்துச்

# பாலஸ்தீன நாடு (புதிய ஏற்பாட்டு காலம்)



# எருசலேம் நகரம் (புதிய ஏற்பாட்டு காலம்)



# இயேசுவின், குழந்தைப் பருவ பயணங்கள்



# கலிலேயாக்கடலும், அதைச்சுற்றி இயேசு ஊழியம் புரிந்த ஊர்களும்



கலிலேயாக் கடலில் மீன்பிடிக்கும் மீனவர்கள்



# கலிலேயாக்கடல் பகுதியில் இயேசுவின் ஊழியம்



# யூதேயாவில் இயேசுவின் ஆரம்ப ஊழியம்



# இயேசுவின் பெரேயா / யூதேயா ஊழியம்



# இயேசுவின் கலிலேய ஊழியம்



# வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இயேசுவின் ஊழியங்களில் சில



சென்று, ஏரோதின் மரணம் வரைக்கும் அங்கு தங்கினான். பின்பு அவர்கள் தங்களுடைய ஊராகிய **நாசரேத்துக்குத்** திரும்பி வந்தார்கள்.

ஏறக்குறைய 30 வயதானபோது, இயேசு தமது பரம தகப்பனின் ஊழியம் செய்ய புறப்பட்டுச்சென்றார். அவ்வேளையில் யோவான் பாலைவனத்தில் தனது ஊழியத்தை ஆரம்பித்திருந்தான். தம்மிடம் வந்தவர்களுக்கு மனம் திரும்பி இரட்சிப்படைய வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்திக் கூறி, அநேகரை அவன் நல்வழிப்படுத்தினான். மனத்திருந்தியவர்களுக்கு அவன் **யோர்தான் நதியில் திருமுழுக்களித்தான்.** (மத். 3:1-12) இயேசுவும் அவனிடம் ஞானஸ்நானம் பெற விரும்பி, ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார். அப்போது, தேவ ஆவியானவர் புறாவைப்போல் அவர் மீது இறங்கினார். அப்போது 'இவன் என் நேச குமாரன்' என்று தேவனால், இயேசுவின் தெய்வீகத்தன்மை பறைசாற்றப்பட்டது. இயேசு தேவனால் வனாந்தரத்திற்கு வழிநடத்தப்பட்டு, அங்கு அவர் 40 நாட்கள் உபவாசத்துடன் தேவனிடம் தனித்து உறவாடிக்கொண்டிருந்தார். அதன் முடிவில், அவரை சோதித்து வெற்றிபெற வந்த சாத்தானை அவர் மேற்கொண்டார். இயேசுவின் ஊழியம் அப்படியாக பூமியில் ஆரம்பமாகியது. அநேகர் அவரைப் பின்பற்றினார்கள். இயேசு அவர்களிடமிருந்து **பேதுரு, யாக்கோபு, யோவான், அந்திரேயா, பிலிப்பு, பர்தலேமியா, ததேயு, மத்தேயு, தோமா, யாக்கோபு, சீமோன், யூதாஸ்காரியோத்து** ஆகிய பன்னிருவரைத் பிரித்தெடுத்து தன்னுடன் மிக நெருக்கமாக வாழ்ந்து ஊழியம் புரிய தேர்ந்தெடுத்தார்.

அநேக ஊர்களுக்கு சுற்றித் திரிந்த இயேசு, பரலோக ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ள மக்களுக்கு அநேக அறிவுரைகளைக் கூறினார். அவரது அருளுரைகள் மக்களுக்கு ஆறுதலையும், தேவனுக்குப் பிரியமாக வாழ்வதற்கு சரியான பாதையையும் காட்டியது. தம்மைச் சூழ்ந்து நின்ற மக்களின் பிணிகளை அவர் சுகமாக்கினார். தீய ஆவிகளால் அலைக்கழிக்கப்பட்டவர்களை விடுதலை பண்ணினார். அந்நாட்களில் **பரிசேயர்களும்,** மற்ற **யூதத் தலைவர்களும்** மக்களைத் தங்களுக்கு சாதகமாகத் திசை திருப்ப போதித்து வந்த உபதேசங்களையும், அவர்களது தவறான வாழ்க்கை முறைகளையும் அவர் சாடினார். ஆகவே அவர் செய்த அற்புதங்கள் அவர்களுக்கு எரிச்சலையும், திகிலையும் விளைவித்தது. மக்கள் தங்கள் பிடியிலிருந்து வழுவிச் சென்று விடுவார்களோ என்று அவர்கள் அஞ்சினார்கள். **பரிசேயர்கள், ஏரோதியர்கள்** முதலிய மதத்தலைவர்கள் அவரை எப்படியாவது கொலை செய்து விடவேண்டும் என்று துடித்தார்கள்.

இயேசுவின் உபதேசங்களாலும், செய்யப்பட்ட அற்புதங்களாலும் அவரது புகழ் **கலிலேயா முதல் தீரு, சீதோன், தெக்கப்போலி, சிசேரா பிலிப்பி** என அநேக நாடுகளுக்கு பரவியது. அந்நாட்களில் இயேசு தமது மிக நெருக்கமான சீடர்களாகிய **பேதுரு, யாக்கோபு** மற்றும் **யோவானு**டன் ஒரு மலைமீது ஏறிப்போனார். அங்கு சற்றும் எதிர்பாராதபடி அவர்

அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார் (மத். 17:1-8). அந்த தெய்வீகக் காட்சியினால் அவர்கள் பிரமித்துப் போய் விட்டார்கள்.

**கலிலேயா**வில் இரண்டு வருடங்கள் ஊழியம் புரிந்த பின்பு அவர் எருசலேமுக்கு அருகிலுள்ள **யூதேயா** மற்றும் **பெரேயாவில்** ஊழியம் மேற்கொண்டார். ஏரோது இயேசுவின் நாடாகிய **கலிலேயாவில்** ஆட்சி புரிந்து கொண்டிருந்தபோது, பிலாத்து, **யூதேயா மற்றும் எருசலேமுக்கு அதிபதியாக** ஆட்சி புரிந்தான். இயேசு, தமது ஊழியத்தின் பெரும்பகுதியை கலிலேயா கடற்கரையைச் சுற்றியுள்ள **கப்பர்நகூம், பெத்சாயிதா** ஆகிய பட்டணங்களில் செய்தார். தமது இவ்வுலக ஊழியம் முடிவடையப் போகிறதை உணர்ந்த இயேசு, **எருசலேமை நோக்கி** கழுதைக்குட்டியின் மேல் அமர்ந்து, அனைவரும் 'ஓசன்னா' என்று முழங்கியவாறே தொடர்ந்து வர, சகரியா தீர்க்கன் முன்னுரைத்தபடியே மேசியாவிற்குரிய ராஜ கெம்பீரத்துடன் வந்தார். **எருசலேம் தேவாலயத்தில்** அவர் நடத்திய **'சுத்திகரிப்பு',** அவரைப் பகைத்தவர்களின் கோபத்தை மீண்டும் கிளறிவிட்டது. அவரைக் கொலைசெய்ய வகைதேடிக் கொண்டிருந்த அவர்களுக்கு எதிர்பாராத விதமாக ஒரு வாய்ப்பு கிடைத்தது; அவரது சீடர்களில் ஒருவனான **யூதாஸ்காரியோத்து** அவரைக் கைது செய்ய உதவுவதாக அவர்களுக்கு வாக்குப்பண்ணினான்.

யூதர்களின் பிரதான பண்டிகையான **பஸ்கா பண்டிகை** (The Passover) நெருங்கியபோது, இயேசு தமது 12 சீடர்களுடன் பஸ்காவை ஆசரித்தார். அதன் பின்பு அவர்கள் அனைவரும் அந்த இரவில் தானே **கெத்சமனே** என்கிற பூங்காவிற்குச் சென்றார்கள். அவரை, பகைவர்களுக்கு காட்டிக் கொடுக்கத்தக்க வேளை கிடைத்ததைக் கண்ட யூதாஸ்காரியோத்து, அவரைக் கைது செய்ய வந்தவர்களுக்கு அவரை அடையாளம் காட்டினான். இரவில் கைது செய்யப்பட்ட அவரை, நியாய விசாரணை என்கிற பெயரில் பிரதான **ஆசாரியரிடமும், பொந்தியு பிலாத்துவிடமும், ஏரோதுவிடவும்** மாறி மாறி இரவு முழுவதும் அலையவைத்து அலைக்கழித்தார்கள். படைவீரர்களும் அவரை அவமானப்படுத்தினார்கள். பொந்தியு பிலாத்து அவரை விசாரணை செய்தபோது, அவர் மரண தண்டனைக்கேதுவான குற்றம் எதுவும் புரியவில்லை எனப் புரிந்து கொண்டான். ஆகவே அவருக்கு சவுக்கடி கொடுத்து விடுதலை செய்ய முற்பட்டான். அதைப் புரிந்துகொண்ட இயேசுவின் பகைவர்கள், இயேசு தம்மை இராயனுக்கு எதிராக ராஜாவாக பறைசாற்றுகிறார் எனக்கூறி, அவரது குற்றத்தை ராஜத்துரோகமாக திசை திருப்பி விட்டார்கள். இதைச் சற்றும் எதிர்பாராத பிலாத்து, தனது பதவியைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, அவர்களது கோரிக்கையை ஏற்று, இயேசுவுக்கு **சிலுவையில் மரணதண்டனை** அளித்தான்.

தேவமைந்தனாம் இயேசு, சிலுவையில் அறையப்பட்டு மரணம் அடைந்தார். அவரை எதிர்த்தவர்கள், தங்களைத் தாங்களே மெச்சிக் கொண்டு ஆறுதல் பெருமூச்சு விட்டார்கள். ஆனால், தேவ குமாரனாகிய இயேசு, தாம் தமது சீடர்களிடம் முன்னுரைத்திருந்தபடியே, **மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.** அதன்பின் **நாற்பது நாட்கள்**

# அந்தோனியா கோட்டை




எருசலேமில் பொந்தியு பிலாத்து தங்கியிருந்த அந்தோனியாக் கோட்டை

எருசலேம் தேவாலயம்



# எருசலேம் தேவாலயமும் அந்தோனியா கோட்டையும்



# துக்க வார நிகழ்ச்சிகளைக் காட்டும் எருசலேம் படம்



# கும்ரான் சுருள்கள் (கும்ரான் பிரதேசம்)



பூமியில் உலாவிய அவர், தமது சீடர்களிடம் தொடர்பு கொண்டு அவர்களுக்கு ஆறுதலளித்து, சில பொறுப்புகளை அவர்களுக்குக் கொடுத்தார். அந்த தெய்வீக மகிழ்ச்சியின் நாட்களின் முடிவில், அவர்களது பார்வைக்கு முன்பாக **பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்.** மீண்டும் அவர் வருவார் என்கிற வாக்குறுதியை நம்பி சீடர்கள் அங்கிருந்து திரும்பிச் சென்றார்கள்.

யூதர்களின் பண்டிகையாகிய **பெந்தேகோஸ்து** தினத்தில் தேவ ஆவி (பரிசுத்த ஆவி) யானவரால் அவரது சீடர்கள் நிரப்பப்பட்டார்கள். அந்த காட்சியை நேரில் பார்த்த ஆயிரக்கணக்கான மக்கள், பேதுருவின் விளக்கமான பிரசங்கத்தால் தொடப்பட்டு இயேசுவை ஏற்றுக்கொண்டனர். எருசலேமில் சீடர்களுக்கு உபத்திரவம் பெருகியபோது, அவர்கள் நானா இடங்களிலும் சிதறிச்சென்று இயேசுவின் நற்செய்தியைப் பரப்பினார்கள். அவ்வூழியம் இன்றையதினம் வரைக்கும் தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

## 29. கும்ரான் சுருள்கள் (Dead Sea Scrolls)

**கும்ரான் பிரதேசம்** (Qumran Region) சவக்கடலின் வடமேற்கு திசையில் உள்ளது. இங்கு, 1947-ம் வருடம், **வேதத்தின் பழைய சுருள்கள்** (Dead Sea Scrolls) கண்டு பிடிக்கப்பட்டது. இங்கு **எஸ்ஸென்கள்** (Essenes) எனப்படும் யூத மத குருக்கள் வாழ்ந்திருக்கக் கூடும் என்று நம்பப்படுகிறது. கி.பி. 66-70 வரைக்கும் உள்ள காலகட்டத்தில் நடைபெற்ற யூதப் போர்களின் போது, யூதர்களை கொடுமைப் படுத்திய ரோமர்களிடமிருந்து வேதத்தின் பகுதிகளைப் பாதுகாப்பதற்காக இந்தச் சுருள்கள் கும்ரான் பகுதியிலுள்ள **குகைகளில்** ஒளித்து வைக்கப்பட்டிருக்க வேண்டும். கும்ரானில் வாழ்ந்த யூதர்கள் கி.மு. 145-ல் **எப்பிஃபேனஸ் IV** அரசனின் காலத்தில் அங்கு சென்று குடியேறியிருக்கலாம் என்று கருதப்படுகிறது. துறவிகளைப் போன்று மிகுந்த கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து வந்த அவர்கள், மேசியாவின் வருகை மிச் சமீபம் என்று நம்பினார்கள். (யோவான் ஸ்நாபகன் இவர்களால் வளர்க்கப்பட்டான் என்று நம்பப்படுகிறது.)

## 30. ஏழு ஆசிய சபைகள்

யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தில், முதலில் நிறுவப்பட்ட ஏழு ஆசிய சபைகளுக்கு இயேசு அளிக்கும் செய்திகளைக் குறித்து வாசிக்கிறோம்.

# 31. ஆதிசபையின் தொடக்கப் பயணங்கள்

எருசலேமில் முதல் முதலாக நிறுவப்பட்ட ஆதிசபையைச் சார்ந்த கிறிஸ்தவத் தலைவர்களின் முதலாவது ஊழியப் பாதைகள் கிறிஸ்தவத் தொண்டர்களின் தூதுரைப் பயணங்களுக்கு (மிஷனெரி பயணங்களுக்கு) அடித்தளமானது.

பரி. பவுல், தமது ஊழியங்கள் மூலம் அநேக நாடுகளை சந்தித்து, அநேக சபைகளை நிறுவும் பாக்கியம் பெற்றார். அவர் தமது இறுதி மூச்சிருக்கும் வரைக்கும் அநேக நாடுகளை சந்தித்து, தேவராஜ்யத்தின் சுவிசேஷத்தை பிரசங்கித்தார். ரோம குடிமகனாகிய அவன், வேதத்தை நன்கு கற்றறிந்தவனும், அநேக பாஷைகள் கற்றிந்த வல்லுநனுமாக இருந்தபடியால், அவனுக்கு தேசங்களின் எல்லைகளைக் கடந்து சென்று சுவிசேஷ விதைகள் மக்கள் மனதில் விதைப்பது எளிதாக இருந்தது. **ரோம குடிமகனா**ன அவனுக்கு, சென்ற இடமெல்லாம் மதிப்பு கிடைத்தது. ஆனாலும் அவன் இயேசுவுக்காக இரத்தசாட்சியாக மரிக்க தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டு, ரோமாபுரிக்குச் செல்ல தீர்மானித்தான். கைதியாக அங்கு கொண்டு செல்லப்பட்டபோதிலும், சில காலம் வரைக்கும் ஓரளவு சுதந்தரமாக வாழ அவனுக்கு அனுமதி அளிக்கபட்டிருந்தது. பின்பு அவனுக்கு என்ன நேர்ந்தது என்பதைக் குறித்த எந்த சாட்சியும் இல்லை. இரத்த சாட்சியாக இயேசுவுக்காக மரிக்கத்துணிந்த அவனது ஆசை நிறைவேறியதா?

# பெந்தெகோஸ்தே நாளில் எருசலேமுக்கு வந்ததாக குறிப்பாகச் சொல்லப்பட்ட நாட்டு மக்கள்



# ஆதி அப்போஸ்தலர்களின் ஊழியப்பயணங்கள்



# பிலிப்புவும், பேதுருவும் செய்த மிஷனெரிப் பயணங்கள்



# பவுலின் முதல் மிஷனெரிப் பயணம்



# புவுலின் இரண்டாவது மிஷனெரிப் பயணம்



# புவுலின் மூன்றாம் மிஷனெரிப் பயணம்



# ஏழு ஆசிய சபைகள்


கருங்கடல்
மக்கெதோனியா
ஈஜியன் கடல்
ஆசியா
எபேசு
அத்தேனே
பத்மு
அந்தியோகியா
தர்சு
ஆசியா
3–பெர்கமு
4–தியத்தீரா
2–சிமிர்னா
5–சர்தை
6–பிலதெல்பியா
1–எபேசு
7–லவோதிக்கேயா
பத்மு தீவு
சீப்புரு தீவு
பெரியகடல்
மத்திய தரைக்கடல்
சீதோன்
செசரியா
எருசலேம்
அலெக்சந்திரியா

# ஆதி சபையின் தொடக்கப் பயணங்கள்



# பவுல் அந்தியோகியாவிலிருந்து எருசலேம் சென்று திரும்புதல்



# பவுலின் மூன்றாம் பயணம் (இறுதிப் பயணம்)



# வெளிப்படுத்தின விசேஷத்திலுள்ள ஏழு திருச்சபைகள்



# 32. இஸ்ரவேல் அரசு - காலங்களின் போக்கினால் ஏற்பட்ட மாற்றங்கள்




கி.மு. 1000




கி.மு. 900




கி.மு. 100




கி.பி. 1923




கி.பி. 1947




கி.பி. 1967

இஸ்ரவேல் நாடு கிட்டத்தட்ட கி.மு. 1000-வது ஆண்டு நிறுவப்பட்டது. கி.மு. 900-வது ஆண்டு அது புகழின் உச்சியில் இருந்ததாக வரலாறு கூறுகிறது.

கி.மு. 900-வது ஆண்டு அந்நாடு இரண்டாகப் பிரிக்கப்பட்டு அந்நாட்டின் வட பகுதி **இஸ்ரவேல்** என்றும் தென் பகுதி **யூதா** என்று அழைக்கப்பட்டன.

கி.மு. 100-ல் பாலஸ்தீனாவில் **ஆஸ்மோனியர்களால்** ஆளப்பட்ட யூதா என்கிற சுதந்திர நாடு இருந்தது.

## பலஸ்தீனா (Palestine)

முதல் உலகப் போரின் (1914 - 1918) பின்பு பலஸ்தீனா நாட்டில் நிகழ்ந்த அரசியல் மாற்றங்கள் காரணமாக **ஓட்டோமன்** அரசின் கீழ் இருந்த பலஸ்தீனா நாடு, 1920-ல் **கிரேட் பிரிட்டனின்** (ப்ரிட்டிஷ் அரசு) ஆட்சியுரிமையில் வந்தது. 1948-ல் இஸ்ரவேல் அரசு நிறுவப்பட்டதிலிருந்து அங்கு அராபியர், யூதர்களிடைய பூசல்கள் அதிகரித்தன.

## பிரிட்டிஷ் அதிகாரத்தின் கீழ் பலஸ்தீனா

பலஸ்தீனா 1923-ம் ஆண்டில் யோர்தான் நதிக்கு கிழக்கேயுள்ள ட்ரான்ஸ் ஜோர்டான் பகுதிகளும் பிரிட்டிஷ் அதிகாரத்தின் கீழ் 1920-1923 வரைக்கும் இருந்தன.

1947-ல், ஐக்கிய நாடுகள் அமைப்பு பலஸ்தீனாவை **அராபிய, யூதப்** பகுதிகளாக பிரித்தது. 1948-ல் யூதா என்கிற நாடு இஸ்ரவேல் எனும் சுதந்திர நாடானது.

## இன்றைய பலஸ்தீனா:

இஸ்ரவேல் நாடு, 1967-ல் இஸ்ரவேலால் பிடிக்கப்பட்ட அராபிய இடங்களான காசா நிலப்பகுதி (Gaza strip) மற்றும் யோர்தானின் கிழக்கு கரை (West Bank) நிலப்பகுதியையும் உள்ளடக்கியதாகும்.

# 33. அரேபிய, இஸ்ரவேலிய வம்ச வரலாறு

நோவா

**காம்**

1. கூஷ் (எத்தியோப்பியர்)
2. மிஸ்ராயீம் (எகிப்தியர்)
3. பூத் (லிபியா)
4. கானான் (ஆசிய, ஆப்பிரிக்க ஜாதியார்)

(ஆதி. 10:6-20)

**சேம்**

1. ஏலாம் (திராவிடரின் மூலக் குழு எனக் கருதப்படுபவர்)
2. ஆசூர்
3. லூத்
4. ஆராம்
5. அர்பக்சாத்

சாலா

ஏபேர்

**யாப்பேத்து**

1. கோமர் (கெல்ட்டுகள்)
2. மாகோகு (இரஷ்யா)
3. மேசேக்கு (ஸ்லாவியர்)
4. மாதாய் (இரேனியர், ஆரியர்)
5. தூபாஸ் (ஸித்தியர்கள், சக வம்சத்தினர்)
6. தீராஸ் (ஜெர்மானியர்)

(ஆதி. 10:2)

**ஏபேர்** → பேலேகு, யொக்தான்

**பேலேகு**

ரெகூ

நாகோர்

தேராகு

ஆபிரகாம், நாகோர், ஆரான்

**யொக்தான்**

1. அல்மோதாத்
2. சாலேப்
3. அசர்மாவேத்
4. யேராக்
5. அதோராம்
6. ஊசால்
7. திக்லா
8. ஓபால்
9. அபிமாவேல்
10. சேபா
11. ஓப்பீர்
12. ஆவிலா
13. யோபாப்

அரபியர் (ஆதி. 10:26-29)

**ஆபிரகாம்**

(ஆகார்மூலம்) இஸ்மவேல் (அரபியர்) (ஆதி. 25:12-15; 21:18; 17:20)

(சாராள் மூலம்) ஈசாக்கு

- ஏசா — அரபியர் (ஆதி. 36)
- யாக்கோபு — யூதர் (இஸ்ரவேலர்) (ஆதி. 29:30)

(கேத்தூராள் மூலம்)

1. சிம்ரான்
2. யக்ஷான்
3. மேதான்
4. மீதியான்
5. இஸ்பாக்
6. சூவாகு

(அரபியர்) (ஆதி. 25:2)

## (மீண்டும் ஒரு சிறிய recap)

தற்போது, இஸ்ரவேல் நாடு, சுற்றியுள்ள அரபு நாடுகளுடன் சமாதான பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருப்பதும், அவ்வப்போது இவர்களிடையே போர் மூளுவதும் நாம் அன்றாடம் கேட்கும் செய்தியாகும். **'அரபியர்', 'பாலஸ்தீனியர்', 'யூதர்கள்'** எனக் கூறிக்கொள்பவர்கள் யார் யார் என்பதை நாம் பார்ப்போம்:

கீழ்கண்ட நாடுகளில் குடியிருக்கும் **முஸ்லிம்கள்** தங்களை **அரபியர்கள்** என்று கூறிக் கொள்கிறார்கள்:

(1) அரேபியா தீபகற்பத்தில், அதாவது, இராக், சீரியா, லீபனோன், யோர்தான், சவுதி அரேபியா, குவைத், கத்தார், ஓமன், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், யேமன், தென் யேமன் (ஏடன்), பஹரீன் ஆகிய நாடுகளில் வாழ்பவர்கள்.

(2) வட ஆப்பிரிக்காவில், அதாவது, எகிப்து, லிபியா, டுனிஷியா, அல்ஜீரியா, மொராக்கோ, மாரிடானியா, சூடான், ஜிபூதி, சோமாலியா, பலஸ்தீனியர் (நாடற்றவர்களாக கருதப்படுபவர்கள்) ஆகிய நாடுகளில் வசிப்பவர்கள்.

ஆப்பரிக்கா கண்டத்து நாடுகளில் வசிப்பவர்களில் பெரும்பாலோர் **நோவா**வின் மூத்த மகன் **காமின் சந்ததியார்.**

அரேபியா தீபகற்பத்திலுள்ள அரபியர்கள், **நோவாவின் இரண்டாவது மகன் சேமின்** வம்சத்தில் வந்தவர்கள். சேமின் கொள்ளுப்பேரன் **ஏபேரின்** வம்சத்திலிருந்து தான் **எபிரேயர்** என்ற பிரிவினர் தோன்றினர். ஏபேருக்கு இரண்டு மகன்கள் - **பேலேகு, யொக்தான்.** (ஆதி. 10:25) யொக்தானின் சந்ததியினர் இராக், லீபனோன், சிரியா, கிழக்கு அரேபிய வளைகுடா நாடுகளில் குடியேறினார்கள். ஏபோரின் மூத்த மகனான பேலேகின் சந்ததியில் வந்தவர் **ஆபிரகாம்.** ஆபிரகாமின் மகன் **ஈசாக்கு.** ஈசாக்கின் மகன்கள் ஏசா, யாக்கோபு. யாக்கோபுக்கு ஆண்டவர் கொடுத்த பெயர் **இஸ்ரவேல்** (ஆதி. 32:28) **யாக்கோபுடைய வம்சாவழியினரே இஸ்ரவேலர்.**

**ஏசா, சேயீர்** மலைப் பிரதேசத்தில் குடியேறினான். (ஆதி. 36:8) இவனது சந்ததியினர் பிற்காலத்தில் **அரபிய முஸ்லிம்களானார்கள்.** அவர்கள் குடியேறிய பிரதேசம் **'ஏதோம் நாடு'** என்று அழைக்கப்பட்டது.

ஆபிரகாமுக்கு எகிப்திய அடிமைப் பெண் மூலமாக **இஸ்மவேல்** பிறந்தான். அவனது சந்ததியும் பிற்காலத்தில் **அரபிய முஸ்லிம்கள்** ஆனார்கள். இவர்கள் **ஆவிலா** துவக்கி **சூர்** மட்டும் (சீனாய் தீபகற்பத்தின் வட பகுதியிலிருந்து அரேபியா நாட்டின் கிழக்கு வரை) பரவியிருந்தார்கள். (ஆதி. 25:18).

ஆபிரகாம், **கேத்தூராள்** என்னும் பெண்ணையும் விவாகம் பண்ணியிருந்தான். இவளது சந்ததிக்கு ஆபிரகாம் நன்கொடைகளைக் கொடுத்து கிழக்கு தேசத்துக்கு

(தற்காலத்து யோர்தான் - அரேபியா தீபகற்பத்தின் ஒரு பாகம்) அனுப்பி விட்டார். (ஆதி. 25:6) இவர்களும் பிற்காலத்தில் **அரபிய முஸ்லிம்கள் ஆனார்கள்.**

ஆபிரகாமுக்கு **வாக்குதத்தத்தின்படி சாராளின் மூலமாய்** பிறந்த **ஈசாக்**கின் மகன் **யாக்கோபுக்கு** (இஸ்ரவேலுக்கு) பிறந்த 12 புத்திரர் 12 கோத்திரங்களானார்கள். இவர்கள் தான் இஸ்ரவேல் (யூத) ஜாதியார். ''என் உடன்படிக்கையை அவனுக்கும் (ஈசாக்கு), அவனுக்கு பின்வரும் அவன் சந்ததிக்கும் நித்திய உடன்படிக்கையாக ஸ்தாபிப்பேன்'' என்று ஆண்டவர் வாக்குப்பண்ணினார். (ஆதி. 17:19) ''நீ பார்க்கிற இந்த பூமி முழுவதையும் உனக்கும் உன் சந்ததிக்கும் என்றென்றைக்கும் இருக்கும்படி கொடுப்பேன்'' (ஆதி. 13:15) என்று ஆபிரகாமுக்கு வாக்களித்தார். பிற்காலத்தில் ஈசாக்குக்கும் (ஆதி. 26:2-5) யாக்கோபுக்கும் (ஆதி. 28:13-15) இதே வாக்குத்தத்தத்தை அவர் உறுதிப்படுத்தினார்.

அரேபிய மக்களின் மொத்த ஜனத்தொகை தோராயமாக 13,50,00,000 அவர்களுடைய நாடுகளின் மொத்த பரப்பளவு தோராயமாக 30,00,000 சதுர மைல்கள். இந்த நாடுகள் அநேகமாகப் பாலைவனம் நிறைந்த பகுதிகளாக இருந்தாலும், உலக நில எண்ணெயில் மூன்றில் இரண்டு பாகம் அரபு நாடுகளில் இருக்கின்றது. ஆகவே, அவை செல்வம் கொழிக்கும் நாடுகளாகவே இருக்கின்றன.

யூத மக்களின் உலக ஜனத்தொகை, தோராயமாக, 1,38,58,000.

யோசுவாவின் காலத்தில் (கி.மு. 1450 ஆண்டு வாக்கில் - இன்றிலிருந்து 3450 ஆண்டுகளுக்கு முன்) இஸ்ரவேல் ஜனங்கள் இப்பொழுதுள்ள **இஸ்ரேல், மேற்குக்கரை, காசா பகுதி, யோர்தான் நாட்டின் பெரும் பகுதி** முதலிய நிலப்பரப்பில் குடியேறினார்கள். இதற்கு 2000 ஆண்டுகளுக்குப் பின் தான் (கி.பி. 700-க்குப் பின்னர்) அரபிய முஸ்லிம்கள் என்ற இனத்தவர் தோன்றினார்கள். இஸ்ரவேலர் கானானில் குடியேறிய பொழுது, காசா கரையோரம் **பெலிஸ்தியர்** என்ற ஜாதியார் வந்து குடியேறினார்கள். ஆனால், பெலிஸ்தியர் கி.பி. 1270-ஆம் ஆண்டிலேயே முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிட்டனர் என்று வரலாறு கூறுகிறது. **மகா அலெக்ஸாண்டர்** கானான் நாட்டைப் படையெடுத்து ஜெயித்தபோது அப்பிரதேசத்திற்கு பெலிஸ்தரின் பெயரில் **பிலிஸ்தியா (Philistia)** என்று மறு பெயரிட்டான். **ரோமர்** இப்பகுதியை கைப்பற்றியபோது அதற்கு **பலஸ்தீனா** (Palestine) என்று பெயரிட்டனர். முஸ்லீம் அரபுகள் இப்பகுதியை ஜெயித்தபோது (கி.பி. 6 அல்லது 7-ம் நூற்றாண்டில்) பாலஸ்தீனியர் (பெலிஸ்தியர்) என்ற ஜாதியார் அப்பிரதேசத்தில் இல்லை. கிட்டத்தட்ட 50 அல்லது 60 ஆண்டுகளுக்கு முன் பத்திரிகைகள், யூத மருத்துவமனைகள், இதர அலுவலகங்கள், தொழிற்கூடங்கள் முதலியவை 'பலஸ்தீன்' என்கிற பெயரில் இயங்கி வந்தன. கி.பி. 1948-க்குப்பின்பு, இஸ்ரவேல் நாடு பிரகடனப்படுத்தப்பட்டபோது, யூதர்கள் பலஸ்தீனா என்கிற பெயரை விட்டு விட்டு அவற்றிற்கு **'இஸ்ரேலிய'** அல்லது

**'யூத'** என்கிற பெயர்களை வைக்கத் தொடங்கினார்கள். கி.பி. 1922-1947 வருட காலகட்டத்தில், பல நாடுகளிலும் யூதருக்கு நேரிட்ட தொந்தரவுகளினாலும், ஜெர்மனியில் **ஹிட்லரால்** 60,00,000 யூதர்கள் சித்திரவதைகளுக்குட்பட்டு கொலை செய்யப்பட்டபடியாலும், உலக முழுவதிலும் உள்ள நாடுகளிலிருந்து ஏராளமான யூதர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டில் வந்து குடியேறினார். அப்போது, அரபியருக்கும் யூதருக்குமிடையே கலவரம் உண்டானது. **ஐக்கிய நாடுகள் சபை** (UNO) இப்பிரச்சினையை தீர்க்க முயற்சித்தது. யூதர்கள் 1948 மே மாதம் 14-ம் தேதி, ஐநா சபை தங்களுக்குப் பிரித்துக் கொடுத்த பாகத்தை **இஸ்ரேல்** என்ற நாடாகப் பிரகடனப்படுத்தினார்கள்.

1948-ம் ஆண்டு மே 15-ம் தேதி **அரபு நாடுகள் (லீபனோன், சீரியா, யோர்தான், அரேபியா, எகிப்து)** இஸ்ரேல் நாட்டின்மீது யுத்தம் தொடுத்தனர். ஆனால், ஆச்சரியமான பிரகாரம், கர்த்தருடைய நடத்துதலினால் யூதர் ஜெயமடைந்தனர். ஐந்து நாட்டுப் படைகளும் பின் வாங்கினவுடனே, யூதர்கள், அவர்கள் பிடித்த பிரதேசத்தின் எல்லைகளை மூடிவிட்டனர். யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் தங்களை பாதுகாத்துக்கொள்வதற்காக அங்கிருந்து வெளியேறிய அரபியர்களுக்கு திரும்பவும் உள்ளே வரமுடியாமல் போயிற்று. இவர்கள் **'பாலஸ்தீனிய விடுதலை இயக்கம்'** என்கிற அமைப்பின் மூலமாக, 1947-ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை மூலமாக தங்களுக்கு பிரித்து கொடுக்கப்பட்ட பகுதி நிலத்திற்காக தற்போது போராடி வருகின்றார்கள். பாலஸ்தீனியர்கள் என்று கூறிக்கொள்ளும் இவர்கள் **அரபிய முஸ்லிம்களே.** இவர்கள் இஸ்ரவேலருடன் சமாதானமாக வாழ வேண்டும் என்பதே உலக மக்களின் எதிர்பார்ப்பாகும்.

எல்லா சூழ்நிலைகளிலும் தேவன் தமது ஜனங்களை இன்றைய நாள் வரைக்கும் பாதுகாத்து நடத்தி வருவது ஆச்சரியமான உண்மையல்லவா?

## இந்தியா - பலஸ்தீனா (ஒரு நிலப்பரப்பு ஒப்பீடு)



# இஸ்ரவேல் அரசும், அண்டை நாடுகளும்



# இன்றைய இஸ்ரவேலின் அண்டை நாடுகள்




1. லீபனோன்
2. சீரியா
3. யோர்தான்
4. ஈராக்
5. குவைத்
6. பஹ்ரீன்
7. கத்தார்
8. ஐக்கிய அரபு எமிரேட்ஸ்
9. ஓமன்
10. தென் யேமன்
11. வட யேமன்
12. சவூதி அரேபியா
13. சோமாலியா
14. ஜிபூதி
15. சூடான்
16. எகிப்து
17. லிபியா
18. டூனீஷியா
19. அல்ஜீரியா
20. மொராக்கோ
21. மாரிடானியா
22. நாட்டுக்காகப் போராடிக்கொண்டிருக்கும் பலஸ்தீனிய விடுதலை இயக்கம்.

▨ அரபிய முஸ்லிம் நாடுகள்

■ இஸ்ரேல் நாடு

# இஸ்ரவேல் - அரபிய நாடுகள் — Bible Lands To-day



# Notes

Notes

# வேதாகம கையேடு



பைபிள் என அழைக்கப்படும் திருமறை நமக்கு ஆன்மீக வழிகாட்டியான ஒரு புனித நூல் மட்டும் அன்று; இது ஒரு மாபெரும் வரலாற்று நூலும் ஆகும். தேவனால் மனிதர்களுக்கு அளிக்கப்பட்ட நெறிமுறைகளை அவர்கள் கடைப்பிடிக்காமல் வாழ்ந்ததன் மூலம் அவர்கள் சந்தித்த பேராபத்துகளை விளக்கி, நமக்கு எச்சரிப்பை அது அளிக்கிறது. ஆனால், கருணைக் கடலாம் நமது தேவன், பாவம் செய்த மனுகுலத்தை மீண்டும் மீண்டுமாக தேடி வந்து, அவர்கள் மீது தமது அன்பைப் பொழிந்து கொண்டேயிருக்கிறார் என்பதும் இதில் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்று உண்மையாகும்.

வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய நிகழ்வுகள், அவை நடைபெற்ற நாடுகள், தேசப்படங்கள் உட்பட அநேக அரிய தகவல்களை உள்ளடக்கிய ஒரு பொக்கிஷ பெட்டகமாகிய இப்புத்தகம் அனைவருக்கும் ஆசீர்வாதமான வழிகாட்டியாக இருக்க தேவன் அருள் புரிவாராக.



Divine Words